# நாடோடி

---

# இதுவும் ஒரு பிரகிருதி

பிரசுரம்

நாடோடி

தியாகராயநகர் :: சென்னை 17

முதற் பதிப்பு பிப்ரவரி 1944
இரண்டாம் பதிப்பு ஏப்ரல் 1947

விலை ரூபாய் மூன்று

கபீர் அச்சுக்கூடம்
திருவல்லிக்கேணி, MS. 524.
காடோடி MS. 120

# ஆச்சரியம் வேண்டாம்!

இந்தப் புத்தகத்தைப் படித்துவிட்டு, இந்தப் புத்தகத்தில் உள்ள கட்டுரைகள் இவ்வளவு நன்ருக எப்படி அமைந்தன என்று ஆச்சரியப் படாதீர்கள்!

இந்தப் புத்தகத்தில் உள்ள கட்டுரைகள் நான் "பிழைக்கும் வழி" என்னும் புத்தகத்தை எழுதுவதற்கு முன் எழுதியவை. அதாவது நன்ருக வேலை செய்தால் சம்பள உயர்வு கிடைக்கும் என்று நான் பயித்தியக்காரத் தனமாக நினைத்துக்கொண்டிருந்த காலத்தில் எழுதியவை. அதனுல்தான் கட்டுரைகள் ஒன்றையொன்று தூக்கி அடிக்கின்றன.

நாடோடி காரியாலயம்
16-4-47

நாடோடி

என் கட்டுரைகளில் மட்டும்
இன்றி என் வாழ்க்கையிலும்
தோன்றி மறைந்த

சுந்தரிக்கு

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| வாயாடி வராகசாமி | ... | 9 |
| ஐயர்வாள் | ... | 18 |
| அடுத்ததெரு அண்ணுமுத்து | ... | 28 |
| கணக்குன்னு கணக்குத்தான் | ... | 38 |
| நாகலிங்கம் பிள்ளை | ... | 48 |
| குட்டிபோட்ட பூனை | ... | 56 |
| 'கஜினி முகம்மத்' | ... | 64 |
| பகவத் கிருபை | ... | 73 |
| குண்டுத் தாத்தா | ... | 82 |
| ஜம்பு | ... | 91 |
| சாப்பாட்டு ராமன் | ... | 99 |
| சாமண்ணு | ... | 107 |
| குல்லாப் பேர்வழி | ... | 116 |
| பயங்கராச்சாரியார் | ... | 124 |
| எங்கள் மாமா | ... | 132 |
| நடராஜய்யர் | ... | 139 |
| இவாளைத் தெரியுமோ! | .... | 147 |
| தாஸானு தாஸர் | ... | 153 |

## நாடோடி எழுதிய நூல்கள்

நாடகமே உலகம்
பிழைக்கும் வழி
இதுவும் ஒரு பிரகிருதி
ஒரு நாள், கூத்து
அட பரமசிவா!
எங்கள் குடும்பம் பெரிது!
படித்த பெண் வேண்டாம்!
ஹே! அனுராதா!
என்னைக் கேளுங்கோன்னு!
ஏழையாவது எப்படி? (அச்சில்)

# வாயாடி வராகசாமி

அப்பொழுது தான் காப்பி சாப்பிட்டு விட்டுப் பேப்பர் படிக்கலாம் என்று உட்கார்ந்தேன். வாசலில் யாரோ என்னை சத்தம் போட்டுக் கூப்பிடும் குரல் கேட்டது. பெயரைச் சொல்லிக் கூப்பிட்டதோடு, அது 'அடா' என்று ஒரு அடை மொழியையும் சேர்த்துக் கூப்பிட்டது. "யார் இது, இப்படிக் கூப்பிடுகிறது!" என்று நினைத்துக் கொண்டு எழுந்த போது என் முதுகில் யாரோ பலமான குத்து ஒன்று விட்டார்கள். திரும்பிப் பார்த்தால் என் பால்ய நண்பன் வாயாடி வராகசாமி!

"என்னடா பழி! உன்னை எத்தனை நாழியடா வாசலிலிருந்தே தொண்டை கிழியக் கத்திக் கூப்பிடுகிறது? காது கீது செவிடாய்ப் போய் விட்டதா, என்ன?" என்று சொல்லிக் கொண்டே என் வயிற்றில் ஒரு குத்து விட்டான்.

"வாடாப்பா, வா. வருகிற போதே யம கிங்கரனாட்டமா வருகிறாயே" என்று நான் வராகசாமியை வரவேற்று, பக்கத்தில் இருந்த நாற்காலியில் உட்காரச் சொன்னேன்.

வராகசாமி என்னுடன் பத்தாவது வகுப்பு வரையில் சேர்ந்து வாசித்தவன். அவன் பெரிய

வாயாடி யாதலால் அவனை எல்லாரும், "வாயாடி வராகசாமி" என்று கூப்பிடுவது வழக்கம். அதற்காக அவன் கோபித்துக் கொள்வது கிடையாது. "எல்லாம் இந்தக் காலத்தில் வாய் இருந்தால் தான் பிழைக்கலாம்" என்பான். படிப்பை நிறுத்தினதும் பம்பாய்க்கோ, எங்கோ வேலைக்குப் போய் விட்டான்.

பள்ளிக்கூட நாட்களில் நானும் அவனும் மிகவும் சிநேகிதம். ஆள் அப்பொழுதே வாட்ட சாட்டமாக வளர்ந்திருப்பான். அப்பா ஒரு போலீஸ் இன்ஸ்பெக்டர். அப்பாவின் குதிரை மேல் ஏறி வெப்பலில் ஊர் சுற்றுவான். இவனுக்குப் படிப்பைப் பற்றித் துளிகூடக் கவலை கிடையாது. இவனைக் கண்டால் எல்லா வாத்தியார்களுக்கும் நடுக்கம். பையன்களுக்கும் அப்படித்தான். பரீட்சை சமயத்தில் மாத்திரம் எப்படியோ பரீட்சையில் என்னென்ன கேள்விகள் கேட்கப் போகிறார்கள் என்று தெரிந்து கொண்டு விடுவான். நான் பரீட்சைக்கு மும்மரமாக வாசித்துக் கொண்டிருக்கிற சமயம் பார்த்து வருவான்.

"டேய் பழி! என்னமோ ராப்பகலாகக் கதறு, கதறு என்று கதறுகிறாயே! இந்தக் கேள்விக்குப் பதில் சொல், பார்க்கலாம்" என்று ஒவ்வொரு கேள்வியாகக் கேட்டுப் பதில் தெரிந்து கொண்டு விடுவான். அதை ஞாபகம் வைத்துக் கொண்டு எழுதி, பரீட்சையில் தேறியும் விடுவான்.

எனக்கும் அவனுக்கும் ரொம்ப சிநேகிதம் என்று சொன்னேனா? அதைத் தெரிவிப்பதற்கு அவனுக்கு ஒரு வழி தான் தெரியும். நினைத்தால் முதுகில் ஒரு குத்து, இடுப்பில் ஒரு குத்து, வயிற்றில் ஒரு குத்து—இந்த மாதிரி என்னைக் குத்திக் கொண்டே யிருப்பான்.

இடுப்பில் ஒரு பலமான குத்து விழுந்தது! "என்ன பழி! என்ன யோசனை பண்றே! இவன் எங்கேடா வந்து சேர்ந்தான் என்று யோசனை பண்றயோ? அதெல்லாம் உன்னை லேசில் விடறதாக இல்லை. என்னடா, காப்பி கீப்பி கிடையாதா!" என்றான் வராகம்.

"இந்தாப்பா! பழைய ஞாபகத்தை வைத்துக் கொண்டு, இந்த மாதிரி நீ அடிக்கொரு குத்துக் கொடுத்துக் கொண்டிருக்காதே. என்னால் தாங்க முடியாது. அதோடு என் ஆத்துக்காரியும் உன்னைக் கோபித்துக் கொள்வாள்" என்று வேடிக்கையாகச் சொன்னேன்.

இதற்குள் சுந்தரி வராகசாமி பண்ணும் லூட்டியையும் அட்டகாசத்தையும் பார்த்து விட்டு, அவளாகவே வராகசாமி எனக்கு மிகுந்த ஆப்த நண்பன் என்று தீர்மானித்து, ஒரு டம்ளரில் காப்பியைக் கொண்டு வந்து அவனுக்கு எதிரில் வைத்து விட்டு நகர்ந்தாள்.

"யாரடா இது! உன் ஆத்துக்காரியா? நீ ரொம்ப அதிர்ஷ்டக்காரன் தாண்டா? நீ இருக்

கிற அழகுக்கு இவளை யாரடா உனக்குக் கல்யாணம் பண்ணி வைத்தார்கள்? கிளியை வளர்த்துப் பூனை கையில் கொடுத்தார்கள் என்று சொல்வார்களே, அது போலல்லவா இருக்கிறது? அவளுக்கு இருக்கிற புத்தி கூட உனக்கு இல்லையேடா! என்னடா ஒத்தன் வந்திருக்கானே, அவனுக்குக் காப்பி கொடுக்கணுமே என்று உனக்குத் துப்பு இல்லை, பார்த்தாயா?" என்றான்.

காப்பியைக் குடித்ததும், அவன் பார்வை அங்கு விளையாடிக் கொண்டிருந்த என் பெண் குழந்தையின் மீது சென்றது.

"உன் பொண்ணு? என்னடா ஒரு நகையைக் காணோம்! எல்லாம் பீங்கானும், கண்ணாடியுமாகப் போட்டிருக்கிறாய்? சம்பாதிக்கிற பணத்தையெல்லாம் என்னடா பண்ணுகிறாய்? அப்படியே பாங்கிக்கு அனுப்பி விடுகிறாயா?"

"பாங்கிக்காவது, அனுப்பவாவது? அது தான் ஒண்ணு வந்தால் இரண்டு செலவாகிறதே!"

"டேய், யாரு கிட்டேடா கதை விடுகிறாய்? நீ தான் அப்பொழுது முதற்கொண்டே ஒரு பெரிய சுங்கான் செட்டி ஆச்சேடா. எல்லாம் ஒத்தருக்கும் தெரியாமல் வச்சிருப்பாய். ஆத்துக்காரிக்காவது ஏதாவது பண்ணிப் போட்டிருக்காயா, அதுவும் இல்லையா?"

**வ**ராகம் தான் வாயாடி என்று சொன்னேனா? எதைப் பற்றி வாயாடலாம், எதைப் பற்றி வாயா

டக் கூடாது என்ற தராதரம் அவனிடம் துளி கூடக் கிடையாது. 'சம திருஷ்டி' வேண்டும் என்று பெரியவர்கள் எல்லாம் சொல்லுகிறார்கள் அல்லவா? அந்த சம திருஷ்டி, பேச்சு விஷயத்தில் வராகத்துக்கு உண்டு.

ஆகவே அந்த சமயம் சுந்தரி ஏதோ காரியமாக அங்கு வரவே, "ஏனம்மா, கல்யாணம் ஆகி பத்து வருஷம் இருக்கும் போலே இருக்கே? ஏதாவது நகை, கிகை பண்ணிப் போட்டிருக்கானா, இல்லையா? பார்த்தால் ஒன்றும் பண்ணிப் போடவில்லை போல் தோன்றுகிறதே!" என்று கேட்க ஆரம்பித்தான்.

சுந்தரி வெட்கப் பட்டுக் கொண்டு உள்ளே போக ஆரம்பித்தாள்.

"என்னம்மா வெட்கப்படறே! என்னிடம் பேசினால் ஒண்ணும் குத்தம் இல்லை யம்மா. நான் உங்காத்துக்காரருக்கு ரொம்ப வேண்டியவனாக்கும்! ஏது, நீங்க ஒண்ணும் இவனை அதிகாரம் பண்றது இல்லை போலிருக்கிறது. அது தான் பயல் கொழுத்துப் போய்விட்டான். அப்பப்ப ஏதாவது போட்டுக் கொண்டு இருக்கணும் அம்மா. என் ஆத்துக்காரி என்னடான்னா, யார் இருக்கா, எவா இருக்கா, என்று பார்க்கமாட்டாள். அவள் அதிகாரத்துக்குப் பயந்துகொண்டு நான் வீட்டிலே அதிகமாகவே தங்குகிறதில்லை யென்றால் பார்த்துக் கொள்ளுங்களேன்!"

"சரிப்பா, இத்தனை நாளாக என்ன பண்ணினே, இப்ப என்ன பண்ணிண்டிருக்கே? அது எல்லாம் ஒண்ணும் சொல்லவில்லையே" என்று கேட்டு நான் பேச்சைத் திருப்பினேன்.

"சொல்றதுக்கு என்னடா இருக்கு? நான் பார்க்காத ஆபீஸ் கிடையாது. நான் செய்யாத வேலை கிடையாது. வடக்கே பம்பாய், கல்கத்தா, டில்லி, அலகாபாத் ஆகிய எல்லா ஊர்களிலும் வராகசாமி என்றால் பயமாக்கும்! எல்லாப் பசங்களையும் கண்ணில் விரலை விட்டாக்கும் ஆட்டி வைத்தேன்........"

"சரி, இப்பொழுது ஏதாவது உத்தியோகத்தில் இருக்கிறாயா, இல்லையா?

"எந்த சுய மரியாதை யுள்ளவன்டா இந்தக் காலத்தில் இன்னொருத்தனுக்குக் கீழே வேலை பார்ப்பான்? கடைசியாகக் கல்கத்தாவில் ஒரு பாங்கில் இருந்தபோது, ஒரு நாளைக்கு ஐந்து நிமிஷம் லேட்டாய்ப் போய்ட்டேன். அதற்காக துரை என்னவோ சொன்னான். 'போடா, நீயுமாச்சு, உன் உத்தியோகமு மாச்சு என்று வந்து விட்டேன்."

"சரி, இப்போ என்ன பண்ணப் போறே?"

"என்ன பண்ணுகிறதாவது? இனிமே ஒத்தனுக்குக் கீழே கை கட்டி வேலை செய்வதில்லையென்று தீர்மானம் பண்ணி விட்டேன். இப்பொழுது ஒரு பெரிய 'ஸ்கீம்'வச்சிருக்கேன். இதன் பிரகா

ரம் மாசம் ஆயிரம் ரூபாய் சம்பாதிக்க வழி இருக்கிறதாக்கும்."

"அது என்னடா, அப்பா, அவ்வளவு பெரிய ஸ்கீம் ?"

"அதெல்லாம் உனக்குச் சொன்னால் ஒன்றும் புரியாதுடா."

"சரி, நீ பெரிய பணக்காரனாகப் போகப் போகிறாய் என்று சொல்லு. பணக்காரனாகப் போன பிறகு நம்மை யெல்லாம் கவனிப்பாயா ?"

"கவனிக்காமல் என்னடா ? இப்பொழுது முதலில் நீ நம்மை கவனி பார்க்கலாம். ஒரு ஐந்து ரூபாய் இருந்தால் இப்படித் தள்ளுடா. ஒரு அவசரமாக வேணும். அதுக்காகத்தான் நான் உன்னைத் தேடி வந்ததே."

"ஆனால் இப்ப நம்ம கையில் சுத்தமாய்ப் பணம் ஒன்றும் கிடையாதுடா. இருந்தால் நான் கொடுக்க மாட்டேனா ?"

"அட தடியா! எப்பொழுது பார்த்தாலும் இந்த அழுகைப் பாட்டுத்தானா! உன் பர்ஸை எங்கேடா வச்சிருக்கே சொல்லு. நானே எடுத்துக் கொள்கிறேன்" என்று சொல்லிக் கொண்டே எதிரில் சுவரில் மாட்டி யிருந்த என் சட்டையை எடுத்தான். அவன் அதிர்ஷ்டம் அதில் என் பர்ஸ் இருந்தது. அதிலிருந்து ஆறு ஐந்து ரூபாய் நோட்டுகளை எடுத்தான்.

"டேய் கையில் பணம் வச்சிண்டே தானே இல்லேன்னு சொன்னே ? ஏன், வராகம் எடுத்துண்டு ஓடிப் போய் விடுவான் என்று நினைச்சயா ?"

"அதுக்கு இல்லையப்பா. அது வீட்டு வாடகைக்காக வச்சிருக்கேன். அவன் இன்னிக் காலையில் வரேன் என்று சொல்லி யிருக்கான்."

"எல்லாம் அவனுக்கு அப்புறம் கொடுத்துக்கலாண்டா. அவன் ஏதாவது சொன்னால் என் கிட்டச் சொல்லு. நான் இரண்டு குத்து விட்டு அனுப்புகிறேன்" என்று சொல்லிக் கொண்டே எனக்கு ஒரு குத்து விட்டான். பிறகு ஒரு ஐந்து ரூபாய் நோட்டை எடுத்துக் கொண்டு, மீதி நோட்டுகளைப் பர்ஸில் போட்டு, அதைச் சட்டைப் பையில் வைத்தான்.

"டேய் பழி! சரியாய்ப் பார்த்துக்கோ. ஐந்து ரூபாய் நோட்டுத்தான். எல்லாத்தையும் எடுத்துண்டு போய்ட்டேன் என்று பின்னால் சொல்லாதே !"

"அது கிடக்கட்டும். இப்பொழுது போய்விட்டுச் சாப்பிட வருவாயோ, இல்லையோ ?"

"அது இருக்கட்டும்டா. வந்தால் இல்லேன்னு சொல்லப் போகிறாயா ?"

"அதற்கு இல்லை, அப்பா. சமைச்சு வீணாகப் போய்விட்டால்—"

"அட பழி! ரொம்ப சுஷ்கம் பிடிக்க ஆரம்பிச்சுட்டே போலிருக்கிறதே! பதினொரு மணி வரை

யிலும் பாரேண்டா! அதுக்கு மேலே வல்லேன்னு வல்லேன்னு நினைச்சுக்கோ" என்று சொல்லி விட்டுப் போய் விட்டான்.

அவ்வளவு தான். அப்பொழுது போனவன் போனவன் தான். போய் இரண்டு மாதம் கழித்து இன்று தான் அவனிட மிருந்து பின் கண்ட கடிதம் வந்தது:

"லாகூர்.

டேய் பழி,

உன் ஐந்து ரூபாயைத் தூக்கிக் கொண்டு போய்விட்டேன் என்று நினைக்காதே! இப்பொழுது நான் லாகூரில் வேலை பார்க்கிறேன். சீக்கிரம் இந்த வேலைக்கும் தலையை முழுகி விட்டு வரப் போகிறேன். அப்பொழுது உன்னைப் பார்க்க வருகிறேன்.

வராகம்."

இந்தக் கடிதத்தைப் படித்து முடித்ததும் வராகம் என் முதுகில் ஒரு குத்து விட்டது போல் இருந்தது!

என்ன பண்ணலாம்! இதுவும் ஒரு பிரகிருதி!

# ஐயர்வாள்

உலகத்தில் அவனவன் வேலை தான் அவனவனுக்குப் பெரிதாயிருக்கிறது. அதிலும் அந்த வேலையை அவன் செய்கிறது போல் பிறரால் செய்ய முடியாது என்பது அவன் எண்ணம்.

அன்றைக்குப் பாருங்கள், பஸ்ஸில் போய்க் கொண்டிருந்த போது ஒரு வருஷமாகப் பார்க்காத என் நண்பன் ஒருவனைச் சந்தித்தேன். அவன் தென் இந்திய ரயில்வேயில் ஒரு 'புக்கிங் கிளார்க்'. அடிக்கொரு தடவை அவன் தன்னை "ஐயர்வாள்", "ஐயர்வாள்" என்று தான் குறிப்பிட்டுக் கொள்வான். "ஐயர்வாள் அங்கு போயிருந்தார், ஐயர்வாள் இங்கு போயிருந்தார்" என்று தான் இருக்கும் அவன் பேச்சு. அதற்காக அவனை நாங்கள் எல்லாரும் 'ஐயர்வாள்' என்று தான் கூப்பிடுவது.

"என்னடா, ஐயர்வாளையே கண்ணில் காணோம், ஐயர்வாள் சௌக்கியந்தானா?" என்று நான் விசாரித்தேன்.

"ஐயர்வாளுக்கு என்ன? எப்பொழுதுமே சௌக்கியந்தான்! அது இருக்கட்டும். ஏண்டா ஒரு வருஷமா ஒரு கடுதாசு கூடப் போடல்லே?"

"எங்கேடா ஒழிகிறது? என் ஆபீஸ் வேலை தான் எனக்குச் சரியாயிருக்கிறதே. அதுவும்

என் ஆபீசில் நான் செய்கிற வேலையை என் ஒருவனால் தான் செய்ய முடியும்."

"என்னடா பிரமாதப் படுத்தறயே? ஒரு நாளைக்கு என் வேலையைப் பார்க்கச் சொன்னால் என்ன சொல்லுவாயோ?"

"அப்படி என்னடாப்பா உனக்குக் கலெக்டர் உத்தியோகம் தட்டுக் கெட்டுப் போகிறது? புக்கிங் கிளார்க் உத்தியோகம் தானே? கேட்ட டிக்கட்டை எடுத்துக் கொடுக்க வேண்டியது. இதில் என்ன பெரிய சாமர்த்தியம் இருக்கிறது?"

"இதற்குத் தான் உன்னை விஷயம் தெரியாதவன் என்கிறது. ஒரு நாளைக்கு என் ஸீட்டில் உட்கார்ந்து பார்த்தால் தெரியும், சாமர்த்தியம் வேண்டுமா, வேண்டாமா என்று. அதிலும் என்னை, என்ன, பாக்கிப் பேர் போல் நினைத்துக் கொண்டாயோ? புக்கிங் கிளார்க் என்றால் எல்லாரும் புக்கிங் கிளார்க்ஆகி விடுவார்களா? நான் டிக்கட்டு கொடுப்பது போல் கொடுப்பதற்கு இனி மேல் எவனாவது பிறந்து தான் வரணும்."

"ஊம்."

"வண்டி புறப்படுவதற்கு அரை மணி நேரத்திற்கு முன்னாலிருந்தே டிக்கட்டுகள் கொடுக்க வேண்டுமென்று தான் ரூல். ஆனால் அந்த ரூல் எல்லாம் ஐயர்வாளிடம் செல்லுமா? ரயில் வருவதற்கு ஐந்து நிமிஷத்துக்கு முன்னால் தான் ஐயர்வாள் கதவைத் திறப்பார். எத்தனை

கூட்டம்தான் இருக்கட்டுமே. அந்த ஐந்து நிமிஷம் என்றால் 'கரெக்'டாக ஐந்து நிமிஷம் தான்—''

"இதற்காக ரயில்வே அதிகாரிகள் கோபித்துக் கொள்ளமாட்டார்களா ?''

''கோபித்துக் கொண்டால், போடா உன்வேலை யுமாச்சு, நீயுமாச்சு' என்று ராஜிநாமா கொடுத்து விட்டு வந்து விடுகிறேன். அப்புறம் ஐயர்வாளிடம் தான் அவர்கள் வந்து தொங்க வேண்டும். ரயில் வேக்காரனுக்கு என்ன, வேலை ஆகவேண்டியது தானே கணக்கு? எல்லாரும் அரை மணி நேரத்தில் செய்யத் திண்டாடுகிற வேலையை ஐயர்வாள் தான் ஐந்து நிமிஷத்தில் செய்து முடித்து விடுகிறாரே ?''

"ஊம், அப்படியா ?''

"அப்படித்தான். ஒரு நாள் என் ஸ்டேஷ னுக்கு வந்து பார்த்தால் நீயே சொல்லுவாய். ஜன் னல் ஐந்து நிமிஷத்துக்குத் திறந்து வைத்திருப் பேனே, அப்பொழுது டக்கு, டக்கு, டக்கு, டக்கு என்று சத்தம் கேட்டுக் கொண்டே யிருக்கும். ஒரு செகண்டு நடுவில் நிற்கணுமே கிடையாது ! அப்படி யே கேட்க, கேட்க, டிக்கட்டை எடுத்து அடித்துக் கொடுத்துக் கொண்டே யிருப்பேன். இந்த மாதிரி டக்கு, டக்கு, டக்கு, டக்கு என்று சப்தம் ஆரம் பித்ததோ இல்லையோ, மற்ற ஸ்டேஷன் உத்தி யோகஸ்தர்கள் அதைக் கொண்டே வண்டி வரு வதற்கு ஐந்து நிமிஷம் இருக்கிறது என்று தெரிந்து கொண்டு விடுவார்கள்.

"டிக்கட் எடுப்பதில் தான் ஏதாவது தட்டுக் கெடும் என்கிருயா? ஊஹூம், அதெல்லாம் ஐயர்வாளிடம் பேசப்படாது. 'சாமி அச்சரப் பாக்கம் அஞ்சரை டிக்கட்டு' என்பான் ஒருவன். அப்படி ஒரு பக்கம் ஐயர்வாள் கையை வைப் பார். எண்ணி வைத்தாற் போல் ஐந்தரை டிக்கட்டு கையில் வரும். 'சாமி பூதலூர் மூணரை டிக்கட்டு' என்பான் இன்னெருவன். அடுத்த செகண்டு பூத லூர் டிக்கட்டு கையில் வந்து நிற்கும். எண்ணிப் பார்க்கிற வழக்கமே ஐயர்வாளிடம் கிடையாது. அவன் டிக்கட்டைக் கேட்டதும், ஐயர்வாள் டிக்கட் இருக்கும் பக்கம் கை நீட்டுவார். டிக்கட் தன்னைப் போல் எத்தனை கேட்டானே அத்தனை கையில் வந்து நிற்கும். ஐயர்வாள் கைக்கு அத்தனை 'ட்ரெயினிங்.'"

"தேவலையேடா! இத்தனை சாமர்த்தியம் உனக்கு எப்படியடா வந்தது?"

"எப்படியோ வந்தது! உனக்குச் சந்தேகமா யிருந்தால் ஒரு காரியம் செய். நான் என் கண்ணைக் கட்டிக் கொள்கிறேன். ஒரு சீட்டுக் கட்டை என் கையில் கொடு. உனக்கு எத்தனை சீட்டு வேணுமோ சொல்லு. மறு கணம் அப்படியே—எண்ண கிண்ண மாட்டேன்—இந்தா என்று எடுத்துக் கொடுப்பேன். எண்ணிப் பார்த்தால் நீ கேட்ட எண்ணிக்கை இருக்கும்."

"ஊம்."

"டிக்கெட் தான் அப்படி எடுக்கிறேன் என்று ஆச்சரியப்படாதே. டிக்கட்டுப் பணம் கணக்குப் பார்த்துக் கொடுக்கிறேனே, அதைப் பார்த்தால் மூர்ச்சையாகி விடுவாய். பள்ளிக் கூடத்தில் வாசிக்கும் போது கணக்கு வரவில்லையின்னு அந்தக் கிளி மூக்கு வாத்தியார் என்னை என்ன அடி அடித்திருக்கும்? எத்தனை தடவை பெஞ்சி மேலே நிறுத்தி வைத்திருக்கும்? எத்தனை 'இம்போசீஷன்' எழுதச் சொல்லி யிருக்கும்? இப்பொழுது அது என்னைப் பார்த்தால் மூக்கு மேல் விரலை வைக்கும்."

"அப்படி என்னடா நீ அதிசயமாய் கணக்குப் பார்க்கிறே? கொடுக்கிற பணத்திலே டிக்கட் பணத்தைக் கழித்துக் கொண்டு மிச்சத்தைக் கொடுக்க வேண்டியது தானே? இதில் என்ன பிரம்ம வித்தை இருக்கிறது?"

"அது தான் சொன்னேனேடா. நீ ஒரு நாள் வந்து பார்த்தால் தான் உனக்கு விஷயம் தெரியும். இடது கை மாட்டில் டக்கு, டக்கு, டக்கு என்று டிக்கட்டை எடுத்து அடித்துக் கொண்டே யிருக்கும். வலது கை மாட்டில் சில்லறை எடுத்துக் கொண்டே யிருக்கும். ஒவ்வொருத்தன், ஒவ்வொரு ஊருக்கு 'மூன்றரை டிக்கட் கொண்டா,' 'நாலரை டிக்கட்டு கொண்டா' என்றெல்லாம் கேட்டுக் கொண்டிருப்பான். ஒருவன் பத்து ரூபாய் நோட்டைக் கொடுப்பான், இன்னொருவன் நூறு ரூபாய் நோட்டைக் கொடுப்பான். ஆனல் டிக்கட்டு என்ன ஆச்சு,

பாக்கி என்ன கொடுக்கணும் என்றெல்லாம் மனசில் கணக்குப் போட்டுப் பார்ப்பேன் என்று நினைக்கிருயோ? கிடையாது. ஐயர்வாள் கைக்கே கணக்குத் தெரியும். அதுவாகவே ஒருவனுக்கு மூன்றே முக்காலணு, இன்னொருவனுக்குப் பதினைந்தே காலணு என்று சில்லறை எடுத்து வைக்கும். கணக்கு சரியாயிருக்கும்."

"பள்ளிக்கூடத்தில் கணக்கில் பெரிய மக்குத் தடியனுய் இருந்தாயே. இப்பொழுது பெரிய புரொபசர் ஆகிவிட்டாய் போலிருக்கிறது!"

"புரொபசரா? அவன் என்னத்தையடா கண்டான்? பேப்பர்லே வேணுமான எக்ஸ், ஒய், இஸட் என்று கணக்குப் போட்டுச் சொல்வான். அவனை ஒரு நாள் புக்கிங் கிளார்க்காய்ப் போட்டுப் பார்த்தால் தெரியும், அவன் கணக்குப் போடும் லட்சணம்! கிளிமூக்குத் தான் ஒரு ஐந்து நிமிஷம் என் வேலையைச் செய்து பார்க்கட்டுமே, அதன் கணக்கு யோக்யதையைப் பார்த்து விடுகிறேன்."

"சரி, ரயில்வே ஆபீசையே நீ தான் தாங்கிக் கொண்டிருக்கிருய் என்று சொல்லு!"

"சந்தேகமில்லாமல்! ஐயர்வாள் ஒரு நாள் வரவில்லையானல், அங்கே ஸ்டேஷனே திண்டாடிப் போகும். வேறு ஒன்றும் வேண்டாம். எங்கேயாவது தேர், திருவிழா என்று நடக்கட்டும். ஐயர்வாள் இல்லாமல் காரியம் நடக்காது. ஸ்ரீரங்கத்தில் வைகுண்ட ஏகாதசியா?—சரி ஐயர்வாளை அனுப்பு ஸ்ரீரங்கத்

திற்கு. காஞ்சீபுரத்தில் கருட சேர்வையா ?—சரி, ஐயர்வாளை அனுப்பு காஞ்சீபுரத்திற்கு. இந்த மாதிரி தான் இருக்கு. ஒரு தடவை ஐயர்வாள் மாட்டேன் என்று சொல்லட்டும், அப்பொழுது தெரியும் அவர் கள் திண்டாட்டம்.

"இப்படித்தான் போன வருஷம் ஐயர்வாளுக்கு 'பிரமோஷன்' கொடுக்கிறதற்கு ஏதோ தடங்கல் பண்ணினன். அந்த சமயம் சிதம்பரத்தில் ஆருத்ரா தரிசனம். அந்த சமயம் பார்த்து ஐயர்வாள் மெடி கல் லீவ் போட்டு விட்டார். சிதம்பரத்திற்கு அனுப்பு வதற்கு ஐயர்வாளை விட்டால் வேறு ஆள் கிடையாது. உடனே ஏஜெண்டுக்கு தந்தியும் டெலிபோனும் பறந்தன. கடைசியில் ஏஜெண்டே ஐயர்வாளுக்கு ஒரு தந்தி யடித்தார், லீவை ரத்து செய்து கொள் ளும்படி. 'அதெல்லாம் முடியாது' என்று ஐயர்வாள் பதில் தந்தி யடித்து விட்டார். கடைசியில் ஏஜெண்டே ஸ்பெஷலாக ஓர் ஆளை ஐயர்வாளிடம் அனுப்பி, சீக்கிரமே அதிகச் சம்பளம் கொடுக்கும் விஷயத்தைக் கவனிப்பதாகச் சொன்னர். அதற்கு மேல் தான் ஐயர்வாள் லீவை ரத்து செய்து விட்டு, சிதம்பரத்திற்குப் போனர்."

"அடேயப்பா! நீ பண்ணும் தடபுடலைப் பார்த் தால் பயமாயிருக்கிறதே! ரயில்வே ஏஜெண்டையே ஆட்டி வைத்து விட்டாயே!"

"பின் என்ன, புக்கிங் கிளார்க் என்றல் கிள்ளுக் கீரை என்று நினைத்து விட்டாயா? சில

பேருக்கு அப்படித்தான் எண்ணம். முன் ஒரு வன் அப்படித்தான் ஹாட்டையும், சூட்டையும் போட்டுக் கொண்டு வந்து டிக்கட் கேட்டான். அவன் ஹாட்டும், சூட்டும் போட்டுக் கொண்டு வந்து விட்டால் நான் பயப்படுவேனு, என்ன ? கொஞ்சம் மரியாதைக் குறைவாகப் பேசினுன். 'போடா, டிக்கட் கொடுக்க முடியாது' என்று சொல்லி விட்டேன். ஸ்டேஷன் மாஸ்டரிடம் போய் ரிப்போர்ட் பண்ணினுன். ஸ்டேஷன் மாஸ்டர் வந்து கெஞ்சிக் கேட்டார். முடியாது என்று கண்டிப்பாய்ச் சொல்லி விட்டேன். கடைசியில் வேறு யாரை விட்டோ டிக்கட் வாங்கிக் கொடுக்கச் சொன்னுன் போலிருக்கிறது."

" அப்படியா ?"

" அப்படித்தான். புக்கிங் கிளார்க் என்ருல் ஏதோ இளப்பம் என்றுதான் நீ கூட நினைத்துக் கொண்டிருக்கிருய். ஆனல் புக்கிங் கிளார்க் ஒருவன் இல்லா விட்டால் தெரியும் நீங்கள் படும் பாடு. ரயில் தான் ஓடுமா, வியாபாரம்தான் நடக்குமா, சாமான்கள் தான் ஊர் விட்டு ஊர் போகுமா, உன் ஆபீஸ் வேலே தான் நடக்குமா, உனக்குத்தான் உத்தியோகம் இருக்குமா ? சுற்றி வளேத்துப் பார்த்தால் இன்றைக்கு நீ உயிருடன் இருப்பதற்கும் நான்தான் காரணமா யிருக்கும் என்று நினைத்துக் கொள் !" என்று பெருமையாகச் சொன்னுன்.

இது வரையில் இந்த சம்பாஷணையை மிகவும்

ஆவலுடன் கேட்டுக் கொண்டு வந்திருந்தார் பக்கத்தில் இருந்த ஒருவர். அவர் எங்களைப் பார்த்துச் சொன்னார்.

"ஸார், புக்கிங் கிளார்க்குன்னு அப்படித்தான் ஸார், இருக்கணும். போன வருஷம் பாருங்கோ, ஏப்ரல் மாசம் கும்பகோணம் ஸ்டேஷனுக்குப் போயிருந்தேன். அங்கே இருந்த புக்கிங் கிளார்க் ஒரு பெரிய அசமஞ்சன் போலிருக்கிறது.

'ஒரு பத்து ரூபாய் நோட்டை நீட்டி விருத்தாசலத்துக்கு ஒரு $2\frac{1}{2}$ டிக்கட்டு கேட்டேன். பத்து நிமிஷம் எங்கெங்கேயோ தேடினான். கடைசியில் விழுப்புரத்திற்கு $3\frac{1}{2}$ டிக்கட்டு கொடுத்தான். டிக்கட்டை கவனிக்கவில்லை. ஆனால் சில்லறை கணக்குச் சரியா யில்லாமல் இருக்கவே, 'என்ன ஸார்! சில்லறை குறைவாய் இருக்கே' என்றேன். 'விழுப்புரத்திற்கு $3\frac{1}{2}$ டிக்கட்டு, நீங்கதான் கணக்குப் பாருங்களேன்?' என்றான்.

"அப்பத்தான் டிக்கட்டைப் பார்த்தேன். 'என்ன ஸார்! விருத்தாசலத்துக்கு $2\frac{1}{2}$ டிக்கெட் கேட்டேன். விழுப்புரத்திற்கு $3\frac{1}{2}$ டிக்கெட் கொடுத்திருக்கிறீர்களே!' என்றேன். டிக்கெட்டை வாங்கிக் கொண்டு, இன்னும் பத்து நிமிஷம் ஏதோ தாமசப் படுத்தினான். கடைசியில் ஒரு வகையாக டிக்கட் கொடுத்தான். அப்பவும் சில்லறை பாக்கி எட்டு அணு குறைவாக இருந்தது. 'என்ன ஸார், எட்டு அணு குறைவாயிருக்கே' என்றேன்.

பணத்தை வாங்கி எண்ணிப் பார்த்தான். கடை சியில் அவன் திரும்பவும் சில்லறை கொடுத்த போது நாலணு அதிகமாக இருந்தது. எனக்கு அவன் பேரில் இருந்த ஆத்திரத்தில் அதைச் சொல்லாமலே ரயிலுக்குப் புறப்பட்டேன். நான் கொஞ்ச தூரம் போயிருப்பேன். 'ஸார்! சில்லறை ஜாஸ்தியாய்க் கொடுத்து விட்டேன் போலிருக்கே' என்று என் னைத் திரும்பவும் கூப்பிட்டனுப்பித்தான். இந்த மாதிரி நான் அவனிடம் வாயாடிக் கொண்டிருந் ததற்குள் வண்டி புறப்பட்டு விட்டது" என்ருர் அவர்.

இதைக் கேட்டதும் எனக்கு என்னமோ மாதிரி இருந்தது. என் பக்கத்தில் உட்கார்ந்து கொண்டு அப்பொழுது என்று ஆகாசத்தைப் பார்த்துக் கொண்டிருந்த ஐயர்வாளைப் பார்த்துக் கர்தோடு, "ஏண்டா போன வருஷம் ஏப்ரல் மாதம் கும்பகோணத்தில் நீ தான் இருந்தே போலிருக்கே" என்றேன்.

ஐயர்வாள் ஏன் பதில் பேசுகிருர்? இதுவும் ஒரு பிரகிருதி!

# அடுத்த தெரு அண்ணுமுத்து

அடுத்த வீட்டு அண்ணுசாமி அய்யர் எச்சற் கையால் காக்காய் ஓட்ட மாட்டார் என்ருல், அடுத்த தெரு அண்ணுமுத்து வெறுங்கையால் கூட காக்காய் ஓட்ட மாட்டான். அத்தனை தாராளம்! அப்படிப்பட்டவன் ஒரு கிராமபோன் பெட்டி வாங்கி யிருக்கிருன் என்ருல் யாருக்குத்தான் ஆச் சரியமா யிருக்காது? ஆகவே அவன் கிராமபோன் பெட்டியைப் பார்த்து விட்டுத்தான் வருவோமே என்று அவன் வீட்டுக்குப் போனேன்.

"என்னடா அண்ணுமுத்து! கிராமபோன் பெட்டி வாங்கி யிருக்காயாமே? என்னிடம் சொல் லவே இல்லையே. எங்கேடா உன் கிராமபோன்?"

"அதோ மேஜை மேலே வைத்திருக்கிறேனே, அது தாண்டா!"

"அதுவா? பழசு போலிருக்கே. சரி, வழக்கம் போல் எங்கேயாவது மலிவாய்த்தான் தட்டியிருப் பாய். ஆமாம், என்னடா கொடுத்தே, அதற்கு?" என்று கேட்டேன்.

ஆனல் இந்த மாதிரி கேள்விக்குப் பதில் சொல்லும் வழக்கம் தான் அண்ணுமுத்துக்குக் கிடையாது. அவன் ஏதாவது ஒரு சாமான் வாங்கி ஞல் அதன் விலையை அவனுகச் சொல்ல மாட்டான்.

இந்த மாதிரி சமயங்களில் அவன் கையாளும் முறையே அலாதி.

“ என்னதான் கொடுக்கலாம், நீயே சொல் லேன், பார்க்கலாம் !” என்றான்.

“ 30 ரூபாய். ”

“ இல்லே. ”

“ 25 ரூபாய் ? ”

“ அதுவும் இல்லே. ”

“ பின்னே 20 ரூபாயா ? ”

“ ஊஹூம், அதுவும் இல்லே. ”

“ பின்னே 15 ரூபாயா ? ”

“ ஊஹூம், இல்லே. ”

“ என்னதான் கொடுத்தாய், சொல்லேன். ”

“ பத்து ரூபாய். ”

“ பத்து ரூபாயா? தேவலேயே! எவண்டா உனக்கு கிராமபோன் பெட்டி பத்து ரூபாய்க்குக் கொடுத்தான் ? ”

“ அப்படியானால் பத்து ரூபாய்க்கு இது மலிவு தான் என்று சொல்லு. ”

“ மலிவா ? கொள்ளே மலிவு என்றால் கொள்ளே மலிவு. ”

“ இதுக்கே இப்படி வாயைப் பிளக்கிறாயே, நான் இன்னும் மலிவாக வாங்கினேன் என்று தெரிந்தால் என்ன தான் செய்வாயோ ? ”

“ இன்னும் மலிவாக வாங்கினாயா ? ”

“ ஆமாண்டா, ஆமாம். பின் உன்னைப்போல்,

கடைக்காரன் கேட்டதை அவிழ்த்துக் கொடுக்கச் சொல்லுகிறாயா, என்ன?"

"சரி, எவ்வளவுதான் கொடுத்தாய், சொல்லேன். ஒரு வேளை உன் முகராசி, கடைக்காரன் உனக்குப் பெட்டியையும் கொடுத்துக் கையிலும் பணம் கொடுத்திருப்பான்."

"அதெல்லாம் இல்லேடா. ஐந்து ரூபாய்க்கு வாங்கினேன்" என்று ஒரு வகையாக விலையைக் கூறினான்.

அண்ணாமுத்துவின் சுபாவம் எனக்குத் தெரியுமாதலால் நான் மேலே தொடர்ந்து கேள்வி போட்டேன்.

"சரி, ரிப்பேர் செலவு என்ன ஆச்சு?"

"அப்படி ஒன்றும் பிரமாதம் ஆகி விடவில்லை. ஸவுண்ட் பாக்ஸ் ஒன்று புதுசாகப் பத்து ரூபாய்க்கு வாங்கினேன். உள்ளே ஸ்பிரிங் ஏதோ அவ்வளவு சரியாக இல்லையாம். அதற்காக ஒரு பத்து ரூபாய் செலவழித்தேன். இன்னும் பெட்டியைக் கொஞ்சம் ஒக்கப் பண்ண வேண்டி யிருந்தது. அதற்கு ஒரு ஐந்து ரூபாய் ஆச்சு. இன்னும் வார்னிஷ் கீர்னிஷ் இல்லையா, அதற்கு ஒரு இரண்டு ரூபாய், அவ்வளவு தான்."

"தேவலையே, மலிவுதான்" என்று அவனுக்காகச் சொல்லி வைத்தேன். இதைக் கேட்டதும் அவன் முகம் மலர்ந்தது.

"சரி, இரண்டு பாட்டு வையேன், கேட்டு விட்டுப் போகிறேன்" என்றேன்.

"கொஞ்ச நாழி தான் இரேன், என்ன அவசரம்! பசங்கள் இரண்டு பேரும் வெளியில் போயிருக்கிருர்கள், வரட்டும்."

"அவர்கள் அப்புறம் கேட்டு விட்டுப் போகிருர்கள். இப்பொழுது எனக்கு இரண்டு பிளேட்டு வை."

"அதற்கு இல்லை. அவர்கள் வரட்டுமே, அதற்குள் உனக்கு என்ன அவசரம்?"

"அவர்கள் எதற்கடா? இரண்டு பிளேட்டு வைத்தால் நான் கேட்டு விட்டுப் போகிறேன்."

இந்தக் கேள்விக்கு அண்ணுமுத்து பதில் சொல்வதற்குள் பசங்கள் இரண்டு பேரும் உள்ளே வந்து சேர்ந்தார்கள்.

"டேய், இரண்டு பேரும் இங்கே வாங்கடா, பிளேட்டு வைக்க வேண்டும்" என்ருன் அண்ணுமுத்து.

இரண்டு பேரும் கிராமபோன் பெட்டியண்டை நெருங்கினுர்கள். பெட்டியைத் திறந்தார்கள். பிளேட்டை வைத்தார்கள்.

"பாட்டு வைக்கப் பசங்கள் வரட்டும்" என்று அண்ணுமுத்து சொன்னதன் காரணம் அப்பொழுது தான் தெரிந்தது. கிராமபோன் சாவி இருக்கிறதே, அதைச் சரியானபடி பொருத்துவதற்கு மூத்த பையனுக்குத் தான் தெரியுமாம். அவன் அதைப் பொருத்தி விட்டுச் சாவியைச் சுற்ற

ஆரம்பித்தான். சின்னவன் ஊசி செருகி யிருக்கும் ஸவுண்ட் பாக்ஸைப் பிளேட் பக்கம் கொண்டு போய்ப் பிளேட்டின் மேல் வைத்தான். சாவி கொடுக்க ஆரம்பித்த மூத்தவன், சாவி கொடுத்துக் கொண்டே இருந்தான்; பாட்டு முடியும் வரையில் நிறுத்த வில்லை. சின்னவனும் வைத்த கையை எடுக்காமல் பிளேட்டின் மீது ஸவுண்ட் பாக்ஸைப் பிடித்துக் கொண்டே நின்றான்.

இதைப் பார்த்த போது எனக்குச் சிரிப்புத் தாங்க வில்லை.

"என்னடா அண்ணாமுத்து, கிராமபோன் தேவலை போலிருக்கே! இதற்காகத்தான் பிளேட்டு வைக்கப் பசங்கள் வரட்டும் என்று சொன்னாயோ?" என்று கேட்டேன்.

"என்னடா பண்ணுகிறது?" என்று கையை விரித்தான் அண்ணாமுத்து.

"சுண்டைக்காய் கால் பணம், சுமை கூலி முக்கால் பணம்" என்னும் பழமொழி அண்ணா முத்துவுக்கு மிகவும் பொருந்தும். "எந்தச் சாமானு யிருந்தாலும் மிகவும் மலிவாக வாங்குகிறான்" என்று பெயர் வாங்கிக் கொள்ள இவனுக்கு ஆசை.

அதற்காக எந்தச் சாமான் வாங்க வேண்டி யிருந்தாலும் கிராமபோன் வாங்கியது போல் ஏதாவது ஓட்டை உடைசலாகப் பார்த்து வாங்கிக் கொண்டு வருவான். பிறகு ரிப்பேர் செலவு "சுமை கூலி முக்கால் பணம்" என்னும் கதையாக முடியும்.

எல்லாச் சாமான்களையுமே மலிவாக வாங்க முடிகிறதா, என்ன? அதற்காக அண்ணாமுத்து ஒரு வழியைக் கையாளுவான். தெருவில் போகும் போது, அல்லது மார்க்கெட் பக்கமாக வரும்போது ஏதாவது ஒரு சாமான் மலிவாக விற்கிறது என்றால், அது தனக்கு உபயோகமோ, இல்லையோ, வாங்கிப் போட்டுக் கொள்வான்.

இதனால் அவன் வீட்டில் ஸ்பிரிங் இல்லாத கிராமபோன்கள், நிப்பு இல்லாத பௌண்டன் பேனாக்கள், முள் இல்லாத கடியாரங்கள், மனிதர்களைப் போல் இரண்டு காலில் நிற்கப் பார்க்கும் நாற்காலிகள், ஒரு காலில் நொண்டி யடிக்கும் முக்காலிகள், கையினால் சுற்றி விட்டாலும் ஓடாத மின்சார விசிறிகள், சக்கரம் இல்லாத சைக்கிள்கள், கயிறு இல்லாத கயிற்றுக் கட்டில்கள், கண்ணாடி இல்லாத கண்ணாடி பீரோக்கள், இன்னும் பலவகைப் பட்ட பழைய இரும்புச் சாமான்கள்—இப்படியாக நிறைந்திருக்கும்.

கடியார வகையிலேயே ஆள் உயரம் நிற்கும் பெரிய கடியாரத்திலிருந்து சின்ன ரிஸ்ட் வாச் வரையில் இருபது தினுசுகள் இருக்கும் என்றால் பார்த்துக் கொள்ளுங்களேன்! ஆனால் மணி தெரிய வேண்டுமென்றால் அடுத்த வீட்டுக்குத் தான் ஓட வேண்டும்!

இத்தனைக் கண்டான் முண்டான் சாமான்களையும் வைத்துக் கொண்டு அண்ணாமுத்து என்னதான்

பண்ணப் போகிருனே! ஆனுல் இவற்றிற்கு ஒரு நல்ல உபயோகம் அவன் பிள்ளைகள் இரண்டு பேரும் கண்டு பிடித்து வைத்திருக்கிறார்கள். அதாவது "ஓட்டை, உடைசல் ஈயம் பித்தளைப் பாத்திரங் களுக்குப் பேரீச்சம் பழம்" என்று கத்திக் கொண்டு வருகிருர்கள் அல்லவா, அந்த மாதிரி எத்தனை பேரீச்சம் பழ வியாபாரிகள் நம் மாகாணத்தில் இருக் கிருர்களோ, அத்தனை பேரண்டையும் இருக்கும் பேரீச்சம் பழம் அத்தனையும் இந்தச் சாமான்களைக் கொண்டு வாங்கி விடலாம் என்பது தான். இதில் ஒரே ஒரு தர்ம சங்கடம் இருக்கிறது! அண்ணுமுத்து அத் தனை பேரீச்சம் பழத்தையும் எடுத்துக் கொண்டு, "ஓட்டை, உடைசல், ஈயம், பித்தளைப் பாத்திரங் களுக்குப் பேரீச்சம் பழம்" என்று கிளம்பி விட் டால்?

அண்ணுமுத்து இத்தகைய சுபாவம் கொண் டவனுதலால், அவன் ஒரு சாமான் இருக்க இன்னெரு சாமான் வாங்கிக் கொண்டு வருவது வெகு சகஜம்.

வீட்டில் நாலைந்து மேஜைகள் இருக்கும். ஒரு மேஜைக்காவது நாற்காலி இருக்காது. இதற்காக நாற்காலி வாங்கிக் கொண்டு வரலாம் என்று பணத் துடன் புறப்படுவான். ஆனுல் திரும்பும் போது இன்னெரு மேஜையுடன் திரும்புவான். கேட்டால், "மேஜை தான் மலிவாக விற்றது. நாற்காலி யெல்லாம் கொள்ளை கிராக்கி சொல்லுகிருன்" என்று கூறுவான்.

இன்னும் குழந்தைகளுக்கு நிறைய டஜன் டஜனாகப் பாவாடைகள் இருக்கும், சட்டை இருக்காது. என்ன கிராக்கியா யிருந்தாலும் சட்டை வாங்காமல் திரும்புவதில்லை என்று தான் புறப்படுவான். ஆனால் அவன் சுபாவம் அவனை விடுமா? திரும்பி வரும்போது இன்னும் ஒரு டஜன் பாவாடையுடன் தான் திரும்புவான்.

இதனால் அவனுக்கும் அவன் மனைவிக்கும் சண்டை உண்டாவ துண்டு. அமாவாசையா யிருக்கும். "வாழைக்காய் வாங்கிக் கொண்டு வாருங்கள்" என்று மனைவி அனுப்பி யிருப்பாள். அண்ணாமுத்து மார்க்கெட்டுக்குப் போனவன் வாழைக்காய் விலை விசாரிப்பான். மிகவும் கிராக்கி என்று தெரிய வரும்.

பக்கத்தில் ஒருவன் முள்ளங்கி விற்றுக்கொண்டிருப்பான். அமாவாசை யன்று யாரும் முள்ளங்கியைச் சீந்த மாட்டார்க ளாதலால் முள்ளங்கி மலிவாகவே விற்கும். அவ்வளவுதான். அண்ணாமுத்து நாளைக்கு இத்தனை மலிவாக எங்கே கிடைக்கப் போகிறது என்றெண்ணி நாலணாவுக்கு முள்ளங்கி வாங்கிக் கட்டிக் கொண்டு வீடு வந்து சேருவான். அதைப் பார்த்து விட்டு அவன் மனைவி, "லபோ லபோ" என்று தலையில் அடித்துக் கொள்வாள்.

சில சமயங்களில் வீட்டுக்கு யாராவது விருந்து வந்திருப்பார்கள்; அல்லது ஒரு நாளும் வராத மாமனார் வந்திருப்பார். மார்க்கெட்டுக்குப் போய்

இன்னின்ன காய் கறிகள் வாங்கிக்கொண்டு வாருங்கள் என்று அவன் மனைவி படித்துப் படித்துச் சொல்லி யிருப்பாள். ஆனால் இவனுக் கென்று ஒரு கீரைக்காரி எதிரே தென்படுவாள். "சாமி, ரொம்ப நல்ல கீரைங்க, அப்படியே கூடை இரண்டணுவுக்குக் கொடுத்துடறேனுங்க" என் பாள். இவனும் கீரைக்காரியைக் கூட்டிக் கொண்டு வீட்டுக்குத் திரும்புவான்!

இதனால் இன்னுமொரு சங்கடம் கூட அவன் மனைவிக்கு நேர்வதுண்டு. காய் கறி மலிவாக விற்றால் அதை ஒரே அடியாய் வாங்கிக் கொண்டு வந்து விடுகிறான் அல்லவா! அதனால் பத்து நாளைக்குச் சேர்ந்தாற் போல் வீட்டில் கொத்தவரங்காய் கறி யாகவே இருக்கும். பிறகு பதினைந்து நாளைக்கு சேர்ந்தாற் போல் கீரையாகவே இருக்கும். பிறகு வேறு ஏதாவது ஒன்று வரும். இதனால் ஒரே கறி காயைத் தினம் தினம் பண்ணி அவளுக்கு அலுத் துப் போவதுடன் பக்கத்து வீட்டு அம்மாமியிடம் தன் சமையலைப் பற்றிப் பெருமை அடித்துக் கொள்ள முடியவில்லையே என்ற வருத்தம் வேறு!

ஒரு நாள் அண்ணுமுத்துவைப் பார்ப்பதற் காக அவன் வீட்டிற்குச் சென்றிருந்தேன். உள்ளே அவன் மனைவி இரைந்து பேசும் சப்தம் கேட்டது. சரி, அண்ணுமுத்து வழக்கம்போல் ஏதோ கூத்து அடித்திருக்கிறான் என்று நினைத்துக் கொண்டு உற்றுக் கேட்டேன்.

"போயும், போயும் உங்களைப் பார்த்து என்னைக் கொண்டு தள்ளினளே, அவளைச் சொல்லணும்! கல்யாணத்துக்குப் போகணும், நல்ல புடவை இல்லை யென்றால், அந்தப் பணத்தைக் கொண்டு துப்பட்டியை வாங்கிக் கொண்டு வந்து நிற்கிறீர்களே! உங்களைப் பார்த்து நான் கல்யாணம் பண்ணிக் கொண்ட அழுகுக்குத் துப்பட்டியைக் கட்டிக் கொண்டு தான் கல்யாணத்துக்கு வரணும்!" என்று இரைந்து கொண்டிருந்தாள்.

என்ன பண்ணலாம்? இதுவும் ஒரு பிரகிருதி!

# கணக்குன்னு கணக்குத்தான்

தாயுமான சுவாமிகள் இப்பொழுது இல்லையே என்று எனக்கு மிகவும் வருத்தமா யிருக்கிறது. அவர் என்னமோ, "கந்துக மதக்கரியை வசமாய் நடத்தலாம், கரடி வெம்புலி வாயையும் கட்ட லாம் ........" என்றெல்லாம் கூறிக் கடைசியில் இது எல்லாவற்றையும் விட மிகக் கடுமையான காரியம், "சிந்தையை அடக்கியே சும்மா இருப்பது" என்று தெரிவித்தார். ஆனால் அவர் மட்டும் இப்பொழுது உயிரோடு இருந்தால் இதை விடக் கடுமையான காரியம் வேறு ஒன்று இருக்கிறது என்று தெரிந்து கொள்வார். அது தான் சுப்பராமனிடம் ஒரு ஐந்து ரூபாய் கடன் கேட்டு வாங்குவது.

சுப்பராமன் எனக்கு எவ்வளவோ ஆப்த நண்பன் தான். இருந்தாலும் அவனிடம் கடன் கேட்க மட்டும் போவதில்லை என்று தீர்மானித் திருக்கிறேன். அவன் வீட்டிலேயே திருடினாலும் திருடுவேனே யொழிய, வாயைத் திறந்து, 'கொடு' என்று மாத்திரம் கேட்க மாட்டேன்.

இதனால் சுப்பராமன் கடன் கொடுக்க அஞ்சும் பேர்வழி என்று நினைக்காதீர்கள். அது தான் இல்லை. ஆனால்........... ஆனால்...........ஏன், கடைசி தடவையாக அவனிடம் சென்றிருந்த வைபவத்தை

மட்டும் சொல்லுகிறேனே? அப்போது நீங்களே தெரிந்து கொள்ளுகிறீர்கள்.

நான் வழக்கம் போல் ஒரு ஐந்து ரூபாய் கைமாத்துக்காகச் சுப்பராமனிடம் சென்றிருந்தேன்.

"என்னடா, சுப்பராமா! ஒரு ஐந்து ரூபாய் இருந்தால் கொடேண்டா. ஒரு அவசரமாக வேணும்."

"ஐந்து ரூபாயா? என்னடா அப்படி அவசரம்?"

"நாளைக்கு ஊரிலேயிருந்து சில பந்துக்கள் வருகிறார்கள். கையில் ஒரு தம்படி கிடையாது. அதற்குத் தான் கேட்டேன்."

"டேய் வெங்கிட்டு! நான் சொல்லுகிறேன் என்று கோபித்துக் கொள்ளாதே. நீயோ கையில் பணம் இல்லை யென்று சொல்லுகிறாய். அப்படியிருக்க உன்னை யார்டா இப்பொழுது விருந்தாளிகளை உபசரிக்கச் சொல்லுகிறது? கையில் பணம் இருக்கிற சமயம் பார்த்து வரச் சொல்லி எழுதி விடேன்."

"ரொம்ப அழகா யிருக்கிறதடா நீ சொல்லுவது? நம் கையில் பணம் இருக்கிற சமயம் பார்த்து விருந்தினர் வருவார்களா, என்ன?"

"அப்படி வராவிட்டால் போகிறார்கள். அப்படிக் கடன் வாங்கியாவது அவர்களை உபசரிக்க

வேண்டும் என்று எந்த ரூலிலேடா சொல்லி யிருக்கிறது?"

"என்னப்பா! நீ சொல்லுகிறது வேடிக்கை யாக இருக்கிறதே! திடீரென்று வீட்டுக்கு யாராவது வருகிறார்கள் என்று வைத்துக் கொள்வோம். இல்லை, நீயே தான் வருகிறாய் என்று வைத்துக் கொள். அப்பொழுது கையில் பணம் இல்லை என்ற காரணத்தினால் காப்பி கொடுக்காமல் இருக்க முடியுமா? இல்லை, சாப்பாட்டு வேளைக்குத் தான் வருகிறார்கள், சாப்பாடு போடாமல் இருக்க முடியுமா?"

"இருக்க முடியுமா என்ன? முடியத்தான் வேண்டும். கையில் பணம் இல்லாதபோது காப் பியும், கீப்பியும் ஒத்தனுக்குக் கொடுப்பானேன்? நாளைக்குப் பால்காரனுக்குப் பணத்தை அவனா அவிழ்த்துக் கொடுக்கப் போகிறான்? அல்லது இப்பொழுது கடன் கேட்க வந்திருக்கிறாயே, அதை நீ கொடுக்கப் போகிறாயா, அல்லது அவன் கொடுக்கப் போகிறானா!"

"சத்திரத்தில் சோறு இல்லை, இலை பொத்தல் என்கிறாப் போல் அல்லவா இருக்கிறது நீசொல்வது! நீ இன்னும் கடனே கொடுத்தபாடில்லை. அதற்குள் யார் திருப்பிக் கொடுக்கப்போகிறார்கள் என்ற பிரச்னைக்கு வந்து விட்டாயே!"

"இருக்கட்டுமே. கடன் வாங்கினால் உனக்குத் தானே திண்டாட்டம் என்று சொல்ல வந்தேன்.

வேறு ஒன்றும் வேண்டாம்! என்னைத்தான் எடுத்துக் கொள்ளேன். நான் எல்லாம் இந்த மாதிரி விஷயங்களில் கணக்குன்னு கணக்குத்தான், ரூல்னு ரூல் தான். எத்தனை ஆப்த சிநேகிதனாய்த் தானிருக் கட்டுமே, கையில் காசு இல்லையென்றால் ஒத்தனுக் கும் ஒன்றும் செய்ய மாட்டேன். சொந்த மாமனு ராகத்தான் இருக்கட்டுமே. என் கையில் பணம் இல்லாத சமயம் வந்தால் ஒரு வேளை காப்பி கூட கொடுக்க மாட்டேன்!"

"சரி, இப்பொழுது என்னை என்ன தான் செய்யச் சொல்கிறாய்?"

"செய்யச் சொல்லுகிறதாவது? நான் தான் உனக்கு ரொம்ப நாளாகச் சொல்லிக் கொண்டே வருகிறேனே. வீட்டுக்கு யாராவது வந்தால் அவர் களுக்குக் காப்பி கொடுப்பானேன், சாப்பாடு, போடுவானேன், கடைசியில் பணம் இல்லை யென்று அழுவானேன்?"

"சரி, நீ சொல்லுகிறதைப் பார்த்தால் நம்ம அடுத்த வீட்டு அண்ணாசாமி அய்யர் இருக்கிறாரே, அவரைப் போல் எச்சல் கையால் காக்கை ஓட்டக் கூடாது என்று சொல்வாய் போலிருக்கிறது!"

"ஏன், அண்ணாசாமிக்கு என்னடா வந்து விட் டது? அவனைப் பார், உன்னைப் போலா வந்தவனுக் கும், போனவனுக்கும் காப்பியையும், சாப்பாட்டை யும் போட்டுக் கொண்டு நிற்கிறான்? நாலு வருஷத் துக்கு முந்தி அவனை அடித்தாலும் அரை தம்படி

கிடைக்காது. இப்பொழுது என்னடா என்ருல் மயிலாப்பூரில் ஒரு பங்களா வாங்கி விட்டான். கையில் ரொக்கம் வேறு அரை லட்சத்துக்கு இருக்கும். நான் தான் சொன்னேனே, எல்லாம் கணக்குன்ஞ கணக்குத்தான், ரூல்ஞ ரூல்தான் என்று இருந்தால் தாண்டா இரண்டு காசு கையில் நிற்கும்.''

சுப்பராமனே இப்படித்தான். ஒரு ஐந்து ரூபாய் கடன் கேட்கப் போனதற்காக அவன் நம்மிடம் ஒரு பெரிய புராணம் வாசிக்க ஆரம்பித்து விடுவான். அதை யெல்லாம் நாம் கேட்டுக்கொண்டு தான் இருக்க வேண்டும்.

இன்னும் குற்றம் செய்தவனைக் கோர்ட்டில் குறுக்குக் கேள்விகள் கேட்பது போல், "உன் சம்பளத்துக்குச் செலவென்ன ?" "இதுக்கு ஏன் இவ்வளவு செலவழிக்கிருய்?" "அதுக்கு ஏன் அவ்வளவு செலவழிக்கிருய்?" "இது இல்லாமல் இருக்க முடியாதா?" "அது இல்லாமல் நடக்காதா?" என்றெல்லாம் கேள்விகள் பிறக்கும்.

அத்தனைக்கும் நாம் பதில் சொல்லியாக வேண்டும். நாம் சொன்ன பதிலைக் கேட்டு விட்டுப் பேசாமல் இருப்பான் என்கிறீர்களா? மாட்டான். ஒவ்வொரு பதிலுக்கும் அவன் ஏதாவது தறுக்கு வெட்டிக் கொண்டே யிருப்பான்.

"சம்பளம் ஏன் போத வில்லை யென்று கேட்கிருயே, முதலில் ஹோட்டல் பில்லே பதினைந்து ரூபாய் ஆகிறதே" என்பேன்.

"உனக்கு ஒருவனுக்கா பதினைந்து ரூபாய் ஆகிறது?"

"எனக்கு ஒத்தனுக்கு ஆகுமா? ஹோட்டல் என்றால் நாம் மாத்திரம் தனியாய் நுழைய முடிகிறதா? அல்லது தனியாய்ச் சாப்பிட்டால் தான் ருசிக்கிறதா?"

"ருசிக்காது அப்பா, ருசிக்காது! நாளைக்கு ஹோட்டல்காரன் கணக்கை உன் சிநேகிதர்கள் தான் தீர்க்கப் போகிறார்கள்! எப்படியாவது போயேன். நான் தான் சொல்லி விட்டேனே. இந்த விஷயங்களில் எல்லாம் நான் ரூல் என்றால் ரூல் தான், கணக்குன்னு கணக்குத்தான்!"

"சரி, இதற்குத் தான் இப்படிச் சொல்லி விட்டாய். மாசம் சினிமா செலவு ஒரு பத்துப் பன்னிரண்டு ரூபாய் செலவாகிறதே, அதற்கு என்ன சொல்லுகிறாய்?"

"பத்து ரூபாயா? அது எப்படியடா பத்து ரூபாய் ஆகும்? வாரம் ஒரு தடவை தானே சினிமாவுக்குப் போகிறாய்? சினிமாவுக்கும் சிநேகிதர்களைக் கூட்டிக் கொண்டு போகிறாயா, என்ன?"

"சிநேகிதர்கள் இல்லை. ஆத்துக்காரியைக் கூட்டிக் கொண்டு போகிறேன்."

"இருக்கட்டுமே. அப்பவும்—"

"நான் தனியாய்ப் போனால் ஆறு அணா சீட்டிலோ, ஒன்பது அணா சீட்டிலோ போய் உட்கார்ந்து கொள்வேன். ஆனால் ஆத்துக்காரியோடு

போனல் ஒன்பது அணு சீட்டில் உட்கார முடி கிறதா?"

"ஏன் ஒன்பது அணு சீட்டில் உட்கார்ந்தால் படம் தெரியாதோ?"

"அதுக்கு இல்லேடா. இருந்தாலும் பொம்ம ஞட்டியை கூட்டிக் கொண்டு போனல் ஒரு ரூபாய் இரண்டணு சீட்டிலாவது உட்கார்ந்தால்தான் சற்றுக் கௌரதையா யிருக்கிறது."

"கௌரதையா? நீ என்ன, சினிமாவுக்குப் படம் பார்க்கப் போகிருயா, கௌரதைக்காகப் போகிருயா? நாளைக்குக் கடன்காரர்கள் வந்து நெருக்கும் போது அந்தக் கௌரவமா வந்து தாங்கப் போகிறது?"

"என்னமோ, அப்பா, நீ சொல்றது ஒன்றும் எனக்குப் புரிய மாட்டேங்கிறது. நீ சொல்லுகிற தைப் பார்த்தால் நாளைக்கு ஒரு கல்யாணம் கார்த்திகை கூடப் பண்ணக் கூடாதென்று சொல் வாய் போலிருக்கிறதே?"

"ஆமாம், கையில் பணம் இல்லாவிட்டால் கல் யாணம் கார்த்திகைகூடத் தான் பண்ணக் கூடாது. நீ மாட்டில், கடனை வாங்கி, உடனே வாங்கிக் கல் யாணம் பண்ணுகிருய் என்று வைத்துக் கொள். நாளைக்கு அடைப்பது யார்?"

பேச்சு இந்த மாதிரியே வளர்ந்து கொண்டு போகும். கடைசியில் ஒரு பெரிய சிக்கலான பிரச் னையில் வந்து நிற்கும். ஆத்துக்காரிக்கு என்ன

மாதிரி செண்டுகள் வாங்கிக் கொடுக்கிறேன் என்கிற விஷயம் விவாதத்துக்கு வரும். உண்மையைச் சொல்லப் போனால் நான் ஒன்றும் வாங்கிக் கொடுப்ப தில்லை. வாங்கிக் கொள்வது அவள், பணம் கொடுப்பது நான், அவ்வளவு தான் !

"என்னடா, சோப்பு ஒன்று ஒரு ரூபாயா? ஏதாவது மட்ட விலையில் வாங்கிக் கொடுக்கக் கூடாதா? நீ பண்ணுவது என்ன, குடித்தனமா, தடித்தனமா?" என்று ஆரம்பிப்பான் சுப்பராமன்.

அப்புறம், "செண்டு எதற்கு? வெறும் தேங்கா யெண்ணெயைத் தடவிக் கொண்டால் தலை மயிர் படியாதா, என்ன? முன் காலத்தில் எல்லாம் செண்ட் தடவிக் கொண்டு தான் வளர்ந்தார்களா?" என்று தொடர்ந்து கூறுவான்.

இதற்கெல்லாம் நான் என்ன பதில் சொல்ல முடியும்? இந்தக் கேள்வியை யெல்லாம் நாம் வீட்டில் போட முடிகிறதா, என்ன? அப்படி ஆத்துக்காரி அதிகமாகச் செலவு செய்கிறாள் என்று தெரிந்தால் நாம் வேண்டுமானால் நம் செலவைக் குறைத்துக் கொள்ளலாம். துணிகளை வண்ணானுக்குப் போடாமல் நாமே சோப்புப் போட்டுத் தோய்த்துக் கொள்ளலாம். மாதம் ஒரு முறை சலூனுக்குப் போவதை நிறுத்தி நான்கு மாதத்துக் கொரு முறை போகலாம். இன்னும் மத்தியான வேளை டிபனை வேணுமானால் குறைத்துக்-

கொள்ளலாம். இதெல்லாம் சுப்பராமனுக்குத் தெரிய வேண்டாமா?

ஒரு தடவை தொந்தரவு பொறுக்காமல் உண்மையைக் கூறி விட்டேன். "என்னடா சுப்ப ராமா? இதெல்லாம் நானுக வாங்கிக் கொடுக்கிறேனு, என்ன? அவளாகத் தான் வாங்கிக் கொள்கிருள், பணம் மாத்திரம் நான் கொடுக்கிறேன். குடும்ப சமாதானத்தை உத்தேசித்து, 'போய் விட்டுப் போகிறது' என்று தான் இருக்க வேண்டி யிருக்கிறது. நீயும் குடும்பஸ்தன் தானே, இதெல் லாம் உனக்குத் தெரியாதது அல்லவே?" என்று கேட்டேன்.

அவ்வளவு தான். பிடித்துக் கொண்டு விட் டான்.

"அப்படிச் சொல்லுடா தகிடிகே என்ருனும். வீட்டில் அம்மாள் ராஜ்யமா? அப்படிச் சொல்லு டான்னேன்! அய்யர்வாள் சூரத்தனம் எல்லாம் வீட்டுக்கு வெளியில் தானு? அப்படிப் போடுடா ராஜா" என்று கைகொட்டிச் சிரிக்க ஆரம்பித்து விட்டான். அதோடு, ஸ்திரீகளைப் புருஷர்கள் கண்டித்து வைக்க வேண்டியதன் அவசியத்தைப் பற்றிப் புராணங்களி லிருந்து ஆதாரத்துடன் பேச ஆரம்பித்தான்.

கடைசியில் சுப்பராமன் பணம் கொடுப்பது என்னமோ நிச்சயம். ஆனுல் நீங்களே சொல்லுங் கள், ஒரு ஐந்து ரூபாய் கடன் கேட்கப் போன

தற்காக ஒரு மனுஷன் இப்படியெல்லாம் பேச்சு வாங்கிக் கட்டிக் கொள்ள வேண்டுமென்றால் அது முடிகிற காரியமா, என்ன ?

ஆகவே ஒரு தீர்மானம் பண்ணி விட்டேன். சுப்பராமனிடம் கடன் கேட்கப் போகக் கூடாது என்கிற ஒரே விஷயத்தில் மாத்திரம், "கணக்குன்னு கணக்குத்தான், ரூல்னு ரூல்தான்" என்று இருப்பது என்று தீர்மானித்து விட்டேன் !

# நாகலிங்கம் பிள்ளை

நான் நாட்டு வைத்தியர் நாகலிங்கம் பிள்ளையைத் தேடிக் கொண்டு போக வேண்டி யிருந்ததற்கே காரணம் சர்க்கார் ஆஸ்பத்திரியின் கம்பௌண்டர் தான். ஒரு தடவை கண் வலியால் அவஸ்தைப் பட்ட பொழுது அந்த சர்க்கார் ஆஸ்பத்திரிக்குப் போனேன்.

இரண்டு லட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்ட கட்டிடம். 100 டாக்டர்களும், 200 நர்சுகளும் உள்ள இடம். இவ்வளவு பெரிய இடத்தில் ஏதாவது ஒரு ஆபரேஷன் கீபரேஷன் செய்து கொள்ளப் போனால் அவர்களுக்கும் பெருமையா யிருக்கும், நம்மையும் சிரத்தையுடன் கவனிப்பார்கள். அப்படி இல்லாமல் ஒரு சின்னக் கண்வலிக்காகப் போனால் அவர்களை அவமானப் படுத்துவதா யிராதா?

இதனால் தானே என்னமோ பெரிய டாக்டர் பத்துத் தடவை மருந்தை மாற்றி மாற்றி எழுதிக் கொடுத்தும், கம்பௌண்டர் ஒரே மருந்தை—அது மருந்து தானே, அல்லது மருந்துப் புட்டியில் ஊற்றி வைக்கப் பட்டிருந்த ஜலம் தானே—கண்ணில் போட்டுக் கொண்டே வந்தான். இதனால் என் கண் வலி முன்னைவிட அதிமாகி விடவே, நான் நாட்டு வைத்தியர் நாகலிங்கம் பிள்ளையிடம் போக வேண்டியதாயிற்று.

வைத்தியர் வீட்டிற்குப் போனேன். வீட்டின் தாழ்வாரத்தில் ஒரு பெரிய போர்டு தொங்கிக் கொண்டிருந்தது. போர்டு இருந்த ஸ்திதியையும் அதில் எழுத்துக்கள் முக்கால் வாசி மங்கிப் போயிருந்ததையும் பார்த்த போது அந்த போர்டை எழுதி ஐந்தாறு தலைமுறைகளாவது ஆகியிருக்க வேண்டுமென்று தோன்றிற்று.

ஒரு வேளை தாம் தலைமுறை தலைமுறையாக வைத்தியம் செய்த குடும்பத்தில் பிறந்தவர் என்று காட்டிக் கொள்வதற்காகத் தான் வைத்தியர் போர்டைப் புதிப்பிக்காமல் வைத்துக் கொண்டிருந்தாரோ, என்னமோ!

அந்த போர்டில், மிகவும் அழிந்தும் மங்கியும் போயிருந்த எழுத்துக்களில், உலகத்தில் உள்ள, இல்லாத, சகல வியாதிகளையும் குறிப்பிட்டு, அவை எல்லாவற்றிற்கும் 'கை பார்த்து மருந்து கொடுக்கப்படும்' என்று போட்டிருந்தது. இத்தனை வியாதிகளில் 'கண் வலி' கண்டிருக்கிறதோ இல்லையோ என்று சந்தேகப்பட்டுக் கொண்டு போர்டை வாசிக்கலாம் என்று ஆரம்பித்தேன். ஆனால் அதனால் கண் வலி இன்னும் அதிகமாகி விடும் என்று தோன்றவே அந்த முயற்சியைக் கை விட வேண்டியதாயிற்று.

வாசல் திண்ணையில் இரண்டு பேர் உட்கார்ந்திருந்தார்கள். இரண்டு பேரும் பண்டாரங்களைப் போல் விளங்கினர். இடுப்பில் மேல் வேஷ்டி.

தோளில் ஒரு மலையாளத் துண்டு, கழுத்தில் கயிற்றில் கோக்கப் பட்ட உத்திராட்சம், தலை மொட்டை. இன்னும் பிரிட்டிஷ் பிரதம மந்திரி சேம்பர்லேனுக்கு உள்ள ஒரு விசேஷ குணம் இரண்டு பேர்களிடத்திலும் விளங்கிற்று. கையில் ஆளுக்கு ஒரு குடை இருந்தது.

இந்த இரண்டு பேரில் யார் வைத்தியர் என்று எனக்குத் திகைப்பு உண்டாயிற்று. நல்ல வேளையாக அவரில் ஒருவர் (அவர் தான் வைத்தியர்) "வாங்க, சாமி, வாங்க. ஏது இவ்வளவு தூரம் தேடிக்கிட்டு வந்தாப்பலே? நீங்கள்ளாம் இங்கு வரப் பட்டவங்க இல்லீங்களே" என்றார்.

"இல்லை, கண்ணில் ஐந்தாறு நாட்களாக உபத்திரவம். அதனாலே—"

"ஏன்? இரண்டு லட்சம் ரூபாய் போட்டு சர்க்கார் ஆஸ்பத்திரி கட்டிப் போட்டிருக்காங்களே, அங்கே போவலீங்களா?"

"போனேன். சௌகரியம் இல்லேன்னு தான் இங்கே வந்தேன்."

"அப்படிச் சொல்லுங்க. பெரிய கட்டிடத்தைக் கட்டிக் கிட்டு, வெள்ளைச் சராயைப் போட்டுக் கிட்டால் வைத்தியம் தெரிஞ்சு போயிடுமா? அவங்க என்னத்தைக் கண்டானுங்க? கசாப்புக் கடைக்காரனாட்டமா கையையும் காலையும் வெட்டச் சொன்னால் வெட்டுவானுங்க."

"ஆமாம்."

"சரி, நான் மருந்து கொடுக்கிறதற்கு ஒண்ணும் குந்தகம் இல்லீங்க. ஆனா செவ்வாய்க் கிழமையா பார்த்து வந்திருக்கீங்களே! நாளை விட்டு, அடுத்த நாள் வியாழக் கிழமை வாருங்க."

"சரி."

"வெறும் வயத்தோடு வரணுங்க. ஏதாவது ஆகாரம் பண்ணிப்பிட்டு வந்தீங்களானால் நாடி புடி படாதுங்க."

"ஊஹூம். அதெல்லாம் காலையில் நான் ஒன்றும் சாப்பிடுகிறது இல்லை. ஒரு டம்ளர் காப்பி அவ்வளவு தான்."

"அது என்ன, காப்பி ஆகாரத்தில் சேர்த்தி இல்லீங்களா! இது என்ன, இந்த இங்கிலீசு காரன் வைத்தியம் என்று நினைச்சீங்களா? சுத்தமா அதெல்லாம் ஒன்றும் உதவாதுங்க" என்றார் வைத்தியர்.

அடுத்த வியாழக்கிழமை காலை காப்பி சாப்பிடாமல் வைத்தியரைத் தேடிப் போனேன்.

"யார் நீங்க, எங்க வந்தீக?" என்று கேட்டார் வைத்தியர்.

இதைக் கேட்டதும் என்னைத் தூக்கி வாரிப் போட்டது! பெரிய மனிதர்கள் தான், அவர்கள் நம்முடன் எத்தனை தடவை பழகி யிருந்தாலும், நாம் அவர்களைப் பார்க்கப் போகும் போதெல்லாம், "நீங்கள் யார்" என்று நம்மைக் கேட்பது வழக்கம். இவர் என்ன அவர்களுக்கு மேல் பெரியவராகப்

போய் விட்டாரா என்று நினைத்துக் கொண்டே, "என்ன வைத்தியரே, அதுக்குள்ளே மறந்து விட்டீர்களா? நான் செவ்வாய்க்கிழமை வரல்லே? நீங்க கூட காப்பி என்ன, ஆகாரத்தில் சேர்த்தி இல்லையா என்று கேக்கல்லே?" என்று ஞாபகப் படுத்தினேன்.

"ஆமாங்க, ஆமாங்க. மறந்துட்டேனுங்க. நான் என்ன, இந்த இங்கிலீஸ் டாக்டராட்டமா, பேர், ஊர் எல்லாம் எளுதி வச்சுக்கிறேனுங்களா? ஆமாங்க, காலையில் ஒண்ணும் சாப்பிடலீங்களே? இல்லே, காப்பி மாத்திரம் சாப்பிட்டீங்களா?" என்று சிரித்துக் கொண்டே கேட்டார்.

நான் இல்லை யென்று சொன்னதும் தாம் இடுப்பில் செருகி இருந்த கண்ணாடியை மூக்கில் மாட்டிக் கொண்டார். அது கயிற்றால் கட்டப் பட்டதாதலால் தலையில் மாட்டிக் கொண்டார் என்று சொன்னாலும் பொருந்தும். ஒரு முறை என்னை ஏற இறங்கப் பார்த்த பிறகு அதை எடுத்துக் கீழே வைத்து விட்டு என் கையைப் பிடித்துப் பார்த்தார்.

"காலுக்குத் தடவ ஒரு தைலம் கொடுக்கறேனுங்க. அதைத் தினம் ராவிலே படுக்கப் போகு முன் போட்டுக்கினுங்க. அப்புறம் மூணு நாள் கழிச்சு வந்தா ஒரு பஸ்மம் தரேனுங்க. அதை வந்து—"

"ஆமாம், கண்ணில் வலி என்றால் காலுக்குத்

தைலம் கொடுக்கிறீரே, வைத்தியரே" என்று நான் சிரித்துக் கொண்டே கேட்டேன்.

"பின்னே கண்ணில் வலி என்றால் அந்த இங்கிலீசு டாக்டர்களைப் போல் கண்ணில் மருந்தைக் கொட்டணும் என்கிறீங்களா? ஒரு வியாதின்னு அதுக்கு சூட்சுமம் எங்கே இருக்குது என்று கண்டு பிடிக்க வேண்டாங்களா? இப்போ உங்களுக்குச் சூட்டினால் கண் வலி வந்திருக்குங்க. காலில் தைலம் தடவினால் தான் உள்ளங் காலில் ஆரம்பித்த குளிர்ச்சி கண்ணில் வந்து நிற்குங்க" என்றார்.

"சரி, கொடுங்கள், வைத்தியரே" என்றேன்.

இந்த சமயத்தில் நாட்டு வைத்தியர்களைத் தேடிக் கொண்டு போகும் நேயர்களுக்கு ஓர் எச்சரிக்கை! இங்கிலீஷ் வைத்தியத்தில் உள்ள சௌகரியம் இதில் இல்லையென்று தான் சொல்ல வேண்டும்.

இங்கிலீஷ் வைத்தியர்களிடம் நமக்கு வேண்டிய மருந்தை நமக்கு இஷ்டப்பட்ட முறையில் வாங்கிக் கொள்ளலாம். மருந்துப் புட்டி கொண்டு போயிருந்தால் 'மிக்ஸ்சர்' வாங்கிக் கொள்ளலாம். இல்லாவிடில் மாத்திரையாகக் கொடுக்கச் சொல்லி அதை விழுங்கலாம். மாத்திரை விழுங்க முடியாதென்றால் பௌடராகக் கொடுக்கச் சொல்லலாம். இந்தத் தொல்லைகளே வேண்டாமென்றால் ஓர் ஊசி குத்தச் சொல்லலாம். இல்லை, வியாதியைச் சாக்கிட்டு ஆபீசில் லீவு வாங்கிக் கொள்ள வேண்டும்

என்று தோன்றினல் ஓர் ஆபரேஷன் செய்யச் சொல்லலாம்.

ஆனல் நாட்டு வைத்தியர்களிடம் இந்த அனுகூலம் ஒன்றும் கிடையாது. அவர்கள் எந்த வியாதிக்கு எந்த இடத்தில் மருந்து போடுவார்கள், என்ன மாதிரி மருந்து போடுவார்கள் என்று யாராலும் சொல்ல முடியாது. அவர்களாலே சொல்ல முடியாது என்று கூடச் சொல்லலாம்.

மூன்று நாள் கழித்து மத்தியான வேளையில் வைத்தியர் வீட்டுக்கு மறுபடியும் போனேன். வைத்தியர் வீட்டில் இல்லை. விசாரித்ததில், "மத்தியான வேளையிலே வூட்டிலே இருக்க மாட்டாருங்க. இந் நேரத்துக்கு அவர்களைக் கரூரார்ச் சமாதியண்டைதான் பார்க்கலாம். அங்கே இல்லாட்டி அத்தர் கடேலே குந்தி யிருப்பாரு" என்று பதில் வந்தது.

வைத்தியரைக் கரூரார்ச் சமாதியிலும் காணேம், அத்தர் கடையிலும் காணேம். அத்தர் கடையில் விசாரித்ததற்கு, "இப்பத்தான் தோட்டத்துச் சாமியாரோடு போனரு" என்று பதில் வந்தது. இதற்கு மேல் தோட்டத்தை யார் கண்டா, சாமியாரை யார் கண்டா என்று நான் திரும்பி வந்து விட்டேன்.

இதற்கு பிறகு ஒரு பத்து நாளைக்கு வைத்தியர் கண்ணில் தென்படவே யில்லை. இங்கே போனல், 'அங்கே போயிருக்கிறர்' என்றும், அங்கே

போனால் 'இங்கே போயிருக்கிறார்' என்றும் பதில் வரும்.

கடைசியில் ஒரு நாள் அவரை அத்தர் கடையில் கண்டு பிடித்தேன். என்னைக் கண்டதும் "வாங்க, யாருங்க?" என்றார். நான் ஆதியோடந்தமாக எல்லா விவரங்களையும் சொன்னேன். அதைக் கேட்டு விட்டு, "பஸ்பம் சாப்பிடா விட்டா பரவா யில்லீங்க" என்றார்.

இது விஷயம் அவர்தான் சொல்லணும் என்று இல்லை. ஏனெனில் என் கண் சொஸ்தமாகிப் பத்து நாட்கள் ஆகிவிட்டன!

இதுவும் ஒரு பிரகிருதி!

# குட்டி போட்ட பூனை

அன்று தெருவில் ஏதோ காரியமாகப் போய்க் கொண்டிருக்கையில் என் நண்பர் ஜகதீச அய்யர் ஒரு வீட்டின் முன்னால் நின்று கொண்டு அதில் மாட்டி யிருந்த 'டு லெட்' போர்டை உன்னிப்பாய்க் கவனித்துக் கொண்டிருந்ததைப் பார்த்தேன். அவர் தோளைத் தட்டினேன். அவர் என்னைக் கண்டதும், "என்ன சுவாமி, நீங்கள் எல்லாம் பெரியவாளாய்ப் போய் விட்டேள். என்னை யெல்லாம் பார்க்க வருவீர்களா ?" என்று கோபத் துடன் கேட்டார்.

ஜகதீச அய்யர் கோபித்துக் கொள்ளக் காரணம் இருந்தது. நான் தம்புச் செட்டித் தெருவிலும், அவர் லிங்கச் செட்டி தெருவிலும் குடியிருந்தோம். இப்படிப் பக்கத்து, பக்கத்துத் தெருக்களில் இருந்து கொண்டே நான்கு மாதங்களாக அவரைப் பார்க்கா திருந்தால் அவருக்குக் கோபமா யிராதா ?

"பெரியவனாவது, சின்னவனாவது, ஸார் ! எங்கே, ஒழிந்தால் தானே பார்க்கலாம் ? ஆபீஸ் வேலை தான் நமக்குச் சரியா யிருக்கே ?" என்றேன்.

"என்ன ஐயா கதை கட்டுகிறீர் ? நீராவது, வந்து பார்க்கவாவது ? பஸ் சார்ஜ் செலவழிக் கணுமே என்று மூக்கால் முனக மாட்டீரா ?"

"பக்கத்துத் தெருவுக்குப் பஸ் சார்ஜ் எதற்கு? நான் இன்னிக்கி சாயந்திரம் கட்டாயம் வந்து பார்க்கிறேன்."

"அடாடா! நான் இப்பொழுது லிங்கிச் செட்டித் தெருவில் இல்லை காணும்."

"லிங்கிச் செட்டித் தெருவில் இல்லையா?"

"இல்லை. இந்த டவுன் நெருக்கடியில் எவன் ஐயா குழந்தைகளையும், குட்டிகளையும் வைத்துக் கொண்டு குடி யிருப்பான்? மயிலாப்பூருக்குக் குடி போய் விட்டேன்."

"என்ன ஐயா, இந்த நாலு மாதங்களாக மயிலாப்பூரில் இருந்து கொண்டே தானா தகவல் சொல்லாமல் இருந்து விட்டீர்?"

"நாலு மாதம் ஏது ஐயா! மயிலாப்பூருக்குக் குடி போயே இப்பொழுது பதினைந்து நாள் தான் ஆகிறது. திருவல்லிக்கேணி சுத்தமாகப் பிடிக்க வில்லை. ஜலக் கஷ்டம் வேறு. அதனாலே—"

"திருவல்லிக்கேணியா? அது எப்பொழுது திருவல்லிக்கேணிக்குப் போனீர்கள்?"

"அந்தப் புரசைவாக்கம் வீட்டைக் காலி பண்ணினேனே, இல்லையோ......."

"புரசைவாக்கத்துக்கு வேறு போனீர்களா? புரசைவாக்கத்துக்காவது நேரே போனீர்களா, அல்லது நடுவில் இன்னும் ஏதாவது வீடுகள் உண்டா!"

"என்ன ஐயா புரளி பண்ணுகிறீர்? அடிக்கடி

வீடு மாறுவதில் புண்ணியமா, புருஷார்த்தமா! நேரே புரசைவாக்கத்திற்குத் தான் போனேன். வீட்டுக்காரனும் வேண்டிய சௌகரியங்கள் எல்லாம் செய்து கொடுக்கிறேன் என்று சொன்னான். ஆனால் அவனால் என்ன, மார்க்கெட்டைத் தூக்கி வீட்டுக்குப் பக்கத்தில் வைக்க முடியுமா, அல்லது வீட்டைத் தூக்கித் தான் மார்க்கெட்டுக்குப் பக்கத்தில் வைக்க முடியுமா? போன மறுநாளே மார்க்கெட் பக்கத்தில் இல்லை யென்று ஆத்துக்காரி குறைப் பட்டாள். அதற்காக மாறினேன்."

"சரி, இப்பொழுது தங்களைப் பார்க்கணும் என்றால் எந்த அட்ரசுக்கு வரணும், சொல்லுங்கள்."

"இனி மேல் பட்டணத்தில் உள்ள வரையில் மயிலாப்பூர் வீடு தான். வீட்டுக்காரன் போகச் சொன்னால் கூட நான் போகப் போவதில்லை. வீட்டுக்குக் கூட எனக்கு உனக்கு என்று பலத்த போட்டி இருந்ததாம். கடைசியில் நெருங்கிப் போனதில் நம்ம ஆத்துக்காரியும் அந்த வீட்டுக்காரன் சம்சாரமும் சேர்ந்து பள்ளிக்கூடத்தில் வாசித்தவர்களாம். அதனால் தான் வீட்டை நமக்கு விட்டான். ஏன் இந்த ஞாயிற்றுக் கிழமை தான் ஆத்துக்கு வாருமே" என்றார்.

"சரி, வருகிறேன்" என்று சொல்லி ஜகதீச அய்யரிடம் விடை பெற்றுக் கொண்டேன்.

ஜகதீச அய்யர் இன்றைக்கு ஒரு வீட்டில் இருந்தால் நாளைக்கு அதே வீட்டில் இருப்பார்

என்று சொல்ல முடியாது. அவராலும் சொல்ல முடியாது, யாராலும் சொல்ல முடியாது. இதற்காக நாங்கள் அவரைக் குறித்துப் பேசிக் கொள்ளும் போது வேடிக்கையாக அவரை, "குட்டிபோட்ட பூனே" என்று குறிப்பிடுவது வழக்கம். இது விஷயம் ஜகதீச அய்யருக்கும் தெரியும். ஆனல் அவர் அதற்காகக் கோபித்துக் கொள்வதில்லே. ஏனெனில் இந்த உபமானத்தைப் பார்த்து யாருக் காவது கோபித்துக் கொள்ள முகாந்திரம் இருந்தது என்ருல், அது அந்தப் பூனேக்குத் தான். குட்டிப் போட்ட பூனே, ரொம்ப அதிக பட்சமாக வைத்துக் கொண்டாலும், ஏழு வீடுகளுக்கு மேல் மாருது என்று கூறுகிருர்கள். அப்படி யிருக்க, இதுவரை யில் ஆயிரக் கணக்கில் வீடு மாறி யிருக்கும் ஜகதீச அய்யருடன் அதை ஒப்பிட்டால் அதற்குக் கோபமா யிருக்காதா?

இந்த மாதிரி வீடு மாற்றும் குணம் ஜகதீச அய்யருக்கு இன்று நேற்று ஏற்பட்ட தல்ல. பத்து வருஷங்களாக அப்படித்தான். ஆனல் இத்தனே வருஷங்களாக ஆபீஸுக்குப் பக்கம் என்று லிங்கச் செட்டித் தெரு, தம்புச் செட்டித் தெரு, அரண் மனேக்காரன் தெரு ஆகிய இம் மூன்று தெருக்களுக் குள்ளேயே மாறிக் கொண்டிருந்தார். ஆனல் இப் பொழுதோ குறுகிய திருஷ்டியை விட்டு விட்டுப் பரந்த திருஷ்டியுடன் பட்டணம் முழுவதும் சுற்ற ஆரம்பித்து விட்டார்!

ஜகதீச அய்யர் ஏதாவது ஒரு வீட்டுக்குப் புதிதாகக் குடித்தனம் போனதும், அதைப் பற்றி அவர் புகழ்வது சொல்லி முடியாது.

“பேஷான பெட் ரூம், கீழே ஒரு பெரிய கூடம். ஏதோ ஒரு கல்யாணம் கார்த்திகைன்னு நூறு பேராளுலும் இலை போடலாம். சமையல் ரூம் ஒதுக்குப் புறமாய்ப் போய் விட்டது. இன்னும் காற்று பிச்சிண்டு போறது. ஜலம் இருபத்து நான்கு மணி நேரமும் கொட்டறது” என்றெல்லாம் புகழ்வார்.

இதை வீட்டுக்காரர் கேட்டாராளுல் அவருக்கே சந்தேகம் வந்து விடும். “ஏது, நம்ம வீட்டைத்தான் குறிப்பிடுகிருரா?” என்று அவர் திகைத்துப் போய் விடுவார். இல்லாவிடில், “இவ்வளவு நல்ல வீட்டில் நாம் குடியிருக்காமல் வாடகைக்கு விட்டு விட்டோமே” என்று வருத்தப் பட்டாலும் படுவார்.

ஆளுல் அதே வீட்டைப் பத்து நாட்கள் கழித்துக் காலி பண்ணும் போது ஜகதீச அய்யர் வர்ணிப்பதை ஒருவர் கேட்டாராளுல் அவர் ஜகதீச அய்யரை அடிக்க வருவார் என்பதில் சந்தேகமில்லை.

“இந்த வீட்டுக்காரனே ஒரு பெரிய ‘இடியட்’ ஸார்! என்ன ஸார் வீடு கட்டி யிருக்கிருன்! பெட் ரூம் ஒரு மூலே யென்ருல் சமையல், அறை இன்னெரு மூலே. புருஷனும் மனேவியும் சேர்ந்து இருப்பது வீட்டுக்காரனுக்கு ஆகாது போலிருக்கிறது. இன்னும் சமையல் அறைக்கும் மாடி அறைக்கும்

நடந்து நடந்து ஆத்துக்காரிக்குக் கால் ஓய்ந்து போய் விட்டது" என்று ஒரு வசை புராணம் படிப்பார்.

குதிரை கீழே தள்ளி விட்டதும் அல்லாமல் குழியையும் பறித்ததாம்! ஜகதீச அய்யர் தாம் ஏன் ஒரு வீட்டுக்குக் குடி போகிறார், அல்லது காலி பண்ணுகிறார் என்று காரணங்கள் கூறுவதும் அது போலத்தான் இருக்கும். "காற்று பிச்சிண்டு போறது. அதனால் தான் அங்கு குடி போனேன்" என்று ஒரு வீட்டைப் பற்றிக் கூறுவார். பிறகு அதே வீட்டைக் காலி பண்ணும் போது "என்ன ஸார்! பிசாசாட்டமா காற்று அடிக்கிறது. இதே உடம்புக்கு வந்து விடும் போலிருக்கிறது" என்பார். ஒரு வீட்டில் குழாயில் ஜலம் எப்பொழுதும் தாராளமாக வந்து கொண்டு இருந்தால், அதுவே அவர் அந்த வீட்டுக்குக் குடி போகக் காரணமா யிருக்கும். பிறகு அதே காரணத்திற்காக அந்த வீட்டைக் காலி பண்ணுவார். "என்ன ஸார்! எப்பொழுது பார்த்தாலும் இப்படி ஜலம் கொட்டிண்டு இருந்தால் என்ன ஸார், பண்ணுகிறது? ஜலத்தில் நடந்து நடந்து, ஆத்துக்காரிக்குக் காலெல்லாம் சேத்துப் புண்!" என்று குறைப்படுவார்.

இந்த மாதிரி அவர் அடிக்கடி வீடு மாறிக் கொண்டிருப்பதின் ரகசியம் என்னவோ!

ஒரு வேளை சென்னையிலுள்ள வீடுகளைப் பற்றியெல்லாம் ஒரு பெரிய புஸ்தகம் போடுவதற்காகத்

தான் அப்படிச் செய்கிருரோ, இல்லாவிடில் அவர் கொடுக்கும் வீட்டு வாடகைப் பணத்தைத் தான் எல்லா வீட்டுக்காரர்களும் சமமாகச் சாப்பிடட்டுமே என்கிற எண்ணமோ ?

எது எப்படி இருந்தபோதிலும் இந்த அநுபவங்களை வைத்துக் கொண்டு அவர் ஒரு பெரிய தொழில் ஆரம்பிக்கலாம் என்பதில் மட்டும் சந்தேகமில்லை. இப்பொழுதெல்லாம் "மாட்ரிமோனியல் பீரோ"க்கள் ஏற்பட்டிருப்பது போல் அவர் "சென்னை வீட்டு விவரக் கம்பெனி" என்று ஒன்று ஏற்படுத்தலாம். அதில் தமது அநுபவத்தைக் கொண்டு, யார் யாருக்கு எந்தெந்த மாதிரி வீடு வேண்டும், அவை எங்கே இருக்கின்றன, அவை 'ஆகி' வந்த வீடா, இல்லையா என்று இம்மாதிரி தகவல் கொடுத்துப் பணம் சம்பாதிக்கலாம். 'ஆகி' வராத வீடுகளை வைத்துக் கொண்டிருப்பவர்கள் தங்கள் வீடுகளைப் பற்றி அவர் குறை சொல்லாமல் இருப்பதற்காக அவருக்குப் பணம் கொடுக்கலாம்.

**ப**த்து நாட்கள் கழித்து ஜகதீச அய்யரைத் தேடிக் கொண்டு மயிலாப்பூருக்குப் போனேன். நான் எதிர்பார்த்தபடி (நீங்களும் எதிர்பார்த்தபடி) அவர் வீட்டைக் காலி பண்ணிக் கொண்டு மாம்பலத்துக்குப் போய் விட்டார் என்று அறிந்தேன். மாம்பலத்துக்குப் போனதில் எழும்பூருக்குப் போய் விட்டார் என்று தெரிந்தது. கடைசியாக அவரை

எழும்பூரில் போய்ப் பார்த்தேன் என்று வைத்துக் கொள்ளுங்களேன் !

இப்பொழுது ஜகதீச அய்யரைப் பார்த்து இரண்டு மாதங்கள் ஆகிவிட்டன. ஏன் வந்து பார்க்கவில்லை என்று கட்டாயம் கோபித்துக் கொள்வார். ஆனால் இந்த இரண்டு மாதங்களில் அவர் ஒரு பத்து இடமாவது மாறி யிருப்பார். ஆகவே அடுத்த ஞாயிற்றுக்கிழமை ஒரு 5 அணு பஸ் டிக்கட், ஒரு 4 அணு டிராம் டிக்கட், இன்னும் ரிக்ஷாக்காரனுக்கு ரூ. 10 சில்லறை இவை சகிதம் அவரைத் தேடிக் கொண்டு புறப்படுவது என்று தீர்மானித்திருக்கிறேன்.

இதுவும் ஒரு பிரகிருதி !

# ‘கஜினி முகம்மத்’

“அம்மா, கொளுத்திப்பிட்டேன், போ” என்று சொல்லிக் கொண்டே உள்ளே நுழைந்தான் ராமு.

“கொளுத்திப்பிட்டயா? எதையடா கொளுத்தினுய்?” என்று பதட்டத்துடன் கேட்டாள் ராமுவின் தாயார்.

“என்னம்மா அசடா யிருக்கே? எதைக் கொளுத்தறதாவது? பரீட்சையைத் தான் கொளுத்திப்பிட்டேன்.”

“அப்படியாடா கண்ணே? வா. இரண்டு வருஷமாகத் தான் திரும்பத் திரும்பப் பரீட்சைக்குப் போகிருய். இந்த வருஷமாவது பாஸ் பண்ண வேண்டாமா? இந்தா, இந்தக் கேஸரியையும் காப்பியையும் சாப்பிடு.”

“பாஸா! இந்த வருஷம் rank வாங்கா விட்டால் என்னை ஏன் என்று கேளு” என்று சொல்லி விட்டு, தாயார் கொடுத்த கேஸரியையும் காப்பியையும் சாப்பிட்டு விட்டு வாசலில் காத்துக் கொண்டிருந்த நண்பனுடன் பேசப் போய் விட்டான் ராமு.

ராமு என் நண்பர் ஒருவருடைய பிள்ளை. வயது இருபது இருக்கும். மிகவும் ஆடம்பரப் பிரியன். அவன் ஒரு போலோ ஷர்ட்டைப் போட்டுக்

கொண்டு அதன் காலரைத் தூக்கி விட்டுக் கொண் டிருப்பதே ஒரு அழகா யிருக்கும். டெயிலர், ஸலூன் காரன், வண்ணான் முதலியவர்களுக்கு முறையே ஏதாவது ஒரு கோட்டை எப்படி 'கட்' பண்ணுவது, அல்லது ஒரு கிராப்பை எப்படி வாரி விடுவது அல் லது ஒரு துணியை எப்படி மடித்து இஸ்திரி போடுவது என்றெல்லாம் சந்தேகம் வந்தால் இவன் தீர்த்து வைக்கக் கூடியவன்.

இன்னும் மேல் நாட்டு சினிமா நட்சத்திரங் களைப் பற்றி இவனுக்குத் தெரியாத விஷயம் கிடை யாது. எந்த நட்சத்திரத்துக்கும் எந்த நட்சத்திரத் துக்கும் நட்பு உண்டு, எங்கெந்த நட்சத்திரங் களுக்குள் காதல் உண்டு ஆகிய பல விஷயங்களும் அவனுக்கு நெட்டுருப் பாடம். ஆனால் பள்ளிக்கூட பாட விஷயங்கள் ஒன்று கேட்டால் கூடத் தெரியாது. இதனால் சென்ற இரண்டு வருஷங்களாக அவன் மார்ச், செப்டம்பர், மார்ச், செப்டம்பர் என்று திருப்பித் திருப்பி இண்டர்மீடியட் பரீட்சைக்குப் போய்க் கொண்டிருந்ததில் ஆச்சரியமில்லை.

பரீட்சை எழுதி முடிந்ததும் ராமு தன் நண்பன் ஒருவனை வைத்துக் கொண்டு தனக்குத் தானே மார்க் போட்டுக் கொள்ள ஆரம்பிப்பான்.

"டேய்! இந்தக் கேள்விக்கு என்னடா மார்க்கு? பத்து இருக்குமாடா?" என்பான் ராமு.

"இருக்கும்" என்று சொல்லுவான் அவன் நண்பன்.

"அப்படியானல் இதற்கு எட்டு மார்க்கு போடடா."

"எட்டா? எவன்டா உனக்கு எட்டு கொடுப் பான்?"

"ஏன்டா கொடுக்க மாட்டான்? அப்படியே பிரொபஸர் சுந்தரம் அய்யர் கொடுத்த நோட்ஸை யாக்கும் 'கடம்' பண்ணி எழுதியிருக்கிறேன். போடடா எட்டு."

"சரி, எட்டு!" என்பான் நண்பன். ராமு பண்ணும் அட்டகாசத்தைப் பார்த்து விட்டு எங்கே அவன் சொன்னபடி கேட்கா விட்டால் அடி விழுமோ என்று அவனுக்குப் பயம்!

"அடுத்த கேள்விக்கு என்னடா இருக்கும்? பதினைந்து இருக்குமாடா?"

"என்னடா, போன கேள்விக்குப் பத்து மார்க் என்ருல் இதற்குப் பதினைந்து எப்படியடா கொடுப்பான்?"

"எல்லாம் பதினைந்து இருக்கும்டா! முதல் கேள்வி நாலு வரிதான் இருக்கிறது. இது ஆறு வரி இருக்கிறதேடா. அரை மடங்கு நீளம் அதிகம். அதனல் தான் பதினைந்து என்றேன். சரி, இதற்குப் பதிமூன்று போடு."

"பதிமூன்ரு?"

"என்னடா உன் கையை விட்டுக் கொடுப்பது போல் அழுகிருய்! நான் எழுதின பதிலைப் பார்த் தால் பதினைந்துக்குப் பதினைந்து கூடக் கொடுப்

பாண்டா. ஏதோ முன்னே பின்னே இருக்கட்டும் என்று தான் இரண்டு மார்க் குறைத்துச் சொன்னேன்."

"சரி, பதிமூன்று."

இந்த மாதிரி எல்லாப் பேப்பர்களுக்கும் மார்க் போட்டாகும். பிறகு, "எல்லாம் கூட்டிப் பாரடா! எவ்வளவு வருகிறது என்று பார்க்கலாம்" என்பான் ராமு.

எட்டும் பதிமூன்றும் இருபத்து ஒன்று, இருபத்து ஒன்றும் ஏழும் இருபத்து எட்டு என்று இது மாதிரி நண்பன் கூட்ட ஆரம்பிப்பான். கூட்டின பிறகு "157 வருகிறதேடா" என்பான்.

"157 ஆ? எப்படியடா 157 வரும்? பேப்பருக்கே மொத்தம் மார்க் நூறுதானேடா? கூட்டலில் ஏதாவது தப்பு இருக்கும். திரும்பியும் கூட்டிப் பாரடா" என்று சொல்வான் ராமு.

ராமு சொன்னது வாஸ்தவமா யிருக்கும். அவன் நண்பன் கூட்டலில் பிசகு விட்டிருப்பான். ஏனெனில் இரண்டாவது தடவை கூட்டிப் பார்க்கும் போது 157 ஆயிருந்தது 168 ஆக மாறும்.

"சட் என்னடா இது! நான் கூட்டிப் பார்க்கிறேன்" என்று ராமு வாங்கிக் கூட்டிப் பார்ப்பான். ஒரு தடவைக்குப் பத்துத் தடவை கூட்டிப் பார்ப்பான். எத்தனை தடவை கூட்டிப் பார்த்தாலும், மொத்தத் தொகை 177 லேயே நிற்கும்.

"என்னடா இது! திரும்பியும் மார்க் போட்டுப் பார்க்க வேண்டியதுதான்" என்பான் ராமு.

திரும்பியும் மார்க் போட்டுப் பார்ப்பார்கள். இந்தத் தடவை அது 148-ல் வந்து நிற்கும். திரும்பவும் போட்டுப் பார்ப்பார்கள். இந்த மாதிரி திரும்பவும் திரும்பவும் போட்டுப் பார்த்தால் அது கொஞ்சம் கொஞ்சமாய்க் குறைந்து கொண்டே வந்து கடைசியில் 90-ல் வந்து நிற்கும்.

"சரி, ஒரு பத்தைத் தள்ளு" என்று வெகு தாராளமாகச் சொல்லுவான் ராமு. பிறகு, "சரி, சந்தேகமே வேண்டாம். இன்னொரு பதினைந்தைத் தான் தள்ளேன். நம்ப அதிர்ஷ்டம், நம்ப பேப்பர் அவன் ஆத்துக்காரி கோபித்துக் கொண்டிருக்கும் சமயம் பார்த்துப் போய்ச் சேர்ந்தால் என்ன பண்ணுவது?" என்பான்.

பரீட்சைப் பேப்பர் திருத்துகிறவர்களைப் பற்றி ராமு கொண்டிருந்த சித்தாந்தம் இதுதான். அதாவது, அவர்கள் கையில் இருக்கும் பேப்பருக்கு மார்க் நிறையப் போடுவது, குறையப் போடுவது எல்லாம் அவர்கள் அந்த சமயத்தில் வீட்டில் மனைவியோடு சல்லாபமாக யிருக்கிறார்களா, அல்லது சண்டை போட்டுக் கொண்டிருக்கிறார்களா என்பதை பொறுத்தது என்பது தான். எத்தனையோ தடவை, பேப்பர் திருத்துகிறவர் ஆத்துக்காரியோடு கோபித்துக் கொண்டிருக்கிற சமயம் தன் பேப்பர் அவர் கையில் இருக்கக் கூடாது என்று ராமு

வேண்டிக் கொண்டிருக்கிறான். சில சமயங்களில் எல்லா பேப்பர் திருத்துகிறவர்களும் கல்யாண மாகாத பிரம்மச்சாரிகளாக இருக்கக் கூடாதா என்று கூட நினைத்திருக்கிறான்!

கடைசியில் கூட்டல் கணக்கு சரியானதும், ராமு, “இப்பொழுது என்ன, 65-ல் வந்து நிற்கி றதா, சரி பர்ஸ்டு கிளாஸ் தான்” என்று தீர்மா னித்து வெகு சந்தோஷமாக இருப்பான். ஆனால் ரிஸல்ட் என்னமோ வழக்கம் போல் பூஜ்யம் தான் வரும். ராமுவின் தாயாரும் வழக்கம் போல் “குழந்தை ராப் பகலாக வாசித்தது. பாவி பாஸ் போடாமல் இருந்து விட்டான்” என்று யுனிவர் ஸிடிக்காரர்களைத் திட்டிக் கொண்டிருப்பாள். ராமுவும் ஒவ்வொரு தடவையும், “இந்த யுனிவர் ஸிடி முகத்திலேயே இனி மேல் விழிக்கப் போகிற தில்லை. போய் அண்ணாமலை யுனிவர்ஸிடியில் சேர்ந்து கொள்ளப் போகிறேன்” என்று சொல் லிக் கொண்டேயிருப்பான்.

இவ்வளவு தூரம் சொன்னது பழைய ராமுவைப் பற்றி. இப்பொழுது இருப்பது புதிய ராமு என்பதற்கு அவர் பெயர் மாறி விட்டதே போதிய சான்றாகும்.

இந்த இரண்டு வருஷங்களாக, செப்டம்பர் பரீட்சைக்கு அவன் வைத்துக் கொண்டிருந்த பெயர் மார்ச் பரீட்சையின் போதும், மார்ச் பரீட் சையின் போது இருந்த பெயர் செப்டம்பர் பரீட்

சையின், போதும் மாறிக் கொண்டே வந்தன. இதனால் ராமு என்பது பிரசாத் ஆக மாறி பிறகு ஜயசிங்காகத் திரிந்து, அதிலிருந்து பாபுஜிக்குத் தாவி, பிறகு இப்பொழுது சம்பத் குமாரில் வந்து நிற்கிறது. ஆனால் அவன் என்ன பெயரை மாற்றிக் கொண்டாலும் சரி, அவன் நண்பர்கள் அவனுக்கு வைத்த பெயர் என்னமோ மாறவில்லை. அதுதான் 'கஜினி முகம்மத்' என்பது. இப்பொழுது இருக்கும் நிலைமையைப் பார்த்தால் இன்னும் கொஞ்ச நாளில் ராமுவின் படை யெடுப்புக்களின் எண்ணிக்கை கஜினி முகம்மத் இந்தியாவின் மேல் படை யெடுத்த யெண்ணிக்கையைப் புறமுதுகிட்டு ஓடும்படி செய்து விடுமோ என்று தோன்றுகிறது. அப்பொழுது ராமுவின் பெயரைத்தான் கஜினி முகம்மதுக்கு இட வேண்டும்!

அவன் பரீட்சைகளிடம் கொண்டிருந்த மனப் பான்மை கூட இப்பொழுது மாறி விட்டது. முன் போல் சம்பத் குமார் பரீட்சைக் கேள்விகளுக்குத் தானே மார்க்குகள் போட்டுப் பார்த்துத் தேறுமா, தேறாதா என்றெல்லாம் கவனிப்ப தில்லை. இப் பொழுதெல்லாம் பரீட்சையில் தேறாமல், தவறாமல் பெயில் ஆகிக் கொண்டு வருவதே அவனுக்கு ஒரு பெரிய கிதாப் வைத்த மாதிரி.

"என்னடா சம்பத் குமார்! (ஆம் சம்பத் குமார் என்று கூப்பிடாமல் 'ராமு' என்று கூப்பிட்டால்

அவன் பதில் சொல்லமாட்டான்) பரீட்சை தேறுமா ?"

" தேறுவதா ? எனக்கு மாத்திரம் பாஸ் போட்டாளுல் அவன் 'எக்ஸாமி' னராக இருப்பதற்கே லாயக்கு இல்லே யென்று சொல்வேன். எனக்கு அவன் இஷ்டப்பட்டால் கூடப் பாஸ் போட முடியாதே. வெறும் பிளாங்க் பேபரைன்னு நான் கொடுத்துட்டு வந்திருக்கேன். எப்படிப் பாஸ் போடுவான், கேட்கிறேன் !"

" என்னடா ! இப்படிப் பண்ணிக் கொண்டிருந்தால்...."

" இப்ப என்ன மாமா வந்திருக்கு ? என் கூட்டாளிகள் எல்லாம் சட் சட்னு பாஸாகி விட்டால் அப்புறம் யுனிவர்ஸிடிக்காரன் தான் எப்படி பிழைப்பான் ?"

அவர்கள் பிழைப்பதில் சம்பத் குமார் மிகவும் கருத்துடையவளு யிருக்கிருன் என்பது யுனிவர்ஸிடிக் காரர்களுக்கு எங்கே தெரியப் போகிறது ?

" கடைசியில் எப்பத்தான் பாஸ் பண்ணப் போகிருய் ?

" இப்ப என்ன மாமா அவசரம் ? அதுதான் யுனிவர்ஸிடிக்காரன் செப்டம்பர்–மார்ச், மார்ச்—செப்டம்பர் என்று இரண்டு இரண்டு பரீட்சை வைத்திருக்கானே ? செப்டம்பர் விட்டால் மார்ச், மார்ச் விட்டால் செப்டம்பர்தான். ரொம்ப அவ

சரமாப் பாஸ் பண்ணினவன் இப்பொழுது என்ன கிழிக்கிருன் ?"

இப்பேர்ப்பட்டவன் தான் ராமு, அலயஸ் பிரசாத், அலயஸ் பாபுஜி, அலயஸ் ஜயசிங், அலயஸ் சம்பத்குமார், அலயஸ் இன்னும் என்னவோ !

'இதுவும் ஒரு பிரகிருதி' என்று அவனைப் பற்றிக் கூறுவதை விட வேறு என்ன சொல்ல முடியும் ?

# பகவத் கிருபை

நமசிவாயம் என்று சொன்னுல் உங்களுக்கு யார் என்று தெரியாது. ஆனுல் அவரை நான் எதிரே கொண்டு வந்து நிறுத்தினுல், " அட இவரா! இவரை எனக்கு ரொம்ப நாளாகத் தெரியுமே" என்று சொல்லி விட்டு ஓடப் பார்ப்பீர்கள். ஆம், நமசிவாயத்தைக் கண்டால் ஓட்டம் தான் பிடிக்கப் பார்க்கிருர்கள். இது விஷயம் அவருக்கும் தெரியாமல் இல்லை. அதற்காக அவர் உங்களைப் பார்ப்பதா யிருந்தால் நீங்கள் ஓட முடியாத இடத்தில் தான் சந்திப்பார். சாதாரண ரயில் வண்டியில் கூட நீங்கள் கீழே குதித்து விடுவீர்களோ என்று உங்களை மின்சார ரயில் வண்டியில் தான் பார்ப்பார்.

ஒரு தடவை ஏதோ காரியமாக மின்சார வண்டியில் மாம்பலத்துக்குப் போய்க் கொண்டிருந்தேன். எழும்பூர் வந்ததும் ஒரு ஆசாமி வந்து என் எதிரே உட்கார்ந்தார். அவர் பார்ப்பதற்கு ஏதோ தாலுக்கா ஆபீஸ் குமாஸ்தா போல் தோன்றினுர். நாலைந்து ஓட்டைகள் கொண்ட ஒரு கோட்டு. அதற்குள்ளே இரண்டு மூன்று பொத்தல்கள் உள்ள ஒரு ஷர்ட். கோட்டுக்கு மேலே அவர் கல்யாணத்துக்கு வாங்கினதோ அல்லது அவர்

தகப்பனர் கல்யாணத்துக்கு வாங்கினதோ என்று சந்தேகப் படும்படியான ஒரு ஜரிகை அங்கவஸ்திரம். நெற்றியில் கட்டுக் கட்டாய் விபூதி. சட்டைப் பைகளில் கட்டுக் கட்டாய் காகிதக் குவியல். பைகளிலும் ஓட்டைகள் இருந்ததால் சில காகிதங்கள் அவை வழியாகத் தம் தலையை வெளி நீட்டிக் கொண்டிருந்தன. இத்தனை சின்னங்கள் இருந்த போது அவர் தாலுக்கா ஆபீஸ் குமாஸ்தா தான் என்று தீர்மானிப்பதில் என்ன கஷ்டம்?

வண்டி புறப்பட்டதும் அவர் என்னுடன் பேச்சுக் கொடுக்க ஆரம்பித்தார்.

"என்ன ஸார்! உங்களை எங்கேயோ பார்த்த ஞாபகமா யிருக்கே! உங்களுக்கு என்ன, கும்பகோணமோ?"

"இல்லையே."

"இல்லையா? (ஒரு அரை நிமிஷ யோசனை) ஒரு வேளை கும்பகோணத்தில் உங்களுக்குக் கல்யாணம் நடந்ததோ? ஏதோ கல்யாணத்தில் பார்த்த மாதிரி தான் ஞாபகம் இருக்கிறது."

"இருக்காதே. நான் கும்பகோணத்துக்கே போனது கிடையாதே."

"ஒரு வேளை திருநெல்வேலியில் கல்யாணம் நடந்திருக்கலாமோ?"

"அதுவும் இருக்காதே. ஏனெனில் எனக்கு இன்னும் கல்யாணமே ஆகவில்லை."

இதைக் கேட்டதும் நமசிவாயத்தின் முகம்

சிறுத்தது. ஆம், இப்பொழுது என்னுடன் பேசிக் கொண்டிருந்தவர் தான் நமசிவாயம். ஒரு நிமிஷ நேரம் ஏதோ ஆழ்ந்த யோசனையில் இருப்பவர் போல் முகத்தைச் சுளிக்கிக் கொண்டார். பிறகு திடீரென்று ஏதோ ஞாபகத்துக்கு வந்தது போல் சூக் கொட்டினர்.

"என்ன ஞாபக மறதி ஸார்! நீங்கள் திருச்சினப்பள்ளி ராமசந்திர அய்யருக்குத் தம்பியில்லை ?" என்ருர்.

"இல்லையே. எனக்கு தமையனுரே கிடையாதே."

"அப்படியானல் திருச்சினப்பள்ளி ராமச்சந்திரய்யருக்கு நீங்கள் என்ன தான் வேண்டும்?"

ஒன்றும் வேண்டாம். என் சொந்தக்காரர்கள் ஒருவரும் திருச்சினப்பள்ளியில் கிடையாது."

"என்ன போங்கோ, ஸார்! தொண்டையில் இருக்கிறது; வாயில் வரமாட்டேன் என்கிறது. நீங்கள் யார் தான் என்று சொல்லுங்களேன்" என்று சற்றுச் சலிப்புடனேயே கேட்டார். நானும் சொன்னேன். அதைக் கேட்டதும் அவர் தேள் கொட்டினது போல் துள்ளிக் குதித்தார்.

"அடாடா! நீங்களா! என்ன ஞாபக மறதி ஸார், என்ன ஞாபக மறதி ஸார்" என்று மிகவும் வருத்தப்பட்டார்; அதாவது வருத்தப் பட்டவர் போலக் காண்பித்துக் கொண்டார்.

இதை யெல்லாம் பார்த்ததும் அவர் ஒரு

தாலுக்கா ஆபீஸ் குமாஸ்தா என்று நான் முதலில் தீர்மானித்தது பிசகு என்று நினைத்தேன். அவர் என்னைச் சினேகிதம் பண்ணிக் கொள்ள எடுத்துக் கொண்ட முயற்சிகளைப் பார்த்த போது ஐந்து வருஷங்களுக்கு முன்பு நானும் இது மாதிரி எத்தனையோ பேரைச் சினேகம் பண்ணிக் கொள்ள முயன்றது ஞாபகத்துக்கு வந்தது. அப் போது நான் ஒரு இன்ஷூரன்ஸ் ஏஜெண்டாய் இருந்தேன்.

இன்ஷூரன்ஸ் ஏஜெண்ட் உருவத்தில் வந் தால் எங்கே கண்டு பிடித்து விடுகிறார்களோ என்று தான் அவர் இந்த மாதிரி மாறு வேஷம் போட்டுக் கொண்டு வந்திருக்கிறார் என்று எனக் குத் தோன்றிற்று.

பக்கத்து ஸ்டேஷன் வந்தது. வண்டி ஒரு நிமிஷம் நின்று விட்டுத் திரும்பவும் புறப்பட்டது. அப்பொழுது திடீரென்று எனக்குப் பின்னுலிருந்து "பண்டித மோதிலால் நேருவைப் பறி கொடுத் தோமே" என்று யாரோ பிரலாபிப்பது கேட்டது. எப்பொழுதோ இறந்து போன பண்டித மோதிலால் நேருவைப் பற்றி இப்பொழுது பிரலாபிப்பது யார் என்று திரும்பிப் பார்த்தேன். ஒரு பிச்சைக்காரன் நின்று கொண்டிருந்தான். வலது கையில் இரண்டு காலணுக்களை வைத்துக் கொண்டு ஒன்றோடொன் றைத் தட்டிக் கொண்டிருந்தான். இடது கையால் இடது காதைப் பொத்திக் கொண்டிருந்தான். ஒரு

வேளை அவன் பாடிய "பாட்டை"க் கேட்க அவனுக்கே பிடிக்கவில்லை போலும் !

இந்த சமயத்தில் நமசிவாயம் திரும்பவும் பேச்சுக் கொடுக்க ஆரம்பித்தார்.

"ஏன் ஸார் இப்படிக்கதறுகிறான்? இந்தக் காலத்தில் யார் தர்மம் செய்கிறேன் என்கிறார்கள்?"

"ஆமாம், கிடையாது தான்."

"அதெல்லாம் பழைய காலம் ஸார், பழைய காலம். இப்பொழுது தான் பிச்சைக்காரர்களைக் கண்டால் உதைக்கிறேன் என்கிறார்களே. ஏதாவது, சுவாமி, தெய்வம் என்று பயம் இருந்தால் தானே ஸார், பிச்சை போடப் போகிறார்கள்."

"ஆமாம் நீங்கள் சொல்லுவது வாஸ்தவந் தான்."

"தெய்வத்துக்கே ஒன்றும் செய்யமாட்டார்கள், இவர்களா பிச்சைக்காரர்களுக்குப் போடப் போகிறார்கள்?"

"எல்லாம் செய்ய வேண்டியது தான். நாம் இரண்டு பேருக்குச் செய்தால் தானே இரண்டு பேர் நமக்குச் செய்வார்கள்" என்று ஒரு வார்த்தையைப் போட்டு வைத்தேன் நான்.

"இரண்டு பேருக்குச் செய்யவாவது! சினிமா, டிராமா என்றால் பணத்தைக் கொண்டுபோய்க் கொட்டுவான். ஏதோ ஒரு சுவாமி, உற்சவம்

தேர், திருவிழா என்று சொல்லட்டும், வீட்டில் போய் ஒளிந்து கொள்ளுவான்."

"முட்டாள் தான் அப்படிப் பண்ணுவான். மனுஷாளுக்குச் சொல்லுகிற வார்த்தைதானே தெய்வத்துக்கும்? தெய்வத்துக்கு நாம் ஏதாவது செய்தால்தானே தெய்வமும் நமக்கு ஏதாவது செய்யும்" என்றேன் நான்.

"நீர் என்னமோ விஷயம் தெரிந்தவாளா யிருக்கிறீர். அதனுல் தான் அப்படிச் சொல்லு கிறீர். ஆனுல் எல்லாருமே அப்படி இருக்கிறுர் களா, என்ன? இதோ பாருங்கள், நானும்தான் நாலு நாளாக இந்தச் சென்னைப் பட்டணத்தில் அலையாத அலைச்சல் கிடையாது. ஒத்தன் ஒரு செல்லாக் காசு கொடுக்க வேண்டுமே" என்று சொல்லிக் கொண்டே தம் சட்டைப் பையிலிருந்து ஒரு மஞ்சள் கடிதத்தை எடுத்து நீட்டினுர்.

நுணலும் தன் வாயால் கெடும் என்னும் பழமொழி என் விஷயத்தில் உண்மையாய் விட் டது. அவர் கொடுத்த மஞ்சள் கடிதத்தை வாங்கிப் பார்த்தேன். அது "பூலோக கைலாசம்" என்று கூறப்படும் பொட்டல் மங்கலத்தில் எழுந்தருளி யிருக்கும் ஆனந்த நடராஜ ஸ்வா மிக்கு ஏதோ ஒரு சுபயோக, சுபகரண வேளை யில் அஷ்ட பந்தன மகா கும்பாபிஷேகம் நடக்கப் போகிற தென்றும், அதற்கு திரவிய சகாயம்

செய்து பகவத் கிருபைக்குப் பாத்திரமாக வேண்டு மென்றும் கண்டிருந்தது.

"ராமா, இப்படியும் ஆமா" என்று நான் நினைத்துக் கொண்டிருக்கையில் நமசிவாயம் தமது முப்பத்திரண்டு பற்களையும் காட்டிக் கொண்டே ஒரு நோட்டுப் புஸ்தகத்தை நீட்டினர். வேறு வழி யின்றி அந்த நோட்டுப் புஸ்தகத்தை வாங்கி, அதில் என் கையெழுத்தைப் போட்டதோடு, அவர் கையில் ஒரு முழு ரூபாயையும் தூக்கிக் கொடுத் தேன்.

பிழைக்க வழி தெரியாது எத்தனையோ பி. ஏக்களும், எம். ஏக்களும் திண்டாடுகிறார்களே, நமசிவாயத்துக்குப் பிழைக்கும் வழிகள், ஒன்று அல்ல, இரண்டு அல்ல, எத்தனையோ தெரியும். இந்த வழிகளைப் பிறருக்குச் சொல்லிக் கொடுப்பதே ஒரு பிழைக்கும் வழியாக அவர் கொண்டிருக்கலாம். ஆனல் என்ன காரணத்தினலோ கொஞ்ச காலத் துக்கு முன் தம்முடைய கடன்காரர்களுக்கு மஞ்சள் கடிதத்தை நீட்டியவர் இப்பொழுது வருகிறவர்கள் போகிறவர்கள் எல்லாருக்கும் மஞ்சள் கடிதத்தை நீட்டுவது என்று வைத்துக் கொண்டிருக்கிறார். இப் பொழுது என்னிடம் ஒரு மஞ்சள் கடிதத்தை நீட்டி ஒரு ரூபாய் பெற்றுக் கொண்டாரே, அது தான் அவர் பிழைப்பதற்காகக் கையாளும் வழி!

என்ன கேட்கிறீர்கள்....ஆம், இதுவரையில் அவர் சேகரித்த பணம் எதுவையும் கும்பாபி

ஷேகத்துக்கு அனுப்பவில்லை தான். அதற்கு அவர் பேரிலும் பிசகு இல்லை. அவர் செலவுக்குக் கண்டு மிஞ்சினால் தானே அனுப்புவார்! இந்தப் பணம் சம்பாதிப்பதற்குத் தான், அவருக்குப் பத்து இன்ஷ்யூரன்ஸ் ஏஜெண்டுகளின் சாமர்த்தியம் வேண்டியிருக்கிறதே!

ஒரு மாதம் கழிந்திருக்கும். நமசிவாயத்தைத் திரும்பவும் ரயிலில் சந்தித்தேன். அவர் என்னை மறந்து விட்டார் என்று தோன்றிற்று. ஏனெனில் திரும்பவும் முன்போல், "என்ன ஸார்! உங்களை எங்கேயோ பார்த்த ஞாபகமா யிருக்கே! உங்களுக்கு என்ன கும்பகோணமா!" என்று தமது பாடத்தை ஆரம்பித்தார். நான் அவரை மட்டந் தட்ட எண்ணி "கும்பகோணம் இருக்கட்டும். கும்பாபிஷேகப் பத்திரிக்கை தானே கொண்டு வந்திருக்கிறீர்கள்? அன்றைக்கு நான் ஒரு ரூபாய் கொடுத்தேனே" என்றேன்.

இதைக் கேட்டதும் நமசிவாயம் திடுக்கிட்டுப் போவார் என்று நினைத்தேன். ஆனால் அவருக்குப் பதில் நான் திடுக்கிட வேண்டி யிருந்தது. ஏனெனில் அவர், "இது வேறு கோவில் கும்பாபிஷேகம் ஸார்" என்று சொல்லிக் கொண்டே தமது முப்பத்திரண்டு பற்களையும் மற்றொரு மஞ்சள் கடிதத்தையும் காட்டினார்.

கடைசியில் ஒரு யோசனை தோன்றவே அவருக்கு ஒரு பெரிய கும்பிடு போட்டு, "ஸ்வாமி!

தயவு செய்து தாங்கள் என்னை மன்னிக்க வேண்டும். இம்மாதிரி அடிக்கடி பகவத் கிருபைக்குப் பாத்திரமாகிக் கொண்டே வந்தேனுனல் நானும் கூடிய சீக்கிரம் தங்களுக்குப் போட்டியாக இந்தத் தொழிலில் இறங்க வேண்டியது தான்" என்றேன்.

இதுவும் ஒரு பிரகிருதி !!

# குண்டுத் தாத்தா

குண்டுத் தாத்தாவின் நிஜப் பெயர் என்னமோ, எனக்குத் தெரியாது. ஊரிலேயே ஒருவருக்கும் தெரியாது என்று நினைக்கிறேன். "குண்டுத் தாத்தா" என்ற பெயராலேயே அவர் ரொம்ப காலமாக அழைக்கப்பட்டு வருகிறார். ஆனால் இந்தப் பெயர் அவருக்கு எதற்காகக் கொடுக்கப் பட்டது என்றுதான் புரிய வில்லை. ஏனெனில் குண்டுத் தாத்தாவைப் போல் ஒடிசலான பேர் வழியை நான் இதுவரையில் பார்த்ததில்லை. ஒரு வேளை குண்டுத் தாத்தாவின் மனைவி பாட்டி பர்வதத்தம்மாளைப் பார்த்து விட்டுத்தான் அவருக்கு இந்தப் பெயர் கொடுக்கப் பட்டதோ, என்னமோ!

குண்டுத் தாத்தா எந்தக் காரியத்தைச் செய்தாலும் நாள், வேளை பார்க்காமல் செய்ய மாட்டார், பிறரையும் செய்யவிட மாட்டார். அது சின்னக் காரியமா யிருந்தாலும் சரி, பெரிய காரியமா யிருந்தாலும் சரி, அவசரக் காரியமா யிருந்தாலும் சரி, தாமசக் காரியமா யிருந்தாலும் சரி. "நாள் நன்று யிருக்கா, வேளை நன்றுயிருக்கா? சரி, காரியத்தை ஆரம்பி. நாள் நன்றுயில்லையா, வேளை நன்று யில்லையா? சரி, காரியத்தை ஆரம்பிக்காதே"—இது தான் அவருடைய வாழ்க்கைத் தத்துவம்.

இதனால் எப்பொழுது பார்த்தாலும் அவர் பக்கத்தில் ஒரு பஞ்சாங்கம் விளங்கிக் கொண்டே இருக்கும். சாப்பாட்டு வேளை, பூஜை வேளை தவிர பாக்கி நேரமெல்லாம் திண்ணையில் உட்கார்ந்து தமது உச்சிக் குடுமி இருக்க வேண்டிய இடத்தைத் தடவிக் கொடுத்துக் கொண்டே பஞ்சாங்கத்தைப் பார்த்து நல்ல நாள் சொல்லுவதில் கழித்துக் கொண்டிருப்பார்.

குடும்பம் பெரிய குடும்பம். தாத்தாவுக்குப் பிள்ளைகள், பெண்கள், பேத்திகள் எல்லாரும் ஏதேஷ்டமாக உண்டு. பேரன் பேத்திகள் சிலருக்குக் கல்யாணமாகி, அவர்களில் சிலருக்குக் குழந்தைகளும் பிறந்திருந்தன. இதனால் தாத்தா வீட்டில் எப்பொழுது பார்த்தாலும் யாராவது வந்து கொண்டும் போய்க் கொண்டும் இருப்பார்கள். ஒரு குழந்தைக்கு ஆண்டு நிறைவு, இன்னொரு குழந்தைக்கு அக்ஷராப்பியாசம், ஒரு பேரனுக்கு உபநயனம், இன்னொரு பேரனுக்குக் கல்யாணம் என்று இந்த மாதிரி ஏதாவது விசேஷங்கள் வந்து கொண்டேயிருக்கும். இது எல்லா வற்றிற்கும் தாத்தா நல்ல நாள் பார்த்துச் சொல்லிக் கொண்டேயிருப்பார். இன்னும் தாத்தாவின் இரண்டு பிள்ளைகள் விவசாயத்தில் ஈடு பட்டிருந்த படியால் ஏர் விட, விதை விதைக்க, நாத்து நட, அறுப்பு அறுக்க, இன்னும் இது போன்ற எல்லா விஷயங்

களுக்கும் தாத்தா நல்ல நாள் பார்த்துச் சொன்ன அன்றைக்குத் தான் செய்ய வேண்டும்.

தாத்தா வீட்டுத் திண்ணையில் எப்பொழுது பார்த்தாலும் கூட்டம் இருந்து கொண்டே இருக்கும். நிஜமாகவே நல்ல நாள் பார்த்துக் கொள்வதற்கு நாலு பேர் வந்திருந்தார்களானல், தாத்தாவைக் கேலி பண்ணுவதற்காக நாற்பது பேர் வந்திருப்பார்கள்.

"தாத்தா! கையில் ஒரு தம்படி காசு கிடையாது. எங்கேயாவது கொள்ளை யடிக்கலாம் என்று பார்க்கிறேன். அதற்கு ஒரு நல்ல நாள் பார்த்துச் சொல்லுங்களேன்" என்று கேட்பார் ஒரு ஹாஸ்யப்பிரியர்.

"தாத்தா! கொழுக்கட்டை என்றால் எனக்கு உயிர். ஆனல் ஆத்துக்காரியிடம் கொழுக் கட்டை என்று சொல்லப்போனல், கொள்ளிக் கட்டையை எடுத்துக் கொண்டு வந்து விடுவாள். நீங்கள் ஒரு நல்ல நாள் பார்த்துச் சொல்லுங் களேன். நான் கேட்டதற்கு இல்லை என்னமல் அவள் கொழுக் கட்டை பண்ணித் தரவேண்டும்" என்று நையாண்டி பண்ணுவார் ஒரு கொழுக் கட்டையின் அடியார்க் கும் அடியார்.

"தாத்தா, தாத்தா! பழைய அமுது சாப்பிடு கிறதற்கு ஒரு நல்ல வேளை பார்த்துச் சொல்லுங் களேன்" என்று கேலி காட்டுவான் ஒரு வாண்டுப் பயல்.

தாத்தா இதை யெல்லாம் சட்டை பண்ணு வதில்லை. "சுத்த அசத்துக்கள்! இதுகள் என்ன கண்டதுகள்! நாள் பண்ணுவது நல்லவன் பண்ண மாட்டான். பெரியவாள் காலத்திலிருந்தே இந்த மாதிரி எந்தக் காரியத்துக்கும் நாள் நட்சத்திரம் பார்க்கிறது என்று ஏற்பட்டிருக்கிறது. ஏதோ நல்ல நாள் பார்த்து நாம் காரியத்தை ஆரம்பித்து விட்டால் அப்புறம் ஈஸ்வரோ ரக்ஷது" என்று கூறுவார்.

இம்மாதிரி இருந்தது தாத்தாவுக்கு என்னமோ சௌகரியமாய்த்தான் இருந்தது. நம்போன்ற சாதாரண ஜனங்கள் நினைப்பது போல் மழை பெய் திருக்கிறது, அதனால் உழ ஆரம்பிக்க வேண்டும், பயிர் முற்றிவிட்டது, அதனால் அறுப்பு அறுக்க வேண்டும், பத்து மணிக்கு வண்டி புறப்படுகிறது அதனால் 9–45க்கு ஸ்டேஷனில் இருக்க வேண்டும் என்ற இப்பேர்ப்பட்ட கவலைகளே அவருக்குக் கிடையாது. ஆனால் அவரை நல்ல நாள் பார்த்துச் சொல்லும்படி கேட்கப் போனவர்கள் பாடுதான் திண்டாட்டமாகப் போய் விட்டது.

ஊரில் உள்ள எல்லாருமே அவரிடம் நல்ல நாள் கேட்கப் போவதுண்டு.

"தாத்தா! ஒரு உத்தியோகத்துக்கு ஒரு ஆபீஸில் கூப்பிட்டு அனுப்பி யிருக்கிறான். நாளைக்குப் போய்ப் பார்க்கணும். ஒரு நல்ல வேளை

பார்த்துச் சொல்லுங்கோ" என்று ஒரு வேலை யில்லாப் பட்டதாரி கேட்பான்.

"நாளைக்குப் பரணி, கார்த்திகையா யிருக்கிறது. நாள் நன்ரு யில்லையே, அப்பா. இன்னிக் குத்தான் அமாவாசையும் அதுவுமாய் நிறைந்த நாளா யிருக்கிறது. இன்னிக்குப் போய்ப் பாரேன்" என்பார் தாத்தா.

"இன்னிக்கி ஞாயிற்றுக்கிழமை யாச்சே தாத்தா, இன்னிக்கி எப்படிப் போய்ப் பார்க்க முடியும்?" என்று குறைப் படுவான் அந்த வாலிபன்.

"ஞாயிற்றுக் கிழமையாய் இருந்தால் என்ன? ஞாயிற்றுக் கிழமையும் அமாவாசையுமாய் இருப் பதனால் தானே நாள் நன்ரு யிருக்கிறது என்று சொன்னேன். இன்னிக்கி மாத்திரம் நீ போய்ப்பார். வேலை கிடைக்கா விட்டால் என்னை ஏன் என்று கேளு" என்று பஞ்சாங்கத்தை உற்றுப் பார்த்துக் கொண்டே தாத்தா பதில் சொல்லுவார்.

தாத்தா எப்பொழுதாவது உத்தியோகம் பார்த் திருந்தால் தானே ஞாயிற்றுக் கிழமை யன்று ஆபீஸ் துரையைப் பார்க்க முடியாது என்று தெரியப் போகிறது? வாலிபன் 'ஊச்' கொட்டி விட்டுப் போய் விடுவான்.

"குழந்தைக்கு வளை அடுக்கவேண்டும். ஒரு நல்ல நாள் பார்த்துச் சொல்லுங்கோளேன்" என்று கேட்க வருவாள் ஒரு பாட்டி.

தாத்தா "குழந்தை"யின் நட்சத்திரத்தை விசாரித்துக் கொண்டு பஞ்சாங்கத்தைப் புரட்டு வார். வாய்க்குள் என்னென்னமோ கூட்டல், கழித்தல் எல்லாம் சொல்லிப் பார்த்துக் கொள்வார். கடைசியில், "இன்னும் இரண்டு மாசத்துக்கு நல்ல நாளே இல்லையே, அம்மா. அதுக்கு மேலே வேணு மானால் பார்த்துச் சொல்லுகிறேன்" என்பார்.

"ஐயோ, பிராம்மணா! இன்னும் இரண்டு மாசத்துக்கு மேலே ஆனால் அதுக்குள்ளே குழந்தை பிரசவிச்சுடுவாளே" என்பாள் பாட்டி.

"அதனால் என்ன? குழந்தைக்கும் சேர்த்து வளை அடுக்கி விட்டால் போகிறது" என்பார் தாத்தா.

இதனால் தாத்தா பார்த்துச் சொல்லும் நல்ல நாள் எல்லாமே இந்த மாதிரி எக்கச் சக்கமாக முடியும் என்று அர்த்த மல்ல. சில சமயங்களில் அவர் பார்த்துச் சொல்லும் நல்ல நாளில் காரியங் களை ஆரம்பித்தால் அவை சித்தியாவது முண்டு. அப்படி ஆகாத போனால், அதற்கு ஏதாவது காரணம் உண்டென்றால், அது தாத்தா, பிறருக்கு நல்ல நாள் பார்த்துச் சொல்லு முன், நாள் பார்க்க அன்று தமக்கு நல்ல நாளா என்று பார்க்காதது தான் என்று நினைக்கிறேன்.

ஒரு தடவை நாமும் தான் தாத்தாவைக் கண்டு ஒரு கட்டுரை எழுத நல்ல வேளை தெரிந்து கொண்டு வருவோமே என்று கிளம்பினேன்.

நான் போன சமயம் குண்டுத் தாத்தாவுக்கும் பாட்டி பார்வதத்தம்மாளுக்கும் பெரிய வாக்கு வாதம் நடந்து கொண்டிருந்தது.

"இதோ பாருங்கோ, உங்களைத் தானே! குழந்தை அரை நாழியாய்ப் பரீட்சைக்குப் போகணும்னு ஒத்தைக் காலில் நிற்கிறானே?" என்றாள் பாட்டி. தாத்தா அப்பொழுது வாசல் திண்ணையில் உட்கார்ந்து ஏதோ ஜபம் பண்ணிக் கொண்டிருந்தார்.

"சரி, அதுக்கு என்னை என்ன பண்ணனும் என்று சொல்லுகிறாய்?" என்று கேட்டார் தாத்தா.

"என்ன பண்ணுகிறதாவது? ஒரு நல்லவேளை பார்த்துச் சொல்லுங்கோ என்று நான் நேத்தியே பிடிச்சு அடிச்சுக்கிறேன்—"

"நல்ல வேளையாவதடி, நல்ல வேளை! நான் தான் நாளே நன்னாயில்லை, பரீட்சைக்குப் போனால் தேறாது என்று சொன்னேனே?"

"நன்னா....யிருக்கு நீங்க சொல்றது! ஏதாவது தறுக்குப் பிறுக்கு என்று சொல்லாதேங்கோ. குழந்தை இரண்டு வருஷமா பரீட்சை தேறாமல் இந்தத் தடவை திரும்பவும் போறான். நாள் நன்றாயில்லை யென்று பரீட்சைக்குப் போகாமல் இருக்க முடியுமா? எல்லாம் இன்னிக்குள்ளே எப்ப நல்ல வேளை இருக்கிறது என்று பாருங்கோ" என்று பாட்டி சற்று அதிகார மாகவே சொன்னாள்.

தாத்தா ஏதோ முனகிக் கொண்டே பஞ்சாங்

கத்தை எடுத்துப் புரட்டிப் பார்த்தார். கொஞ்சம் நாழி கழித்து, "இந்தாடி, சும்மா நச்சரிக்காதே. இன்னிக்கி காலம்பர பதினேரு நாழிகைக்கு மேல் வேளை நன்றாயிருக்கிறது. பதினேரு நாழிகைக்கு மேல் சகுனம் பார்த்து அனுப்பு" என்று சற்றுக் கடுப்பாகவே கூறினர்.

இது வரையில் தாத்தா முகத்தையே பார்த்துக் கொண்டு, பரீட்சைக்கு டிபன் பாக்ஸுமாய் கையுமாகத் தயாராக நின்று கொண்டிருந்த பேரன் இதைக் கேட்டதும் திடுக்கிட்டான்.

"அப்படின்ன பத்து மணிக்கு மேலல்லவா ஆகிறது?"

"ஆன என்னடாப்பா! பத்து மணிக்கு மேல் தான் போயேன்" என்று கொஞ்சுதலாகச் சொன்னள் பாட்டி.

"என்ன பாட்டி, நீயும் உளறுகிருய்! பத்து மணிக்கு மேல் போனல் பரீட்சை எழுத விடமாட்டார்களே" என்று அழுதான் பையன்.

இப்படிப் பையன் வெளிக்கு அழுதானே யொழிய உள்ளூர அவனுக்குச் சந்தோஷம் தான். ஏனெனில் எப்படியும் பத்து மணிக்குப் பரிட்சைக்குப் போயாக வேண்டும். தாத்தாவோ அது நல்லவேளை இல்லை யென்று சொல்லி விட்டார். ஆகவே நாளைக்குப் பரீட்சைத் தேரு விட்டால் வேளையின் மேல் பழியைப் போட்டு விடலாம் அல்லவா?

இந்தக் கூத்தை யெல்லாம் பார்த்ததும் எனக்கு மிகவும் பயமாய்ப் போய் விட்டது. தாத்தா பாட்டில், "கட்டுரை எழுத இந்த ஜன்மத்திலேயே நல்ல வேளை இல்லை" என்று சொல்லி விட்டால் என்ன பண்ணுவது என்று தோன்றிற்று. பேசாமல், நல்ல வேளையும் பார்க்க வேண்டும், ஒரு வேளையும் பார்க்க வேண்டாம், சுந்தரி என் மீது கோபித்துக் கொண்டு பேசாதிருக்கும் வேளை யெல்லாம் கட்டுரை எழுத நல்ல வேளை தான் என்று தீர்மானித்துக் கொண்டு திரும்பி வந்து விட்டேன்.

# ஜம்பு

ஜம்புநாதய்யர் எதிர் வீட்டுக்குக் குடி வந்து இரண்டு மாதங்கள் ஆகியும் அவருடைய பரிச்சயம் ஒரு நாள் ரயில்வே ஸ்டேஷனில் தான் கிடைத்தது. நான் ரயிலுக்காகக் காத்துக் கொண்டிருந்தேன். அந்த சமயம் அவரும் அங்கு வந்து சேர்ந்தார். தலையில் ஒன்று, வலது கையில் ஒன்று, இடது கையில் ஒன்று இந்தக் கக்கத்தில் ஒன்று அந்தக் கக்கத்தில் ஒன்று என்று இந்த மாதிரி எல்லா மூட்டைகளையும் தாமே தூக்க மாட்டாமல் தூக்கிக் கொண்டு வந்து சேர்ந்தார்.

என்னைக் கண்டதும், "அயோக்கியப் பயல்! காலம்பர வண்டியைக் கட்டிண்டு வீட்டுக்கு வாடான்னேன். தடிப்பயல் வரவே யில்லை. இவனை நம்பிண்டு எத்தனை நாழி காத்திண்டிருக்கிறது, அயோக்கியப் பயல்" என்று சீறினார்.

இதைக் கேட்டதும், அவர் ஒரு வண்டிக் காரனுக்குச் சொல்லி வைத்திருந்தா ரென்றும், அவன் இவரை சமயத்தில் மோசம் செய்து விட்டா னென்றும், அதனால் தான் சாமான்களைத் தாமே தூக்கிக் கொண்டு வருகிறாரென்றும் நான் ஊகித்துக் கொண்டேன். ஆகவே அவருக்கு ஆறுதலாக இரண்டு வார்த்தைகள் சொல்லி வைத்தேன்.

"இந்த வண்டிக்காரன்களே இப்படித்தான், ஸார்! சமயத்துக்கு உதவ மாட்டான்கள்" என்றேன்.

இதற்குள், "சாமி, சாமி" என்று நாலு போர்ட்டர்கள் அவரைச் சூழ்ந்து கொண்டு ஆளுக்கொரு மூட்டையைப் பிடித்து இழுக்க ஆரம்பித்து விட்டார்கள்.

"போங்கடா, ஒத்தன் தயவும் வேண்டாம்" என்று சொல்லிக் கொண்டே தம் மூட்டைகளால் ஆளுக்கொரு இடி இடித்துக் கொண்டு ரயில் ஏறினார் ஜம்புநாதய்யர்.

**ப**த்து நாட்கள் கழித்து ஜம்புநாதய்யர் என்னைக் கூப்பிட நான் அவர் வீட்டுக்குப் போயிருந்தேன். ஆனால் அவர் என்னுடன் பேச ஆரம்பித்தாரோ, இல்லையோ, என்னைத் தூக்கி வாரிப் போட்டது! இருபது ரூபாய் வாடகை கொடுக்கும் அந்தஸ்தில் உள்ள ஒருவர் மோட்டார் கார் வாங்குவதைப் பற்றி யோசித்துக் கொண்டிருக்கிறாரென்றால், யாரைத் தான் தூக்கி வாரிப் போடாது?

"ஏன் ஸார், கார் என்னென்னமோ 'மேக்' வச்சிண்டிருக்கானே, எது தேவலேன்னு உங்களுக்குத் தோண்றது? பசங்கள் எல்லாம் பள்ளிக்கூடத்திற்குப் போகிறதற்குத் திண்டாடுகிறதுகள். ஒரு கார் தான் வங்கிப் போடலாமே என்று பார்க்கிறேன்" என்று பேச்சை ஆரம்பித்தார்.

"அதுக்கென்ன, வாங்கினாப் போச்சு.

போர்ட் கார் தான் விலை சரசம்னு சொல்லிக்கிரு. அத்தோடு மைலேஜூம் அதுதான் ஜாஸ்தி கொடுக்கிறதாம்" என்றேன்.

"தூ, தூ, தூ! அதெல்லாம் உதவாது ஸார்! 'சீப்' காரைப் பற்றியே நம்மிடம் பேசக் கூடாது. ஏதோ செலவழிக்கிறது தான் செலவழிக்கிறோம்; இன்னும் ஆயிரம், இரண்டாயிரம் கூடப் போட்டு விட்டுப் போகிறோம். பணமா முக்கியம்? சுகம்னு முக்கியம்? எங்காத்துக்காரரும் ஆபீசுக்குப் போகிறார் என்று கார் வைத்துக் கொள்கிறதா, என்ன?"

"அப்படியானல் நல்ல காரே வாங்கிக்கொண்டால் போகிறது. ஏதோ குறைந்த விலையில் கேட்கிறேளோ என்று நினைத்து போர்ட் என்று சொல்லி வைத்தேன். நல்ல உசத்திக் கார் தான் வேண்டுமென்றால் நாஷ், பியூக் செவ்ரலெட் என்று இந்த மாதிரி எத்தனையோ வகை இருக்கின்றன" என்றேன்.

"போர்ட் கார் வாங்குங்கள்" என்று முதலில் சொல்லி விட்டோமே என்று எனக்கு வருத்தம். ஆனல் ஒரு விதத்தில் சந்தோஷம். பழைய விலைக்குக் கார் வாங்கப் போகிறாரோ என்று நினைத்துக் கொண்டு, என் நண்பர் ஒருவர் வைத்திருக்கும் பழைய கார் ஒன்றை சிபார்சு பண்ணமல் இருந்தேனே, அதுவரையில் சந்தோஷம்!

அந்தக் கார் மயிலாப்பூரில் புறப்படும் சப்தம்,

ஜார்ஜ் டவுனில் எல்லாருக்கும் கேட்கும். இப்படி யிருந்தும் 'ஏன் ஹாரன் இல்லை' என்று போலீஸ்காரன் ஒருதடவை 'பிராசிகியூட்' பண்ணி விட்டான்!

ஜம்புநாதய்யர் கொஞ்ச நேரம் ஏதோ யோசனை பண்ணினார்.

"சரி, ஸார், உங்களுக்குத் தெரிந்த கம்பெனி ஏதாவது இருந்தால் சொல்லுங்கள். வாங்கினால் நல்ல விலையில், நல்ல காராகத் தான் வாங்கணும் என்று யோசனை. எந்தக் காரியத்திலும் 'சீப்' சாமானே நமக்கு உதவாது, ஸார். பணத்துக்கு என்ன ஸார், இன்னிக்குப் போகும், நாளைக்கு வரும். மனுஷனுக்கு சௌக்கியமனா முக்கியம்? இப்பப் பாருங்கோ, காலமே கெட்டுப் போச்சுன்னா. எந்த சாமானுக்கும் இமிடேஷன் வந்து விட்டது. வெள்ளி, தங்கம், வைரம் எதுக்கும் இமிடேஷன்! ஒண்ணும் இல்லாதவன் கூட இமிடேஷன் சாமான்களை வாங்கி வைத்துக் கொண்டு விடுகிறான். வேறு ஒன்றும் வேண்டாம், இந்தக் காரைத்தான் எடுத்துக் கொள்ளுங்களேன். கட்டை வண்டி கூடத் தேவலை போலிருக்கும், அப்படி ஒன்று, இரண்டு கார்கள் இருக்கின்றன. அவற்றையும் இரண்டு பேர் வாங்குகிறார்கள்—"

"ஆமாம், கார் வாங்கணும் என்று சொல்லுகிறீர்களே, வைத்துக் கொள்ள இடம் வந்து—"

"அதற்குத் தான், ஸார், நான் உங்களைக் கூப்

பிட்டு அனுப்பினது. நானும் ஒரு நல்ல வீடாகத் தான் பார்த்துக் கொண்டு இருக்கிறேன். ஏதோ தற்காலிகமாக இந்த வீட்டில் இருக்கிறேனே யொழிய, இந்த மாதிரி வீட்டில் நமக்கு இருந்து பழக்கமா, என்ன? கார் கூட ஒரு நல்ல வீட்டைப் பார்த்துக் கொண்டு தான் வாங்குவது என்று தீர்மானித் திருக்கிறேன். ஆமாம், அடுத்த தெரு வில் இருக்கும் செட்டியார் பங்களா விலைக்கு வருகிறதாமே? அது என்ன விலைக்கு வரும்? உங்களுக்கு ஏதாவது தகவல் தெரியுமா?"

"ஏதோ பதினைந்தாயிரமோ, பதினாறாயிரமோ சொல்லிக் கொண்டு இருக்கிறார்கள்."

"பதினைந்தாயிரமா? பத்தாயிரத்துக்கு வந் தால் வேண்டுமானால் வாங்கிப் போடலாம் என்று பார்க்கிறேன். செட்டியார் என்ன, உங்களுக்குத் தெரிந்தவர் தானே?"

"தெரிந்தவர் என்ன? ஏதோ கொஞ்சம் பழக்கம், அவ்வளவு தான்."

"அப்படியானால் நீங்கள் தான் சொல்லிப் பாருங்களேன், ஸார்! ஏதோ பன்னிரண்டாயிரம் வரையில் வேண்டுமானால் பார்க்கலாம்."

"சரி, நான் கேட்டுப் பார்க்கிறேன். இப் பொழுது விடை பெற்றுக் கொள்ளுகிறேன். இன்னொரு சமயம் பங்களா சமாசாரம் விசாரித்துக் கொண்டு வந்து சொல்லுகிறேன்" என்று சொல்லிக் கொண்டே எழுந்திருக்கப் போனேன்.

"இருங்கள், ஒரு நிமிஷம் இருங்கள். ஏதாவது சாப்பிட்டு விட்டு போங்கள்" என்று அவர் சொல்லி விட்டு, உள்ளே சென்று திரும்பினர்.

கொஞ்சம் நாழி கழித்து இரண்டு பித்தளை டம்பளரில் ஆளுக் கொரு டம்பளர் காப்பி அவர் மனைவி கொண்டு வந்து வைத்தாள். அதைக் கண்டதும் ஜம்புநாதய்யர் 'சில்' லென்று எரிந்து விழுந்தார்.

"வீட்டுக்குக் குடி வந்து இரண்டு மாதத்துக்கு மேல் ஆகப் போகிறது. இன்னுமா வெள்ளிப் பாத்திரங்களைப் பெட்டியிலிருந்து எடுக்க வில்லை? வெள்ளிப் பாத்திரங்களை எடுத்துப் புழங்கினல் தேய்ந்தா போய் விடும்? அப்படித் தேய்ந்தால் தான் தேயட்டுமே. புதுசா வாங்கினல் போகிறது" என்று கத்தினர்.

இதைச் சொல்லிவிட்டுக் காப்பியை ஒரு வாய் குடித்தார்.

"என்னடி இது! ஓவல்டின் போடு என்று சொல்லி விட்டு வந்தேன், காப்பி போட்டிருக்காயே? இந்த தரித்திரம் பிடித்த வீட்டுக்குக் குடிவந்ததிலே யிருந்து உனக்கும் தரித்திர புத்தி வந்து விட்டாற் போல் தோன்றுகிறது" என்று கடிந்து கொண்டார். அவர் மனைவி பதில் சொல்லாமல் உள்ளே போய் விட்டாள்.

அவர் மனைவி உள்ளே போனதும் அவர் பையன் வெளியே வந்தான். "ஏதாவது சில்லறை

இருந்தால் கொடு, அப்பா. கறி காய் வாங்கிக் கொண்டு வருகிறேன்" என்றான். இதைக் கேட்டதும் ஜம்புநாதய்யர், "போடா, கறி காயும் வேண்டாம், கிறி காயும் வேண்டாம். ஒரு ரஸத்தை வைத்துத் துவையலை அரைக்கச் சொல்" என்று சொல்லி என்னைப் பார்த்தார்.

"என்ன ஸார், தினமும் வடையும் பாயஸமு மாய்ச் சாப்பிட்டுச் சாப்பிட்டுத் தான் அலுத் திருக்கே, ஒரு நாளைக்குத் தான் ஹாய்யாக இருக் கலாமே என்று தான் ஒரு ரஸம் வைத்து துவையல் அரைக்கச் சொன்னேன்" என்று சொன்னார்.

அந்த சமயம் நான் உட்கார்ந்து கொண் டிருந்த நாற்காலி ஒடிந்து கீழே விழுந்தது. அத்து டன் நானும் விழுந்தேன். முதலில் நாற்காலியில் உட்காரும் போதே எனக்குப் பயமா யிருந்தது. ஆனால் அங்கிருந்த நாற்காலிகளுக்குள் அது ஒன்று தான் பாக்கி நாற்காலிகளை விடத் தேவலை என்று எனக்குத் தோன்றியதால் அதில் உட்கார்ந்தேன்.

"என்ன ஸார், இப்படிப் பழைய நாற்காலி களை வைத்துக் கொண்டிருக்கிறீர்களே?" என்று கேட்டேன்.

"இதெல்லாம் என் தாத்தா வைத்திருந்தது, ஸார். அவருக்கு என் மேல் உயிர், அவர் ஞாபக மாகத் தான் இதை யெல்லாம் வைத்திருக்கிறேன். இல்லா விட்டால் புது நாற்காலிகள் வாங்கிப் போட நமக்கு முடியாதா, என்ன?" என்றார்.

அவர் வைத்து கொண்டிருந்த நாற்காலி களையும், மேஜைகளையும் பார்க்கும் போது அவர் சொன்னது நிஜம் தான் என்று தோன்றும். ஆனல் அவர் தாத்தா என்று குறிப்பிட்டது அவருடைய கொள்ளுத் தாத்தாவையா, அல்லது அந்தக் கொள் ளுத் தாத்தாவின் கொள்ளுத் தாத்தாவையா என்பது தான் சந்தேகம்!

பத்து நாட்கள் கழிந்திருக்கும். ஜம்புநாதய் யரைப் பார்ப்பதற்காகப் போயிருந்தேன். வாசல் திண்ணையில் ஒருவரும் இல்லை. உள்ளே அவர் மனைவி ஏதோ இரைந்து பேசினது மட்டும் கேட்டது.

“நன்னு யிருக்கு நீங்க அடிக்கிற கூத்து! இன்றைய செலவுக்குக் கையில் ஒரு காலணு கிடை யாது. வர சம்பளத்தைக் கன்னு பின்னு என்று செலவழிக்கிறது. அப்புறம் என்னடான்னு ஊரில் இருக்கிறவனை யெல்லாம் கூட்டி வைத்துக் கொண்டு கார் வாங்கட்டுமா, பங்களா வாங்கட்டுமா என்று வம்பு பேசுகிறது! கார் வாங்கற மூஞ்சியைப் பார்க்க வில்லை, மூஞ்சியை!” என்று அவர் சகதர்மிணி அவருக்கு சகஸ்ரநாம அர்ச்சனை செய்து கொண் டிருந்தாள்.

இப்படியும் ஒரு பிரகிருதி!!

# சாப்பாட்டு ராமன்

“நான் மாட்டேன், மாட்டவே மாட்டேன், மாட்டவே மாட்டவே மாட்டவே மாட்டேன்” என்று எவ்வளவோ படித்துப் படித்துச் சொன்னேன். ஆனால் குப்பன் கேட்பதா யில்லை.

“அதெல்லாம் முடியாதடா! போனல் இரண்டு பேரும் சேர்ந்து தான் கல்யாணத்துக்குப் போக வேண்டும். இல்லாவிடில் இரண்டு பேரும் போக வேண்டாம்” என்றான் குப்பன்.

“இந்தாடா குப்பா! வீணாக என்னைத் தொந்தரவு படுத்தாதே. உன்னோடு கல்யாணத் துக்கு நான் வரவே மாட்டேன். நீ சாப்பாட்டு ராமன். உனக்குத் தான் மானம், வெட்கம் ஒன்றும் கிடையாது, உன்னால் நானும் அவமானப்பட முடியுமா, என்ன?” என்றேன்.

குப்பன் என் ஆப்த நண்பன். பெரிய சாப்பாட்டு ராமன். சாப்பாட்டு விஷயங்களில் அவனுக்குத் தெரியாத விஷயம் கிடையாது. என் நண்பர் தம் வீட்டுக் கல்யாணத்திற்கு எங்கள் இருவரையும் கூப்பிட்டிருந்தார். எனக்குக் குப்பனுடன் போகச் சம்மதமே இல்லை. ஆனால் குப்பனா விடுபவன்? வந்த அவமானம் வரட்டும் என்று ஒருவாறு சம்

மதித்தேன். இரண்டு பேரும் கல்யாணத்திற்குப் போனோம்.

எல்லாரும் சாப்பிட உட்கார்ந்தோம். குப்பன் என்னுடன் உட்காராமல் எனக்கு மேல் கையில் பத்து இலைக்கு அப்பால் போய் உட்கார்ந்தான்.

எல்லாரும் தமாஷாகப் பேசிக் கொண்டும், சிரித்துக் கொண்டும் சாப்பிட்டோம். இப்படிச் சாப்பிட்டுக் கொண்டிருக்கையில் ரஸம் கேட்க வேண்டிய சமயம். அது நம் பக்கத்துக்கு வரவே யில்லை! "ரஸம்" "ரஸம்" என்று கூச்சல் போட்டோம். பிரயோசன மில்லை! விஷயம் என்ன வென்று விசாரித்ததில் இருந்த ரஸமெல்லாம் குப்பன் இலைக்கே போய் விட்டது என்று சொன்னார்கள். குப்பனை மேல் கையில் உட்கார வைத்தது எவ்வளவு பிசகு என்பது அப்பொழுது தான் எனக்குத் தெரிந்தது.

கடைசியில் ஒரு வகையாக ரஸம் வந்தது, சாப்பிட்டு முடித்தோம் என்று வைத்துக் கொள்ளுங்களேன்.

சாப்பாடு ஆனதும் எல்லாரும் வாசல் திண்ணையில் உட்கார்ந்து ஆனந்தமாய் சந்தனம் பூசி, வெற்றிலை போட்டுக் கொண்டிருந்தோம். நான் குப்பன் வாயைக் கிளறினேன்.

"என்னடா குப்பா! உன்னைக் கல்யாணத்துக்குக் கூட்டிக் கொண்டு வந்ததே பெரிய பிசகு என்று தோன்றுகிறதே! என்னடா நமக் கப்புறம்

பத்து பேர் சாப்பிடணுமே என்று கூட கவனிக்கா மல் எல்லா ரஸத்தையும் நீயே குடித்து விட்டாயே" என்றேன்.

"என்னடா ரஸம்! இதெல்லாம் ஒரு ரஸத்தில் சேர்த்தியா! ரஸம் சாப்பிட வேணுமானால்—"

"ஆத்துக்காரி பண்ணிச் சாப்பிட வேண்டு மாக்கும்" என்று ஒரு நண்பர் இடை மறித்தார்.

"போம் ஐயா, போம்! உம்மைப் போல என்னை யும் பெண்டாட்டி தாஸன் என்று நினைத்துக் கொண்டீரா? ரஸம் சாப்பிட வேண்டுமென்றால் மைசூரில் சாப்பிட வேண்டும். இங்கேயும் என்ன மோ பண்ணுகிறானே ரஸம் என்று?"

"இந்த ரஸத்தையே நீ ஒரு பொட்டு இல்லாமல் அடித்து விட்டாயே. இன்னும் மைசூரில் கல்யா ணத்துக்குப் போனால் உன் ஒருவனைத்தான் சாப் பிட உட்கார வைக்க வேண்டும்" என்றேன் நான்.

குப்பன் சமாசாரமே இப்படித்தான். சாப்பிடு கிறது என்னமோ வஞ்சனை யில்லாமல் பிறருக்கும் மிச்சம் வைக்காமல் சாப்பிட்டு விடுவான். ஆனால் அதைக் குற்றம் சொல்லுகிறது மட்டும் கொஞ்சம் நஞ்சமா யிராது.

இந்த சமயம் வீட்டுக்காரர் வெளியே வந்தார்.

"என்ன குப்பய்யர்! சன்மயல் எல்லாம் எப்படி?" என்று விசாரித்தார்.

குப்பன் ஒரு பெரிய சாப்பாட்டு ராமன் என்று சொல்லியிருக்கிறேனா? அதனால் சாப்பாட்டைப்

பற்றி அவன் சர்டிபிகேட் கொடுத்தால் தான் எல்லா ருக்கும் திருப்தி. இதனால் எத்தனையோ சமையற் காரர்கள் குப்பனுடைய தயவைச் சம்பாதிப்பதற் காக அவனைச் சுற்றிக் கொண்டிருந்தார்கள் என்று கூடக் கேள்வி!

வீட்டுக்காரர் குப்பனுடைய முகத்தையே மிக ஆவலாகப் பார்த்தார்.

"என்ன சமையல், போங்கள்! அப்படி யொன்றும் முதல் தரம் என்று சொல்ல முடி யாது—"

"என்ன குப்பய்யர் அப்படிச் சொல்லுகிறீர்! உமக்கென்று ஸ்பெஷலாக அவியல் பண்ணச் சொன்னேனே, அது கூடவா நன்றாயில்லை?"

"என்ன அவியல் போங்கள்! அது ஒன்றும் பஸ்டு கிளாஸ் என்று சொல்ல முடியாது. நல்ல அவியல் வேண்டுமானால் மலையாளத்துக்குப் போக ணும். முன்பு ஒரு தடவை நம்ப ராமு கல்யாணத் துக்கு மலையாளத்துக்குப் போயிருந்தேன். அங்கே அவியல் பண்ணியிருந்தான். என்ன அவியல் போங்கள்! நாலு நாளும் நான் சாப்பாட்டையே தொடவில்லை. அவியலையே சாப்பிட்டுக்கொண்டிருந் தேன்."

"பாக்கிப் பேருக்கு ஏதாவது மிச்சம் வைத்தீரா, இல்லையா?" என்றார் ஒரு நண்பர்.

"அந்தக் கவலை யெல்லாம் குப்பன் ஏன் படு கிறான்? முதலில் அவனுக்காவது திருப்தி ஏற்பட்

டதா, இல்லையா என்று கேளுங்கள்" என்றேன் நான்.

"டேய் வெங்கிட்டு! நிஜத்தை சொல்லிப் பிடட்டுமா? நிஜமாகவே நாலு நாள் அவியல் சாப் பிட்டும் எனக்கு அலுக்கவில்லைடா!"

"சரி, அவியல்தான் அவ்வளவு 'தரம்' அல்ல என்று சொல்லி விட்டீர். 'ஸ்வீட்' டாவது பிடித் திருந்ததா?" என்று கேட்டார் வீட்டுக்காரர்.

"'ஸ்வீட்டா'! ஏதோ இருந்தது, அவ்வளவு தான். ஆனால் என்ன இருந்தாலும் பம்பாயில் 'ஸ்வீட்டு' கள் பண்ணுகிறார்களே, அதைப் போல ஆகுமா?"

"என்னடா குப்பா! இங்குள்ள பம்பாய் கபே யில் தினம் 'ஸ்வீட'டுகள் சாப்பிடுகிறாயே, அதைத் தான் பம்பாய் 'ஸ்வீட்'டுகள் என்று சொல்லு கிறாயா, என்ன" என்று நான் கேட்டேன்.

"என்னடா, என்னை அவ்வளவு முட்டாள் என்று வைத்து விட்டாயா? நான் பம்பாய்க்குப் போனதில்லையா? ஸ்வீட்டுகள் தான் சாப்பிட்ட தில்லையா?

"ஓ! மறந்து போய்ட்டேண்டா. கோபித்துக் கொள்ளாதே. செலக்ஷன் கிடைக்கலேன்னு பம் பாய்க்கு ஓடிப் போனாயே, அதைத்தானே சொல்லு கிறாய்?"

"என்னடா, அதுக்கப்புறம் வேலைக்குப் பிர

யத்தனம் பண்ணுவதற்காகப் பம்பாய்க்குப் போகலையா?"

"ஆமாம், ஆமாம் மறந்து போய் விட்டேன். சரி, காய்கறிகளாவது பிடித்திருந்ததா, அதுவும் சாப்பிடுவதற்கு வேறு ஏதாவது ஊருக்குப் போக வேண்டுமா?"

"நல்ல காய்கறிகள் வேண்டுமென்றால் வேறு ஊருக்குத்தான் போகணும். பங்களூரில் கிடைப்பது போல் காய் கறிகள் இங்கு கிடைக்கிறதா, என்ன? ஒவ்வொரு கத்திரிக்காயைப் பார்த்தால் பூசணிக் காய் போல் இருக்கும். ஒண்ணும் வேண்டாம். பங்க ளூரில் பாகற்காயைச் சாப்பிட்டுப் பாரு. அது சர்க் கரை வள்ளிக் கிழங்கு போல் தித்திக்கும்."

"சரி, மேலே?"

"சாப்பிடுகிற போது தயிர் ஊற்றினானே, இதெல்லாம் ஒரு தயிரில் சேர்த்தியா? தயிர் வேண்டு மென்றால் அலகாபாத்துக்குப் போக வேண்டும்."

"நல்ல வேளை. இன்னும் வடக்கே போக வேண்டும் என்று சொல்லுவாயாக்கும் என்று பார்த்தேன்!"

"அலகாபாத்தில் தயிர் எப்படி இருக்கும் என் கிறாய். தயிர்ச் சட்டியில் தயிர் அப்படியே கட்டி கட்டியாய் இருக்கும். சட்டியைத் தவற விட்டால் சட்டி உடையுமே யொழிய தயிர்க் கட்டி உடை யாது."

"அப்படி யானால் தயிர்க் கட்டியை உளியினால்

செதுக்க வேண்டும் என்று சொல்லும்" என்றார் ஒரு நண்பர்.

"ஆமாம். நீ எப்படா அலகாபாத்துக்குப் போனாய்? எனக்குத் தகவல் தெரியாதே" என்று கேட்டேன் நான்.

"நான் போனேன் என்று எப்போ சொன்னேன்?"

"இப்பொழுது என்னமோ, தயிர்க் கட்டி, தயிர்ச் சட்டி என்றெல்லாம் சொன்னாயே?"

"இருக்கட்டுமே. எல்லாம் போய்ப் பார்த்தால் தான் தெரியுமா, என்ன? போய்ப் பார்த்த ஒருவன் சொன்னான். அதை வைத்துக் கொண்டு சொன்னேன்."

"சரி, அப்படியானால் நீ என்னமோ பங்களூர், மலையாளம் என்று சொன்னதெல்லாம் கூட கப்ஸா தான் என்று சொல்லு."

"ரொம்ப அழகா யிருக்கே! அலகாபாத் ஒன்றுக்குத் தான் நான் இன்னும் போக வில்லை. அதற்காக நான் ஒரு இடத்துக்குமே போக வில்லை என்று அர்த்தமா?" என்று கேட்டான் குப்பன்.

குப்பன் இந்த மாதிரி ஒவ்வொரு சாப்பாட்டு வஸ்துவுக்கும் ஓர் ஊர் சொல்லிக் கொண்டு போகவே, அங்கிருந்த எல்லாரும் அவனை ஆளுக்கொரு கேள்வி கேட்க ஆரம்பித்து விட்டார்கள். நாமெல்லாரும் குப்பனைப் போல் பொதுவாக சாப்பாட்டு ராமனா யில்லா விட்டாலும், ஏதாவது ஒரு

தனி வஸ்துவைப் பற்றின மட்டிலும் சாப்பாட்டு ராமன்களே அல்லவா? ஒருவருக்குத் தயிர் வடை, இன்னொருவருக்குச் சர்க்கரைப் பொங்கல், மற்றொரு வருக்குப் புளியோதரை என்று இந்த மாதிரி பிடித்த வஸ்துக்கள் கிடையாதா? ஆகவே பின் கண்ட மாதிரி கேள்விகள் பிறந்தன.

"தயிர் வடை எங்கு நல்லதாய்க் கிடைக்கும்?"

"சர்க்கரைப் பொங்கல் சாப்பிட வேண்டு மானல் எங்கு போக வேண்டும்?"

"நல்ல போளி சாப்பிட வேண்டுமானல் எந்த ஊருக்குப் போகணும்?"

குப்பன் ஒவ்வொரு வஸ்துவுக்கும் ஓர் ஊர் சொல்லிக் கொண்டு வந்தான். அது நிஜமோ, பொய்யோ, அவனுக்குத்தான் தெரியும்.

"சரி, அது கிடக்கட்டும், குப்பய்யர்! நல்ல தோசை வேண்டுமென்றால் எங்கே போகணும்!" என்று கேட்டார் ஒரு தோசைப் பிரியர்.

"முதுகில் வேண்டுமானல் நான் தருகிறேன்" என்றார் இன்னொருவர்.

"சரிடா, குப்பா! சாப்பாட்டு விஷயம் இருக் கட்டும். நல்ல பிரகிருதி வேண்டுமானல் எங்கே போகணும்?" என்று கேட்டேன் நான். என் கவலை எனக்கு!

"நான் தான் இருக்கிறேனேடா ஒரு பிர கிருதி" என்று சிரித்துக் கொண்டே பதில் சொன் ஞன் குப்பன்.

# சாமண்ணு

"அடாடாடாடாடாடா! நம்ப கிட்ட ஒரு வார்த்தை போட்டு வைக்கக் கூடாதோ? இந்த ஊரில் சாமண்ணுவுக்குத் தெரியாத ஒரு பெரிய மனுஷன் கிடையாது, ஸ்வாமி! சாமண்ணு எள் என்று வார்த்தை சொல்ல வேண்டியது தான் பாக்கி, எண்ணெய் என்று காரியம் ஆகிவிடும்."

எம். ஏ. பாஸ் பண்ணி விட்டு வேலை கிடைக்காமல் திண்டாடிக் கொண்டிருந்த சமயம். சென்னைக்காவது போய் ஏதாவது வேலைக்குப் பிரயத்தனம் பண்ணுவது தானே என்று சுந்தரி சொன்னள். இதைச் சாக்கிட்டாவது ஒரு நாலு மாதம் பிறந்த வீட்டுக்குப் போய் விட்டு வரலாமே என்பது அவள் எண்ணம்!

ஆகவே மயிலாப்பூரில் இருந்த என் மாமா வீட்டில் போய்த் தங்கி யிருந்தேன்.

ஒரு நாள் அங்குள்ள ஹைஸ்கூலில் வாத்தியார் வேலை காலி என்று தெரிந்ததும், ஒரு மனு எழுதிக் கொண்டு போய்க் கொடுத்து விட்டு வந்தேன். அங்கு என்னைப் போல் எத்தனையோ பேர் வந்திருந்தனர். இன்னும் தபால் மூலம் வந்த மனுக்கள் எத்தனையோ! 'இத்தனை பேரில் நமக்கு எங்கே கொடுக்கப் போகிறுன்! சிபார்சு இல்லாமல்

எங்கே காரியம் நடக்கப் போகிறது?'' என்று மனச்சோர்வுடன் வீடு வந்து சேர்ந்தேன்.

அன்று சாயந்திரம் கபாலீசுவரர் கோவிலுக்குப் பக்கமாய்ப் போய்க் கொண்டிருக்கும் போது குளத்தில் சந்தியா வந்தனம் பண்ணிக் கொண்டிருந்த ஒருவர் என்னைக் கை தட்டி அழைத்தார். அவர் தான் சாமண்ணா. வயது அறுபதிருக்கும். பஞ்சக்கச்சம் உடுத்திக் கொண்டு, மிகவும் நியம நிஷ்டையுடன் காணப்பட்டார். பார்ப்பதற்குப் பென்ஷன் வாங்கிக் கொண்டு சுகமாகக் காலந் தள்ளிக் கொண்டிருக்கும் ரிடையர்டு உத்தியோகஸ்தர் போல் இருந்தார்.

"இந்தாடப்பா, உன்னைத் தானே? உன்னை அடிக்கடி இந்தப் பக்கம் பார்க்கிறேன். இங்கே யாராத்துக்கு வந்திருக்கே?'' என்று விசாரித்தார்.

என் மாமா பெயரைச் சொன்னேன்.

"உனக்கு எந்த ஊர், என்ன வேலை, என்ன சம்பளம், குழந்தைகள் எத்தனை?'' என்று அடுத்தாற் போல் எல்லாக் கேள்விகளையும் ஒரே மூச்சில் கேட்டார்.

"வேலைக்காகத்தான் இங்கு வந்திருக்கிறேன். ஜாகை இல்லை. அது தான் கஷ்டமா யிருக்கிறது'' என்றேன்.

இதைக் கேட்டதும் தான் சாமண்ணா நான் முதலில் கூறிய "அடாடாடா!'' பாட்டுப் போட்டார்.

"ஏனப்பா, சமாண்ணுவைத் தெரியாத ஒரு பெரிய மனுஷன் பட்டணத்திலே இருக்கிருனு? எங்கே வேலை காலியா யிருக்கு, யாரைப் பார்த்தால் கிடைக்கும் என்று சொல்லு. நான் பண்ணி வைக்கிறேன்" என்று கூறினுர்.

நான் காலையில் போய் அலேந்து விட்டு வந்த வாத்தியார் வேலையைப் பற்றிச் சொன்னேன். திவான் பகதூர் ராமசாமி ஐயர் தான் அந்தப் பள்ளிக்கூடத்து அதிகாரி என்று சொன்ன போது சாமண்ணு முகத்தில் புன்னகை பூத்தது.

"திவான் பகதூர் ராமசாமி ஐயர் அவர்களா? அப்படிச் சொல்லு. முப்பது வருஷங்களாக அவர் நமக்கு ரொம்ப பரிச்சயம்னு? நம்ப ஆத்துக் காரியும், அவர் ஆத்துக்காரியும் சிறு வயதில் அக்காள் - தங்கை போல் பழகினவர்கள். நான் ஒரு வார்த்தை சொன்னுல் இல்லை யென்று சொல்ல மாட்டார். சரி, உனக்கு இந்த வேலை கிடைத்துப் போச்சு என்று வைத்துக் கொள்."

"என்ன? நிஜம்மாவா? நீங்க சொன்னுல் அவர் கேட்பாரா?"

"ஏன் கேட்க மாட்டார்! சாமண்ணு சொல்லிக் கேட்காத ஒரு பெரிய மனுஷன் இந்த ஊரில் இருக்கிருனு, என்ன? அப்படி யாராவது இருந்தால் அவன் பெரிய மனுஷன்லேயே சேர்த்தி யில்லே. நீ பட்டணத்துக்குப் புதுசு. அதுதான் சாமண்ணுவைப் பற்றிக் கேள்விப்பட்டதில்லே. நீ

யெல்லாம் ஒன்றுக்கும் பயப்படாதே, அப்பா. நூற்றுக்குத் தொண்ணூற்றென்பது பக்ஷம் அவர் நான் சொன்னபடி கேட்பார் என்று தான் நினைக்கிறேன். கேட்கா விட்டால் நாளைக்குக் காரியா காரியம்னு சாமண்ணுவிடம் தானே வந்து நிற்கணும்?"

"ஊம்?"

"அப்படி இல்லேன்னு சொல்லுகிறார் என்று வைத்துக் கொள்வோம். நம்ப ராவ் சாகிப் ராமச்சந்திர அய்யர் இருக்கவே இருக்கிறார்—"

"எந்த ராவ் சாகிப் ராமச்சந்திர அய்யர்? தடபுடல் பாங்க் டைரக்டர் ராவ் சாகிப் ராமச்சந்திர அய்யரா?"

"சாக்ஷாத் அவரே தான்."

"அவர் கூட உங்களுக்குத் தெரியும் என்று சொல்லுங்கோ!"

"தெரியுமாவது? நானும் அவனும் சேர்ந்து படித்தவர்களாக்கும்! முதல் மூன்று கிளாசும் எங்கள் கிராமத்தில் என்னோடு சேர்ந்து தான் வாசித்தான். அப்பொழு தெல்லாம் கணக்கில் நான் தான் கெட்டிக்காரன். அப்பொழுது எத்தனை கணக்குகள் அவனுக்குச் சொல்லிக் கொடுத்திருப்பேன் என்கிறாய்? கணக்கில் அத்தனை மக்காய் இருந்தவன், இப்பொழுது என்னடா என்றால் ஒரு பெரிய பாங்குக்கு மானேஜராய்ப் போய் விட்டான்."

"அப்படியானால் அவர் பாங்கியில் ஏதாவது வேலை பார்த்து வைக்க முடியும் என்று சொல்லுங்கோ!"

"பாங்க் இருக்கட்டும், அப்பா. நீ கேட்ட வாத்தியார் வேலையே உனக்கு நான் வாங்கித் தருகிறேன். ராவ் சாகிப் ராமச்சந்திர அய்யர் அந்தப் பள்ளிக்கூடத்து மானேஜரான திவான் பகதூர் ராமசாமி ஐயருக்கு மிக்க ஆப்தமானவர். இரண்டு பேரும் எதிரும் புதிருமாகப் பங்களா கட்டிக் கொண்டிருக்கிறார்கள். இரண்டு பேரும் சேர்ந்தாற் போல் தான் பீச்சுக்குப் போவது, சேர்ந்தாற் போல் தான் பாட்டுக் கச்சேரிக்கும் போவது. ராவ் சாகிப் அவர்கள், திவான்பகதூர் அவர்கள் காதில் ஒரு வார்த்தை போட்டால் போதும், உனக்கு வேலை கிடைத்த மாதிரிதான்."

"எப்படியோ நீங்கள் ஒரு வேலை பார்த்துக் கொடுத்தால் சரி தான்."

"நீ கொஞ்சம் கூடக் கவலைப் படாதே, அப்பா! ஆமாம், இந்த வாத்தியார் வேலையை எதற்காக ஒப்புக் கொள்ளுவதாகச் சொல்லுகிறாய்? உனக்கு சர்க்கார் உத்தியோகத்துக்கு வயசு இருக்கோல்லியோ?"

"இருக்கு."

"அடாடாடாடாடா! நம்ப ஸர் டி. தேவசிகாமணியிடம் ஒரு வார்த்தை சொன்னால் போதுமே! அவருக்கு ஸெக்ரடேரியட்டில் வேலை. நமக்கு

ரொம்ப வேண்டியவர். இப்பக் கூட நம்ப பேரனும் அவர் பேரனும் சேர்ந்தாற் போல ஒரே பள்ளிக் கூடத்தில் ஒரே கிளாசில் தான் வாசிக்கிறார்கள்."

"எப்படியோ, நீங்களாகப் பார்த்து எங்கே வேலை வாங்கிக் கொடுத்தாலும் சரி. இதற்குத் தான் திருச்சினாப்பள்ளியிலிருந்து பணத்தைச் செல வழித்துக் கொண்டு பட்டணம் வந்திருக்கிறேன்."

"அடாடாடாடாடாடா! உனக்கு திருச்சினாப் பள்ளியா? முன்னமேயே சொல்லப் படாதோ! திருச்சினாப்பள்ளியிலும் அத்தனை பெரிய மனுஷாளும் நமக்குத் தெரிந்தவா தான். ஏன், உனக்குத் திருச்சினாப்பள்ளியில் இருக்கப் பிடித்தம் இல்லையோ?"

"பிடித்தம் இல்லாமல் என்ன? அங்கேயே வேலை கிடைத்தால் சர்வ சம்மதம். ஊரோடேயே இருந்து விடுவேன்."

"அங்கே ரயில்வே டி. டி. எஸ். இருக்கிறாரே, ராவ் பகதூர் சிவசாமிநாத அய்யர், அவர் நமக்கு ரொம்பவும் நெருங்கிய பந்துவாக்கும். அவர் மாமி யாரோட அத்தங்காளின் மாமனாரும், நம்ம மாமனா ரோட அம்மாஞ்சியின் மாமியாரும் சொந்த அத்தான் அம்மங்காள் உறவாக்கும்! தம்மோடு வந்து இருக்கும்படி தினம் ஒரு கடிதம் எழுதிக் கொண்டிருக்கிறார். ஆனால் இங்கு இருக்கிற பெரிய மனுஷா ளெல்லாம் நம்மைப் போக விடுவாளா என்ன?

"இப்பக் கூடச் சுளை இருக்கத் தோல் முழுங்கி இன்ஷூரன்ஸ் கம்பெனி டைரக்டர் ஸர் ராமநாராயண அய்யர் இருக்காரல்லவா, அவர் பங்களாவுக்குத் தான் புறப்பட்டுக் கொண்டிருக் கிறேன். அடுத்த வாரம் அவர் பெண்ணுக்குக் கல்யாணம். எல்லாக் காரியத்தையும் நான் தான் இருந்து நடத்தி வைக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டிருக்கிறார். அவர் சொல்லுகிற வார்த்தையை எப்படித் தட்டிப் பேசுகிறது என்று தெரியவில்லை. அடுத்த வாரம் திவான் பகதூர் சீனிவாச மூர்த்தி ஆத்திலும் கல்யாணம். அவாத்துக் கல்யாண காரியங்களையும் நான் தான் பார்த்துக்கணும் என்று சொல்லி யிருக்கிறார். எனக்குப் பெரிய தர்ம சங்கடமா யிருக்கிறது. முதலில் யாராத்துக் கல்யாணத்தில் சாப்பிடுகிறது என்பதே தெரிய வில்லை. ஒரு இடத்துக்குப் போய் இன்னொர் இடத்துக்குப் போகாமல் இருந்தால் மனஸ்தாபத்துக்கு இடமாகும். என்ன பண்ணலாம்? இரண்டு இடத்திலும் கை நனைக்க வேண்டியது தான். சரி, நான் போய் விட்டு வருகிறேன். காலையிலே பார்க்கிறேன்."

"அப்படியே செய்யுங்கோ. உத்தியோக விஷயம் ஞாபகம் இருக்குமோல்லியோ?"

"நீ துளிகூடக் கவலைப் படாதே, அப்பா! இத்தனை பெரிய மனுஷாள், சாமண்ணுவுக்குத் தெரிந்திருக்கும் போது, ஒத்தர் கூடவா உனக்கு வேலை தரமாட்டார்கள்? வேலை கிடைத்து விட்டது

என்றே வைத்துக்கொள். ஊருக்குக் கடிதாசு போட்டு ஆம்படையாளை வரவழைக்க வேண்டிய ஏற்பாட்டைப் பார்'' என்று சொல்லி விட்டுப் போனார்.

மிகுந்த சந்தோஷத்துடன் வீடு திரும்பினேன்.

"மாமா! மாமா! எனக்கு வேலை கிடைத்து விட்டது'' என்றேன்.

" வேலையா? எந்த ஆபீஸில்?"

"எந்த ஆபீஸ் என்று இன்னும் தெரியவில்லை. யாரோ சாமண்ணாவாமே? உங்களைக் கூடத் தெரியும் என்றார். அவருக்குத் தெரியாத பெரிய மனுஷன் இந்த பட்டணத்திலேயே கிடையாதாம். ஆகவே எங்கேயாவது பார்த்து வேலை பண்ணி வைக்கிறேன் என்று சொல்லி யிருக்கிறார்."

" அது யாரடா சாமண்ணா? எனக்குத் தெரிந்த தாக ஞாபக மில்லையே. அவர் எப்படி யிருப்பார், சொல்லு'' என்று மாமா கேட்டார்.

நான் சாமண்ணாவின் அங்க அடையாளங்களை விவரித்ததோடு, அவருக்கும் எனக்கும் நடந்த சம்பாஷணை விவரங்களையும் சொன்னேன்.

இதைக் கேட்டதும் மாமா கொல்லென்று நகைத்தார். அம்மாமியும் இந்த நகைப்பில் கலந்து கொண்டாள். இரண்டு பேரும் விழுந்து விழுந்து சிரித்தார்கள். எனக்கு விஷயம் என்ன வென்று விளங்க வில்லை.

"ஏன் மாமா! ஏன் சிரிக்கிறீர்கள்? அவர்

சொன்ன தெல்லாம் பொய்யா, என்ன! அடுத்த வாரம் யாரோ இரண்டு பெரிய மனுஷர்கள் இவரைக் கல்யாணத்துக்கு அழைத்திருக்கிறார்கள் என்றும், இவர் இல்லாமல் கல்யாணம் நடக்காது என்றும் சொன்னாரே?"

"அது என்னமோ, நிஜந்தான். யாராவது பெரிய மனுஷாள் வீட்டில் கல்யாணம் என்றால் தன்னை அழைக்கும் சிரமத்தைக் கூட அவர்களுக்கு வைக்காமல் இவரே முன் கூட்டிக் கொண்டு போய் விடுவார். அதோடு—"

"என்ன ?"

"அதோடு அவர் பிள்ளை ஒத்தன் பி. ஏ. பாஸ் பண்ணி விட்டு ஐந்து வருஷமா வேலை யில்லாமல் அலைகிறான்" என்று எரிகிற கொள்ளியில் எண்ணெய் ஊற்றினுப் போல் கூறி முடித்தார் மாமா.

இப்படியும் ஒரு பிரகிருதி !

# குல்லாப் பேர்வழி

"போயும், போயும் உங்களைப் பார்த்து என்னைக் கொண்டு வந்து தள்ளினுளே, அவாளைச் சொல்லணும். உங்களைக் குற்றம் சொல்லி என்ன பிரயோஜனம் ?"

சுந்தரி என் மீது இம்மாதிரி கோபித்துக் கொள்ளவே என் தலையில் இடி விழுந்த மாதிரி இருந்தது.

"ஏன், நான் என்ன பண்ணினேன் ? நான் உண்டு, என் காரியம் உண்டு என்று தானே இருக்கிறேன் ?"

"இருக்கிறேளாவது இருக்கிறேள் ! எதுக்காக இப்படி எல்லாரும் கரிச்சுக் கொட்டும்படி பேர் வாங்குகிறேள் ?"

"கரிச்சுக் கொட்டவாவது ? யார் நம்மைக் கரிச்சுக் கொட்டுகிறது ?"

"ஊரார் எல்லாரும் தான். கோடியாத்துக் கோணங்கி சாஸ்திரி தம் பெண்ணுக்கு எங்கெங் கெல்லாமோ அலைந்து வரன் நிச்சயம் பண்ணிக் கொண்டு வந்தாராம். நீங்க அப சகுனம் மாதிரி அவர் பார்த்திருக்கிற வரனுக்குக் குத்தம் சொன்னேளாமே ?"

"யார் குத்தம் சொன்னது ? உள்ளத்தைச்

சொன்னல் நொள்ளக் கண்ணிக்கும் நோப்பாளம்! அவர் பார்த்த வரனுக்கு ஒண்ணரைக்கண்! ‘நான் திவ்யமான வரன் எல்லாம் பார்த்துச் சொன்ன போது வேண்டாம் என்று தள்ளினேளே, ஸ்வாமி! இப்பொழுது மாத்திரம் தாங்கள் பார்த்த வரன் எப்படி?’ என்று இடித்துக் காட்டினேன். இதில் என்ன தப்பு?”

“எப்படியாவது போங்கோ. எல்லாரிடமும் இப்படித் தான் பொல்லாப்பு வாங்கிக் கட்டிக்கொள்கிறேள். அடுத்தாப் போல் நாணு அய்யரும் தான் இருக்கிறார். இப்படியா ‘பொல்லாது’ என்று பெயர் வாங்கிக் கட்டிக் கொள்கிறார்?”

சுந்தரி சொன்னது போல் நாணு யாரிடமும் ‘கெட்டவன்’ என்று பெயர் வாங்கின தில்லே. யாரைக் கேட்டாலும், “நாணுவைப் போல் உண்டா? அவரைப் போல் தங்கமான மனுஷர்கள் வேறு எங்கே கிடைக்கப் போகிறார்கள்!” என்று கூறு வார்கள்.

இப்படி நாணு எல்லாரிடமும் ‘நல்லவன்’ என்று பெயர் வாங்கினதற்குக் காரணம் அவன் ஒரு குல்லாப் பேர்வழியாய் இருந்ததுதான். அதாவது எல்லாருக்கும் ‘ஆமாம்’ பாட்டு அவன் போட்டுக் கொண்டிருந்தான்.

வேறு ஒன்றும் வேண்டாம், கோடியாத்துக் கோணங்கி சாஸ்திரியிடம் அவன் நடந்து கொண்ட

விதம் ஒன்றே போதும், அவன் எப்பேர்ப்பட்ட பிரகிருதி என்று தெரிந்து கொள்வதற்கு.

கோணங்கி சாஸ்திரி தம்முடைய பெண்ணுக்கு வரனுக்காக எங்கெங் கெல்லாமோ அலைந்தார். கடைசியில் பக்கத்து ஊரில் இருந்த ஓர் ஒண்ணரைக் கண்ணனைப் பார்த்துப் பிடித்தார். "இப்படிப் போய்ப் பார்த்தேளே" என்று கேட்டதற்குத் தான் நான் கெட்ட பெயர் வாங்கிக் கட்டிக் கொண்டேன். ஆனால் அதே சமாசாரத்தைக் கோணங்கி சாஸ்திரி நாணுவிடம் பிரஸ்தாபித்த போது, நாணு எப்படி நடந்து கொண்டான் என்று பாருங்கள்.

"என்னடா நாணு! பொண்ணுக்குப் பக்கத்து ஊரிலேயே வரன் பார்த்திருக்கிறேன். நம்ம அப்பு சாஸ்திரி இரண்டாம் பிள்ளை குப்பு சாஸ்திரி இருக்கானே, இல்லையோ, அவனுக்குத்தான் கொடுக்கலாம் என்று நினைத்திருக்கிறேன்."

"ஆகா, அப்படியே செய்யலாம். ரொம்ப பேஷான இடம்னு!"

"பையனுக்குப் படிப்பு அவ்வளவு இல்லை. அது தான் கொஞ்சம் யோசனை பண்ண வேண்டியிருக்கிறது."

படிப்பில்லா விட்டால் என்ன அண்ணா! படித்தவன் எல்லாம் என்ன கிழிச்சுட்டான்! பார்க்கப் போனால் இந்தக் காலத்தில் படிக்காதவன் தான் நன்றாகச் சம்பாதிக்கிறான்."

"அது தான் நானும் நினேச்சேன். அப்புறம் பையனுக்கு ஒரு கண் சற்றுப் பார்வை மந்தம். ஆகையால் தான் சற்று யோசிக்க வேண்டி யிருக்கிறது........"

"ரொம்ப அழகா யிருக்கு, அண்ணு. ஒரு கண் சற்று மந்தமா யிருந்தால் என்ன கெட்டுப் போச்சு! அவன் என்ன குருடா? கண் தெரியவில்லையா? இல்லே, நல்ல ராஜாப்போல் இருக்கிற ஆளேப் பார்த்துத் தான் பெண்ணேக் கொடுக்கிறோம். பின்னல் அவனுக்கு அங்கஹீனம் ஏற்படாது என்பது என்ன நிச்சயம்?"

"ஆமாண்டா, நாணு. அதையும் யோசனே பண்ணித் தான் நான் வரனே நிச்சயம் பண்ணினேன். ஆனல் பையனுக்குப் படிப்பும் இல்லே, உத்தியோகமும் இல்லே; அதோடு சொத்தும் ஒன்றும் கிடையாது...."

"சொத்து இல்லாவிட்டால் என்ன அண்ணு! எல்லாரும் பிறக்கும் போது சொத்தோடேயா பிறக்கிறோம்? இல்லே, போகும் போது தான் கையில் கொண்டு போகப் போகிறோமா? அதுவுமில்லே. எல்லாம் அவாளவாள் அதிர்ஷ்டம் போல் கிடைக்கிறது. பெண் அதிர்ஷ்டம்தான் பிள்ளேக்கு ஒரு வேலே ஆகக் கூடாதா, என்ன?"

"என்னமோ, அப்பா! நீ ஒருவன் தான் இப்படி ஆறுதலாக வார்த்தை சொல்லுகிருய். ஊரில் பாக்கி பேர் எவனுவது ஒத்தன் நான் பார்த்

துக் கொண்டு வந்திருக்கும் வரன் நல்ல வரன் என்று சொல்லணுமே, கிடையாது. எல்லாம் அசிகை பிடித்த பயல்கள். 'கோணங்கிசாஸ்திரி யாவது, தானகப் போய் ஒரு வரன் நிச்சயம் பண்ணுகிறதாவது' என்று பொச்சரிப்பு."

"ஆமான்னக்கே."

"இன்னிக்குக் காலம்பர பாரு, நம்ப வெங்கிட்டு இங்கு வந்தான் —"

[வெங்கிட்டு வேறு யாரும் இல்லை. சாக்ஷாத் நான் தான்]

"அவன? அவன் ரொம்ப ராங்கிக் காரன்ன? பிறத்தியார் எந்தக் காரியம் செய்தாலும் குற்றம் கண்டு பிடித்துக் கொண்டிருப்பானே!"

"அவனே தான். காலம்பர இங்கே வந்தான். நான் பார்த்திருக்கிற வரனைப் பற்றிச் சொன்னேன். தான் பார்த்துச் சிபார்சு பண்ணின வரன்களை யெல்லாம் ஒதுக்கி விட்டேன் என்று அவனுக்குக் கோபம்! அதற்காக 'அந்த நொள்ளைக் கண்ணனுக்கா பெண்ணைக் கொடுக்கப்போறேள்? அதை விடப் பெண்ணைக் கிணற்றில் பிடித்து தள்ளலாமே ஸ்வாமி' என்று கேட்டு விட்டுப் போய் விட்டான். அவனுக்கு என்ன அகங்காரம், பார்"

"அவன் கிடக்கிறன், அண்ண! அவன் எப்பவும் இப்படித் தான். அவனும் பிள்ளையும், பெண்ணும் பெற்றவன் தான். நாளைக்கு அவன் பெண்

னுக்கு எப்படிக் கல்யாணம் பண்ணுகிருன் என்று பார்ப்போம்.''

"அந்த வேடிக்கையைத் தான் நானும் பார்க்கப் போகிறேன்.''

நீங்க பாட்டில் கல்யாணத்துக்கு வேண்டிய ஏற்பாட்டைப் பண்ணுங்கோ, அண்ணு."

"சரி, ஒரு நாள் கல்யாணம் பண்ணி விடலாம் என்று பார்க்கிறேன். நீ என்ன சொல்லுகிருய்?''

"அதுக்கென்ன! ரொம்ப பேஷாகப் பண்ணலாம். இப்பொழுதெல்லாம் எவன் நாலு நாள் கல்யாணம் பண்ணுகிருன்?''

"வேண்டாங்காணும். வைதிகக் குடும்பத்தில் பிறந்து விட்டு ஒரு நாள் கல்யாணம் பண்ணினுல், நாலு பேர் சிரிப்பார்கள். பேசாமல் ஆன செலவு ஆகட்டும் என்று நாலு நாள் கல்யாணமே பண்ணி விடலாம் என்று தோன்றுகிறது."

"ரொம்ப தரமாய்ப் போச்சு. நானும் அதைத் தான் முதலில் யோசித்தேன். செலவு செய்கிறது தான் செய்கிறோம். 'ஒரு நாள் கல்யாணம் பண்ணினேம்' என்று கெட்ட பெயர் வாங்கிக் கட்டிக் கொள்வானேன்?''

நாணு இந்த மாதிரி சமத்காரமாய்ப் பதில் சொல்வதில் பலே கெட்டிக்காரன். எதிராளி நோக்கம் என்னமோ, அதைத் தெரிந்து கொண்டு அதற்கேற்றுப் போல் பேசுவான். கடைசியில் நல்ல பெயரும் எடுத்துக் கொண்டு விடுவான்.

ஒன்றும் இல்லே, கோணங்கி சாஸ்திரியிடம் அவர் பார்த்த வரனைப் பற்றிப் புகழ்ந்து பேசி என்னை இகழ்ந்தானே இல்லேயோ, அன்று சாயந்திரம் என்னைப் பார்க்க வந்திருந்தான்.

"என்னடா நாணு! நம்ப கோணங்கி சாஸ்திரி பண்ணி யிருக்கும் காரியத்தைப் பார்த்தாயோ, இல்லேயோ? ஓர் ஒண்ணரைக் கண்ணனுக்குத் தன் பெண்ணைக் கொடுக்கப் போகிறதாம்" என்றேன்.

"அது தான் அண்ணு, நானும் பார்த்தேன். போயும் போயும் இந்த ஒண்ணரைக் கண்ணனையா இவர் போய்ப் பிடிக்கணும்?"

"போதாததற்குப் படிப்பும் கிடையாது."

"அதுவும் கேள்விப் பட்டேன். எம். ஏ., பி. ஏ., பாஸ் பண்ணினவன் எல்லாருமே வேலேக்குத் திண்டாடும் போது படிக்காதவனுக்கு யார் அண்ணு வேலே கொடுக்கப் போகிறார்கள்?"

"சரி, பையனுக்குச் சொத்தாவது இருக்கிறதா என்றால் அதுவும் பூஜ்யம்."

"அப்படியா? எனக்குத் தெரியாதே! பின் எதை நம்பித்தான் இவர் வரன் நிச்சயம் பண்ணிக் கொண்டு வந்தார்? காலம் கிடக்கிற கிடையில், ஒரு கால் வயிற்றுக் கஞ்சிக்காவது இருக்க வேண்டாமோ?"

"நான் எத்தனேயோ நல்ல நல்ல வரன் எல்லாம பார்த்துச் சொன்னேன். அதுக்கு எல்லாம் குத்தம் சொன்னார். இப்ப என்னடான்னு—"

"அதுதான் அண்ணு இந்தக் காலத்திலேயே ஒத்தனுக்கும் நல்லதைச் சொல்லப்படாது. என்னடா, ஒருவன் சிரமப் பட்டு நல்ல வரனைகப் பார்த்துச் சொன்னனே என்று கோணங்கி சாஸ்திரிக்கு விசுவாசம் உண்டா, பாரும்!"

"அவர் விசுவாசத்துக்காக இங்கே யாரும் காத்துக் கிடக்கவில்லை. அவருக்கு என் மேல் கோபம். 'போயும், போயும் இந்த வரனுக்குக் கொடுப்பதற்குப் பதில் பெண்ணைக் கிணற்றில் பிடித்துத் தள்ளலாமே' என்று சொன்னேன். அதுக்காக என் மேல்—"

"சரியாச் சொன்னேள்! அவர் கோபித்துக் கொண்டால் கோபித்துக் கொள்ளட்டுமே. அதனல் உங்களுக்கு என்ன அண்ணு நஷ்டம்? இந்தக் காலத்தில் உள்ளத்தைச் சொன்னல் யாருக்கும் கோபம் வரத் தான் வரும்" என்ருன்.

இந்த மாதிரி பிரகிருதி நானு. நானும் அவனைப் போல் இல்லை என்று சுந்தரி கோபித்துக் கொள்கிருளே, நானும் ஒரு பிரகிருதியா என்ன!

# பயங்கராச்சாரியார்

"மடையன், தடியன், மூடன், முட்டாள், புத்தி யில்லாதவன், மூளை யில்லாதவன், அறிவில்லாதவன், துப்பில்லாதவன்" என்று என்னைப் பார்த்து மிகவும் கோபமாகச் சொன்னார் பயங்கராச்சாரியார்.

எனக்கு விஷயம் என்னவென்று விளங்கவில்லை. பயங்கராச்சாரியாரை நான் இதற்கு முன் பின் பார்த்தது கிடையாது. கேள்விப் பட்டதும் கிடையாது. அவர் வீட்டின் முன்னால் "வாடகைக்கு விடப்படும்" என்று ஒரு போர்டு தொங்கிக் கொண்டிருந்ததைப் பார்த்து விட்டு, வீடு எப்படியிருக்கிறது என்று பார்ப்போம் என்று உள்ளே நுழைந்தேன். என்னைக் கண்டதும் அவர் திட்ட ஆரம்பித்து விட்டார்.

நான் திடுக்கிட்டு நின்றேன். அதைப் பார்த்த பயங்கராச்சாரியார், "வாங்கோ, ஸார், வாங்கோ! உங்களை ஒன்றும் சொல்ல வில்லை, ஸார். இந்த வீட்டுக்காரன் இருக்கிறான் பாருங்கள், அவனைத் தான் சொல்லிக் கொண்டிருக்கிறேன். என்ன ஸார்! மனுஷனுக்குத் துளியாவது புத்தி வேண்டாமா, ஸார்? இந்த வீடு கட்டி யிருக்கிறானே, இப்படியா ஒருவன் வீடு கட்டுவான். இந்தக் கூடத்தைப் பாருங்கோ, இதற்கு எவனாவது கூடம் என்று

பெயர் வைப்பானு? இந்த ரூம்களேயும் பாருங்கோ. எதுக்காக ஸார், ஒரு வீட்டுக்குள் இத்தனை ரூம்கள்?"

"இந்த கிழக்கத்திச் சுவரைத் தட்டிவிட்டு, இந்த மேற்கத்திச் சுவரையும் தட்டிவிட்டு, இந்தக் கூடம், இந்த இரண்டு ரூம், எல்லாவற்றையும் சேர்த்து ஒரு பெரிய ஹாலாகப் பண்ணினுல் எவ்வளவு நன்ரு யிருக்கும்? இதெல்லாம் யாருக்கு ஸார் தெரிகிறது?

"ஒன்றும் இல்லே. இந்த வீட்டைக் கட்டப் பத்தாயிரம் ரூபாய் பிடித்ததாம். ஏன் பிடிக்காது? மூளே யில்லாதவன் எல்லாம் வீடு கட்டினுல் இருபதினுயிரம் கூடப் பிடிக்கும். ஒன்றும் வேண்டாம் ஸார். என் கையில் மாத்திரம் ஐயாயிரம் ரூபாய் கொடுங்கள். நல்ல பேஷான வீடாகக் கட்டிக் காண்பிக்கிறேன், பாரும். பார்த்தவன் எல்லாம் அதற்கு இருபதினுயிரம் முப்பதினுயிரம் என்று மதிப்புச் சொல்லணும். என்ன சொல்லுகிறீர்" என்று கையை நீட்டினுர்.

இதைச் சொல்லி விட்டு அவர் கை நீட்டினது, "என்ன ஐயாயிரம் ரூபாய் உடனே கொடுக்கப் போகிறீரா, இல்லேயா" என்று கேட்பது போல் இருந்தது.

"நான் என்னத்தைச் சொல்வது? வீடு வாடகைக்கு என்று போட்டிருக்கிறதே, பார்த்து விட்டுப் போகலாம் என்று வந்தேன்" என்று குளறினுப் போல் சொன்னேன்.

"என்ன வீடு ஸார். ஒரு தம்பதிக்கு உதவாது. இதற்காகத் தான் நான் கூடக் காலி பண்ணு கிறேன் என்று கூறி விட்டேன். மாடிப் படி கட்டி யிருக்கிறனே, இப்படியா வாசல் திண்ணையில் போய்க் கட்டுவான்? மாடிப் படி வீட்டுக்குள்ளே கட்டினல் சௌகரியமாக இருக்குமா, வீட்டுக்கு வெளியே கட்டினல் சௌகரியமாக இருக்குமா என்று தெரியாதவன் எல்லாம் எதற்காக ஸார், வீடு கட்ட ஆரம்பிக்கிறன்? நீங்களே வந்து பாருங்கள்" என்று என்னைக் கையைப் பிடித்துக் கர கர என்று திண்ணைப் பக்கம் இழுத்துக் கொண்டு போனர்.

எனக்கு விஷயம் ஒன்றும் விளங்க வில்லை. பயங்கராச்சாரியரை ஏற இறங்கப் பார்த்தேன். அப்படிப் பைத்தியக்கார ஆஸ்பத்திரியி லிருந்து தப்பித்துக் கொண்டு ஓடி வந்து விட்டவராகவும் தோன்ற வில்லை.

வாசல் திண்ணைக்குப் போனதும், "மாடிப் படியைப் பார்த்தேளா? எப்படி இருக்கிறது? ஜலமாவது வரும் என்கிறேளோ, அருணஜலம் தான்" என்று ஆரம்பித்தார்.

"இப்பத்தான் மெட்ராஸில் எங்கேயும் ஜலக் கஷ்டம் இருக்கிறது என்று சொல்லிக் கொள்ளு கிறர்களே?"

"ஏன் ஸார், இருக்காது? மழை பெய்தால் தான் குழாயில் ஜலம் வருமாம்! அப்படியானல்

இந்த இன்ஜினீயர் பாஸ் பண்ணினவன் எல்லாம் என்ன ஸார் பண்ணுகிருன் என்று கேட்கிறேன். மழையாம்! பெய்ய வேண்டுமாம்! மழை பெய்தால் தான் ஜலமாம்! இது எல்லாம் என்ன ஸார் பேத்தல்! இந்த இன்ஜினீயர் உத்தியோகத்தை யெல்லாம் நம்மிடம் நாலு நாளைக்குக் கொடுத்து வைக்கட்டும், குழாயில் ஜலம் வருகிறதா இல்லையா என்று பார்த்து விடுகிறேன்."

ஆசாமி யார் என்பது எனக்கு அப்பொழுது தான் புரிந்தது! காசிக்குப் போயும் கர்மம் தீர வில்லை என்பது போல் வீடு பார்க்க வந்த இடத் திலும் ஒரு பிரகிருதி இடத்தில் வந்து அகப்பட்டுக் கொண்டு விட்டேன்!

இம்மாதிரி பிரகிருதிகளுக்கு அவர்களுக்குத் தெரியாத காரியம் கிடையாது. அதையும் அவர்கள் ஒருவரால் தான் கெட்டிக்காரத் தனமாகச் செய்ய முடியும். அவர்களைத் தவிர பாக்கி எல்லாரும் மூடர்கள் என்பது அவர்கள் எண்ணம். உலகத் திலுள்ள எந்தக் காரியமும் ஒழுங்காகச் செய்யப்பட வில்லை; அவர்களா யிருந்தால் மிகவும் நன்ருகச் செய்திருப்பார்கள்! கடவுள் கூடத் தம்முடைய சிருஷ்டி வேலையைச் சரியாகச் செய்ய வில்லை என்று இவர்கள் குறை கூறுவார்கள் என்ருல் அப்புறம் பார்த்துக் கொள்ளுங்களேன்!

பரவாயில்லை, வீடு பார்க்க முடியா விட்டாலும் பொழுது போவதற்காகவாவது, ஒரு கட்டுரை

எழுதுவதற்காவது, ஒரு பிரகிருதி அகப் பட்டாரே என்ற சந்தோஷத்துடன் பயங்கராச்சாரியார் வாயைக் கிளற ஆரம்பித்தேன்.

"ஏன் ஸார்! 'ட்யூப் வெல்'லாவது வைத்துக் கொடுத்திருக்கிறுனு, இல்லையா?"

"என்ன வைத்துக் கொடுத்தான், மடையன்! இரண்டு நாள் ஏதோ ஜலம் வருகிறது போல் வந்தது. அப்புறம் ஒன்றையும் காணேம். கேட்டால், 'இப்பத தானே இதற்காக நூறு ரூபாய் செலவழித்தேன்? இன்னும் ரிப்பேர் சார்ஜுக்கு எங்கே போகிறது?' என்று கேட்கிறுன்.

"முதலில் 'ட்யூப் வெல்' வைக்கிறதற்கே அழு தான். அவன் வீட்டில் ஏதோ கல்யாணமாம். அதற்காக 5000 ரூபாய் செலவழித்து விட்டானும். இவன் ரூ. 5000 செலவழித்தேன் என்று பிரமாத மாகச் சொல்லிக் கொள்கிறுனே, அப்படியாவது கல்யாணம் நிறத்தது என்கிறீர்களா? ஊம், அது ஏன் நிறக்கிறது? அத்தனை செலவழித்தும் ஒரு வேளைச் சாப்பாடு எல்லாருக்கும் நன்ருகப் போட் டான் என்கிறீர்களோ? கிடையாது. இதே கல் யாணத்தை நான் நூறு ரூபாயில் பண்ணிக் காண் பிப்பேன், ஸார்! ஒன்றும் வேண்டாம். ஒரு ஐந் தாறு ரூபாய் இருக்கட்டும், ஒரு கலெக்டர் வீட்டுக் கல்யாணம் போல் அதைச் செய்து காட்டுகிறேன். எல்லாம் நம்ப கெட்டிக்காரத் தனத்தில் இருக்கிறது, ஸார்!

"நான் என்னமோ சொல்லுகிறேன் என்று நினைத்துக் கொள்ளாதீர்கள், ஸார். ஒத்தனுக்காவது புத்தி கிடையாது ஸார்! இந்த காங்கிரஸைத் தான் எடுத்துக் கொள்ளுங்களேன்? இத்தனை வருஷமாக இந்த இங்கிலீஷ் காரனோடு சண்டை பிடிக்கிறார்களே! சுயராஜ்யம் கொண்டு வந்து விட்டார்களா? ஏதாவது சொல்லப் போனால் நம் தலைவர்களை நான் இழித்துக் கூறுகிறேன் என்று நம்மிடம் சண்டைக்கு வந்து விடுவார்கள். காந்தியாவது, போஸாவது, ஸார். பிரிட்டிஷ்காரனை ஆட்டுகிற விதத்தில் ஆட்டி வைத்தால் தன்னைப் போல் சுயராஜ்யத்தைக் கக்க மாட்டானா? நான் மாத்திரம் ஒரு இரண்டு வருஷத்திற்குக் காங்கிரஸ் பிரசிடெண்டாய் இருக்கட்டும். ஒரு நிமிஷத்தில் சுயராஜ்யம் வாங்கித் தரமாட்டேனா!

"இவர்கள் என்னமோ சுயராஜ்யம், சுயராஜ்யம் என்று கத்திக் கொண்டிருந்தார்கள். அதற்குள் யுத்தம் வந்து விட்டது. இந்த யுத்தம் வந்த விதத்தைப் பார்த்தால் எனக்குச் சிரிப்பா வருகிறது. சேம்பர்லேனாவது, கீம்பர்லேனாவது? என்ன ஸார் மனுஷன் அவர்! இந்த ஹிட்லர் கொட்டத்தையெல்லாம் முன்னமேயே அடக்கி யிருந்தால் இன்னிக்கி அவன் அப்படித் துள்ளுவானா, ஸார்? கையில் குடையைத் தூக்கிக் கொண்டு போனால் மாத்திரம் பெரிய மந்திரியாகி விடுவாரா! பிரிட்டிஷ் பிரதம மந்திரி உத்தியோகத்தை நம்ப கையில்

கொடுத்துப் பார்க்கணும், நானும் இந்த ஹிட்லர் அடிக்கிற கொட்டத்தைப் பார்க்கணும்!" என்று ஜிஞ்ஜாமிருதமாகச் சவடால் அடித்துக் கொண்டே போனுர்.

இந்த சமயம் பக்கத்து வீட்டிலிருந்து ஒரு பெண் ஆர்மோனியம் வாசிக்கும் சத்தம் எழுந்தது.

"சரி, ஆரம்பிச்சாச்சா, ஒப்பாரி? நாலு வருஷமா ஆர்மோனியம் சொல்லிக் கொடுக்கிறுன், ஸார்! குழந்தை பாடுகிற அழகைப் பாருங்கோ. நன்ருகச் சொல்லிக் கொடுத்தால் ஆறு மாதத்தில் ஆர்மோனியம் வராதோ? இதெல்லாம் ஒத்தொத்தனுக்கு எங்கே தெரிகிறது! எல்லாத்துக்கும் மூளை வேண்டும், ஸார், மூளை வேண்டும்!"

இந்த சமயம் எதிர் வீட்டில் ஒரு நாலு வயதுக் குழந்தை சாப்பிட மாட்டேன் என்று படுத்திக் கொண்டிருந்தது.

"நான் சாப்பிட மாட்டேன், போ! நான் சாப்பிட மாட்டேன் போ! எனக்குத் தோசை கொடுத்தால் தான் சாப்பிடுவேன்" என்று கத்திற்று.

"தோசையா! இந்தா, தருகிறேன் தோசை" என்று அதன் தாயார் அதன் முதுகில் நாலு 'தோசை' போட்டாள். குழந்தை வீறிட்டு அலறிற்று.

"தினம் இதே பிழைப்பாய்ப் போய் விட்டது, ஸார்! குழந்தைகளைப் பெற்று விட்டால் போதுமா?

வளர்க்கத் தெரிய வேண்டாமா ? நம்ப ஜனங்களுக்கே குழந்தைகளை எப்படி வளர்க்கிறது என்பது தெரிகிறதில்லை, ஸார். சிறு வயதிலிருந்தே, குழந்தைகளைச் சரியாக 'ட்ரெயின்' பண்ணினால் இந்த மாதிரி பிடிவாதம் பிடிக்குமா ? நம்பாத்திலும் தான் குழந்தைகள் இருக்கின்றன—"

இந்த சமயம் பயங்கராச்சாரியாரின் எட்டு வயதுப் பெண் குழந்தை, "நான் சாப்பிட மாட்டேன், போ. எனக்குத் தோசை கொடுத்தால் தான் சாப்பிடுவேன்" என்று அழும் சத்தம் உள்ளேயிருந்து கேட்டது.

அதற்குப் பின்னால் அதன் தாயார் அதற்குத் "தோசை" கொடுத்த சத்தமும் கேட்டது !

இதுவும் ஒரு பிரகிருதி !!

# எங்கள் மாமா

எங்கள் மாமாவும் ஒரு பிரகிருதிதான். சந்தேகமில்லை.

இதோ பத்திரிகையும் கையுமாக வருகிறாரே, அவர் தான் எங்கள் மா—அடே! எங்கே மாமாவைக் காணோம்! "மாமா, இங்கே வாங்கோ மாமா! இவாள் உங்களைப் பார்க்கணும்னு வந்திருக்கா!"—ஊஹும்! அவர் இன்னும் பத்து நிமிஷத்துக்கு இந்தப் பக்கம் தலையைக் காட்ட மாட்டார்.

எங்கள் மாமாவே இப்படித் தான். யாராவது புது மனிதர்கள் வீட்டுக்கு வந்தால் உடனே ஓடிப் போய் 'டிரஸ்ஸிங்' ரூமில் ஒளிந்து கொண்டு விடுவார். இதனால் எங்கள் மாமா சங்கோஜப் பிராணி என்று நினைத்து விடாதீர்கள். அவர் அப்படி ஒளிந்து கொள்வதற்குக் காரணம்.......... இதோ அவரே வந்துவிட்டாரே! அவரைப் பார்த்தாலே காரணம் தெரியுமே!

என்ன, இன்னும் தெரியவில்லையா? இதோ, மாமாவை இன்னொரு தடவை கவனித்துப் பாருங்கள்! சிறிது நேரத்துக்கு முன்பு பஞ்ச கச்சம், யோக வேஷ்டி, மேல்துண்டு, உத்திராட்சம் சகிதம் காட்சி யளித்தார் அல்லவா? ஆனால் இந்த தரிசனம் அவர் குடும்பத்தினருக்குத் தவிர வேறு யாருக்கும்

கொடுப்ப தில்லை என்று வைத்திருக்கிறார். ஆகவே யாராவது அவரைப் பார்க்க வந்தால், அவர் உடனே ஓடிப் போய் சூட், தலைப்பாகை, டை முதலியவை அணிந்து கொண்டு இப்பொழுது உள்ளது போல் காட்சி யளிப்பார்.

பஞ்ச கச்சம், யோக வேஷ்டி, துண்டு முதலியன அணிந்து கொண்டிருக்கும் மாமா வேறு, சூட், டை முதலியன அணியும் மாமா வேறு என்பது எங்கள் எல்லாருக்கும் தெரிந்த விஷயம். பஞ்ச கச்சம் கட்டிக் கொண்டிருக்கும் போது எங்கள் எல்லாருடனும் தயாஷாகப் பேசிக் கொண்டு குஷாலாக இருக்கும் மாமா சூட் அணிந்து கொண்டதும் வேறு மனிதராக மாறி விடுவார். பெரிய கவர்ன்மெண்டு உத்தியோகஸ்தருக்கு வேண்டிய 'ஜபர்தஸ்த்' தெல்லாம் அவருக்கு டக்கென்று வந்துவிடும். ஆள் நடையே ஒரு தினுஸாக மாறி விடும். கடல் மடை திறந்தாற் போல் வார்த்தைகள் வெளிப் புறப்பட்டுக் கொண்டிருந்த அவர் வாயிலிருந்து, முனிசிபாலிடி குழாய்களில் தண்ணீர் வருவது போல், மெள்ள, மெள்ள, கால் மணிக்கு ஒரு வார்த்தை, அல்லது இரண்டு வார்த்தை தான் வரும்.

எங்கள் மாமா சென்ற முப்பது வருஷங்களாக சர்க்கார் உத்தியோகத்தில் இருந்து வருகிறார் என்பது தெரிந்தால் நீங்கள் இது குறித்து ஆச்சரியப்பட மாட்டீர்கள்.

சர்க்கார் உத்தியோகஸ்த ரானபடியால் அவர் காரியங்கள் எல்லாம் சர்க்கார் காரியங்களைப் போலவே மெள்ள, நிதானமாக "சிகப்பு நாடா" முறைக்குப் பாதகம் வராமல் இருக்கும். நமக்கு ஏதாவது விசேஷமாகக் காரியம் ஆக வேண்டி யிருந்தால், அதைக் குறைந்த பட்சம் இரண்டு மாதத்துக்கு முன்பாகவாவது அவரிடம் எழுத்து மூலமாகத் தெரிவித்தால் தான் நடக்கும். அவரிடம் எங்களுக் கென்ன காரியம் ஆகவேண்டி யிருந் தாலும், "உனக்கு என்ன வேண்டும் என்பதை ஒரு கடிதத்தில் எழுதிக் கொடு, கவனிக்கிறேன்" என்பார்.

நேரே அவ்வப் பெழுது காதால் கேட்டு, வாயால் பைஸல் செய்யும் வழக்கம் மாமாவிடம் கிடையாது. தம் காரியாலயத்தில் அனுஷ்டித்து அனுஷ்டித்துப் பழக்கமாகி விட்ட வழக்கத்தைத் தான் மாமா எங் களிடம் காண்பிக்கிறாரா, அல்லது இந்திய சர்க்கார் உத்தியோகத்துக்குத் தான் எங்களை யெல்லாம் இப் படித் தயார் செய்கிறாரா என்பது தெரிய வில்லை.

சர்க்காருக்கு உள்ளது போலவே இவருக்கும் ஒரு 'ஹோம் டிபார்ட்மெண்ட்' உண்டு. இந்த உள்நாட்டு இலாகாவுக்கு மந்திரி என் மாமிதான். வீட்டு விஷயமாக உள்ள எல்லாக் காரியங்களுக்கும் என் மாமி தான் பொறுப்பு, மாமியைத் தான் கேட்க வேண்டும். மாமாவைக் கேட்டால், "எனக்குத் தெரியாது; ஹோம் டிபார்ட்மெண்டைத் தான்

கேட்க வேண்டும்" என்று சொல்லி விடுவார்.

தங்கள் தினசரி காரியங்களை மணிக் கணக்காக ஒழுங்கு படுத்திக் கொண்டவர்களில் என் மாமாவை மிஞ்சக் கூடியவர்கள் யாராவது இருக்கிறார்களா என்பது சந்தேகந்தான். காலையில் எழுந்திருப்பது, காப்பி சாப்பிடுவது, பூஜை அறைக்குள் நுழைவது, அதை விட்டு வெளியில் வருவது, சாப்பிட உட்காருவது, இலையை விட்டு எழுந்திருப்பது, 'டிரஸ்ஸிங் ரூ'முக்குள் நுழைவது, ஆபீசுக்குப் போவது, ஆபீஸிலிருந்து திரும்புவது, எல்லாம் மணிக் கணக்காக இருக்கும்.

இதனால் என்ன ஆகிவிட்டது என்றால், பக்கத்து வீட்டுக் காரர்கள், அதிலும் குறிப்பாக இந்த அடுத்த வீட்டு அண்ணாசாமி அய்யர் வீட்டில் உள்ளவர்கள், மணி தெரிய வேண்டுமானால், குடு குடு என்று மாமா வீட்டுக்கு வருவார்கள். வந்தால் வீட்டு ஹாலில் மாட்டப்பட்டிருக்கும் கடியாரத்தைக் கூடப் பார்க்கமாட்டார்கள். அது சரியான மணி காட்டும் என்ற நம்பிக்கை அவர்களுக்குக் கிடையாது. அதற்குப் பதில் எங்கள் மாமா என்ன பண்ணிக் கொண்டிருக்கிறார் என்று விசாரிப்பார்கள். அல்லது ஜன்னல் வழியாக அவர் என்ன பண்ணிக் கொண்டிருக்கிறார் என்று எட்டிப் பார்ப்பார்கள்.

காப்பி சாப்பிடுகிறாரா, சரி, மணி 7-15; பத்திரிகையை மூடி வைக்கிறாரா, சரி, மணி 8-30;

பூஜை அறைக்குள் நுழைகிறாரா, சரி மணி 9 - 15 என்று இப்படிக் கணக்குப் போட்டுக்கொள்வார்கள். நாங்கள் இங்கு இருக்கும் வரை பக்கத்து வீட்டுக்காரர்கள் கடியாரம் வாங்கப் போவதில்லை என்பது நிச்சயம்!

மாமாவுக்கு ஜோதிஷத்தில் அபார நம்பிக்கை. யாராவது சற்று ஜோதிஷம் தெரிந்தவர்கள் வந்து விட்டால் போதும், உடனே தம் ஜாதகத்தை அவர்களுடன் ஆராய ஆரம்பித்து விடுவார். உடனே குரு சனியைப் பார்ப்பான், சனி புதனைப் பார்ப்பான், புதன் லக்கினத்தைப் பார்ப்பான், லக்கினம் மாமாவைப் பார்க்கும், மாமா சிநேகிதரைப் பார்ப்பார், சிநேகிதர் என்னைப் பார்ப்பார், நான் ஆகாயத்தைப் பார்ப்பேன்!

யாரோ ஒரு ஜோஸியன் அவருக்கு அவருடைய 45-வது வயதில் 'ஸர்' பட்டம் கிடைக்கும் என்று சொல்லி விட்டுப் போய் விட்டான். பாவம், 50-வது வயது பிறந்தும் இன்னும் ஸர் பட்டம் வரவில்லையே என்று அவருக்குக் கவலை. மாமியைப் பார்த்து, "என் ஜாதக ரீதிப்படி எனக்கு 'ஸர்' பட்டம் கிடைக்கணும்னு இருக்கு. ஆனால் உன் ஜாதகப்படி நீ லேடி ஆகணும்னு இருக்கோ, இல்லையோ!" என்று அடிக்கடி குறைப் படுவார்.

சாப்பாடு விஷயத்தில் மாமா மிகவும் கண்டிப்பு; நிறுத்துத்தான் சாப்பிடுவார். சிறைச் சாலைக் கைதிகள் விஷயமாகக் கூட இத்தனை கண்டிப்பு

அனுஷ்டிக்கப் படுகிறதா என்பது சந்தேகம். பிடித்தமா யிருந்தால் நிறையச் சாப்பிடுவது, பிடிக்கா விட்டால் குறைத்துச் சாப்பிடுவது என்ற வழக்கம் அவரிடம் கிடையாது. வீட்டில் யார் வந்தாலும் சரி, குறிப்பிட்ட மணிக்குத்தான் சாப்பாடு கிடைக்கும்.

சாப்பாடு சமயத்துக்கு முன்னர் அவர்கள் ரயிலுக்குப் போக வேண்டி யிருந்தால், அவர்களுக்கு ஹோட்டலி லிருந்து சாப்பாடு வரவழைத்துப் போடச் சொல்லுவாரே யொழிய, சமையற் காரனை அவசரமாகச் சமைக்கச் சொல்லி, தாமும், அவர்களுடன் உட்கார மாட்டார். தம் மூத்த பெண்ணுக்குக் கல்யாணமான சமயத்தில், சம்பந்திப் பேர்கள் ரயிலுக்குப் புறப்பட வேண்டியிருந்ததில் அவர்களுக்குப் பக்கத்து ஹோட்டலிலிருந்து தான் சாப்பாடு வரவழைத்துப் போட்டார்! இதைக் கண்டு கோபித்துக் கொண்டு போன சம்பந்திகள் அப்புறம் மாமா வீட்டுப் பக்கம் திரும்பவே யில்லை!

மாமா பூஜை, கீஜை யென்று ஏதோ வைத்துக் கொண்டிருக்கிறாரே யொழிய, தத்துவ விஷயமாகத் தம் மூளையைக் குழப்பிக் கொள்வது கிடையாது. பிரிட்டிஷ் ராஜாங்கம் எப்படி அமைக்கப் பட்டிருக்கிறதோ, அதே மாதிரிதான் கடவுளின் ராஜாங்கமும் இருக்கிறது என்பது அவர் நம்பிக்கை. எப்படி 30 வருஷ காலம் ஊழியம் புரிந்த பிறகு சர்க்காரில் பென்ஷன் கொடுக்

கிறார்களோ, அதைப் போலவே கடவுளும் கொடுப்பார் என்பது அவர் நம்பிக்கை. எப்படி மேலதிகாரிகளைப் புகழ்ந்து பேசினால் அவர்கள் சந்தோஷப் பட்டு பிரமோஷன் கொடுப்பார்களோ அதைப் போலவே, கடவுளும் புகழ்ச்சிக்கு வசப்படுகிறார் என்பது அவருடைய திடமான எண்ணம்.

அடடா! மாமா பூஜை அறைக்குள் நுழைந்து விட்டாரா! அப்படியானால் மணி 9-15 ஆகி விட்டது, நானும் ஆபீசுக்குப் போகத் தயாராக வேண்டியது தான்!

# நடராஜய்யர்

இவ் வருஷம் முதல் தேதி பத்திரிகை வந்ததும், நான் அவசரம், அவசரமாகப் பத்திரிகையைப் பிரித்தேன். புது வருஷப் பட்டங்கள் ஜாபிதாவை மேலிருந்து கீழ் ஒரு தடவை பார்த்தேன். என்ன ஏமாற்றம்! பெயரைக் காணேம்! கட்டாயம் ஒரு திவான் பகதூராவது வந்திருக்கும் என்று நினைத்தோம், பெயரையே காணேமே என்று திகில் ஏற்பட்டது. ஜாபிதாவைத் திரும்பவும் ஒரு தடவை மேலிருந்து கீழ் படித்துப் பார்த்தேன். ஊஹூம், பெயரைக் காணவில்லை.

இந்த சமயம் நான் பள்ளிக்கூடத்தில் இருந்த காலையில் எங்கள் கணக்கு வாத்தியார் அடிக்கடி சொல்லும் ஒரு புத்திமதி ஞாபகத்துக்கு வந்தது. கூட்டல் கணக்கு சரியாக இருக்கிறதா என்று பார்ப்பதற்கு மேலிருந்து கீழ் கூட்டிப் பார்த்தால் மட்டும் போதாது, கீழிருந்து மேலும் கூட்டிப் பார்க்க வேண்டும் என்று அவர் அடிக்கடி சொல்வார். இதன் பயனுக அப்பொழுது எனக்கு கூட்டல் சரியாக இருக்கிறதா என்று கண்டு பிடிக்க முடியா விட்டாலும் ஒரே கணக்குக்கு இரண்டு விடைகள் கிடைக்கும்! இதுவும் ஒரு லாபம் தான் அல்லவா?

இப்பொழுது இதே ரீதியில், கீழிருந்து மேல் படித்துப் பார்த்தாலாவது ஒரு திவான் பகதூர் கிடைக்காதா என்று பார்த்தேன். ஊம், அப்பொழுதும் பெயரைக் காணவில்லை.

........என்ன ? என்ன....என்ன கேட்கிறீர்கள் ? திவான்பகதூர் பட்டம் கிடைக்கும்படி நான் அப்படி யாருக்கு டின்னர் பார்ட்டி கொடுத்தேன், அல்லது நிறையக் கள்ளுக் கடைகள் ஏலம் எடுத்து சர்க்காருக்கு வரி செலுத்தினேன் என்று கேட்கிறீர்கள் ?

அட ஈச்வரா ! திவான் பகதூர் பட்டம் எனக்கில்லை ஐயா ! என் நண்பர் நடராஜய்யர் இருக்கிறாரே, அவருக்கல்லவா கிடைத்திருக்கிறதா என்று பார்த்தேன்.

அப்படி திவான் பகதூர் பட்டம் கிடைக்கும்படி அவர் என்ன பண்ணி விட்டார் என்று நீங்கள் கேட்கலாம். ஆனால் ஆசாமியை அறிமுகப் படுத்தினால் திவான் பகதூர் பட்டம் இவருக்குக் கிடைக்காமல் வேறு யாருக்குக் கிடைத்து என்ன பயன் என்று நீங்களே கேட்பீர்கள்.

இப்பவும் பிரிட்டிஷார் நமக்கு சுயராஜ்யம் கொடுக்க மறுப்பதற்கு என்ன காரணம் கூறுகிறார்கள் ? ஹிந்துக்களும், முஸ்லிம்களும் ஒத்துப் போகவில்லை என்கிறார்கள். சரி, அவர்கள் கூறும் இரண்டாவது காரணம் என்ன ? ஒன்றுமில்லை. ஏனெனில் இரண்டாவது காரணமே அவர்கள்

இன்னும் கண்டு பிடிக்க வில்லை. பாவம், இந்த ஒரு காரணத்தைத் தான், மாற்றி மாற்றி, திருப்பித் திருப்பி, எழுவாய், பயனிலை, செயப்படு பொருள் இம் மூன்றையும், எப்படி எப்படி யெல்லாம் மாற்றி அமைக்க முடியுமோ, அப்படி யெல்லாம் மாற்றி அமைத்துச் சொல்ல வேண்டி யிருக்கிறது.

இந்த சமயத்தில், அவர்கள் நமக்கு சுயராஜ்யம் கொடுக்காததற்கு ஒரு காரணம் அல்ல, இரண்டு காரணங்கள் அல்ல, லட்சம் காரணங்கள் ஒருவர் தெரிந்து வைத்திருக்கிறார் என்றால் பிரிட்டிஷ் சர்க்கார் அவருக்கு என்ன தான் கொடுக்க மாட்டார்கள் ?

ஆகவே தான் என் நண்பர் நடராஜய்யருக்குக் குறைந்த பட்சம் ஒரு திவான் பகதூர் பட்டமாவது கிடைக்கும் என்று நான் எதிர் பார்த்தேன்.

நண்பர் நடராஜ அய்யருடன் ஒரு அரை மணி நேரம் பேசிக் கொண்டிருந்தால் போதும், நமக்கு சுயராஜ்யம் கிடைக்காததற்கு குறைந்த பட்சம் ஆயிரம் காரணங்களாவது கூறி விடுவார்.

அன்றொரு நாள் பாருங்கள், நடராஜய்யர் என்னைத் தம் வீட்டுக்குச் சாப்பிட அழைத்திருந்தார். காலையில் காப்பிக்கே வந்து விட வேண்டும் என்று சொல்லியிருந்த படியால், நான் காப்பி சமயத்துக்கே போய்ச் சேர்ந்தேன். ஆனால் நான் போய்ச் சேர்ந்த சமயம் சரியான சமயம் இல்லை

என்று பட்டது. தாங்கள் மிகவும் கோபத்தில் இருப்பது போல் காட்டிக் கொள்வதற்காக சினி மாக்களில் கதா நாயகர்கள் குறுக்கும், நெடுக்கும் நடப்பார்கள் அல்லவா, அதைப் போல நடரா ஜய்யர் நடந்து கொண்டிருந்தார்.

"என்ன! ரொம்ப கோபத்தில் இருக்கிறுப் போல் தோன்றுகிறதே" என்று பயந்து கொண்டே கேட்டேன்.

"பின் என்ன ஸார்! ஒரு மனுஷன் சரியாக ஏழு மணிக்கு வாடா என்ருல் ஏழு மணிக்கு வரக் கூடாதோ? மணி ஏழு அடித்து மூன்று நிமிஷம் ஆகப் போகிறது, இன்னும் ஆளைக் காணேம்! இந்த ஸ்திதியில் நமக்கு எப்படி ஸார் சுயராஜ்யம் கிடைக்கும்? பிரமாதமாக இங்கிலீஷ்காரன் சுய ராஜ்யம் கொடுக்கவில்லை என்று மாத்திரம் குற் றம் சொல்லப் புறப்பட்டு விடுகிருேமே?" என்று பொறிந்தார்.

அப்படி இங்கிலீஷ்காரன் நமக்கு சுயராஜ்யம் கொடுப்பதற்குத் தடையாக நின்ற பாவி யார் என்று நான் யோசித்துக் கொண்டிருக்கையில் இவருக்கு வழக்கமாக வரும் நாவிதன் பய பக்தி யுடன் அங்கு வந்து நின்ருன். அவனைக் கண்டதும் நடராஜய்யர் புலியைப் போல் அவன் மேல் பாய்ந்தார். நடராஜய்யர் அவன் மீது பாய்ந்த தினுசிலிருந்து இங்கிலீஷ்காரன் நமக்கு சுயராஜ்யம்

கொடுக்க முடியாதபடி குறுக்கே நின்றவன் அந்த நாவிதன் தான் என்று தெரிந்து கொண்டேன்.

"என்னடா, உன்னை எத்தனை மணிக்கு வரச் சொன்னேன், நீ எத்தனை மணிக்கு வந்திருக்கிறாய்? ஏழு மணிக்கு வாடா என்றால் சரியாக ஏழு மணிக்கு வரக் கூடாது? (என்னைப் பார்த்து) நீங்களே பாருங்கள் ஸார்? நம்மவர்களே இப்படித்தான். ஒத்தனுக்காவது பங்சுவாலிடி கிடையாது. எட்டு மணிக்கு வாடா என்று சொன்னால் பத்து மணிக்குத் தான் வருவான். இந்த ரீதியில் நமக்கு எப்படி ஸார் சுயராஜ்யம் கிடைக்கும்? இங்கிலீஷ்காரன் சுய ராஜ்யம் கொடுக்க வில்லை என்று மாத்திரம் பிரமாதமாக அவன் மீது குற்றம் சொல்லப் புறப் பட்டு விடுகிறோமே!" என்று சீறினார்.

இப்படிச் சீறிவிட்டு, நடராஜய்யர் பெட்டிப் பாம்பு போல் நாவிதனிடம் தலை குனிந்தது தான் தாமதம், இங்கிலீஷ்காரன் நமக்கு சுயராஜ்யம் கொடுக்க குறுக்கே நின்றது நாவிதன் மாத்திரமல்ல இன்னொரு ஆசாமியும் இருக்கிறான் என்று தெரிந்து கொண்டேன். அது வேறு யாரும் இல்லை. சாக்ஷாத் நடராஜய்யருடை பிள்ளை தான்.

என்னைக் கண்டதும் பையன் ஓடிப் போய் காப்பி வாங்கிக் கொண்டு வந்தான். வரும் பொழுதே பாதிக் காப்பியை மேலே அபிஷேகம் செய்து கொண்டு வந்து சேர்ந்தான். ஆனால் அவனைக் குற்றம் சொல்லி என்ன பிரயோசனம்!

பெரியவனுன நானே மீதிப் பாதியை என் அங்கவஸ்திரத்தின் மீது கொட்டிக் கொண்டு விட்டேனே!

காப்பிக் கொட்டை மிக தூக்கி விற்கும் இந்த சமயத்தில் இப்படிக் காப்பியை வீணுக்கலாமா என்று நீங்கள் கேட்கலாம். ஆனுல் நீங்கள் அந்த காப்பி டம்ளரைக் கையில் எடுத்தீர்களானுல், பாதிக் காப்பி அல்ல, முழுக் காப்பியையும் உங்கள் மீது கொட்டிக் கொண்டிருப்பீர்கள். காப்பி டம்ளர் அத்தனை சுட்டது!

இது தெரியாமல் நடராஜய்யர் தம் பையனைக் கோபித்துக் கொள்ள ஆரம்பித்து விட்டார்.

"என்னடா! ஒரு டம்ளர் காப்பியைக் கொட்டாமல் கொண்டு வரத் துப்பு இல்லை? (என்னைப் பார்த்து) இந்தக் காலத்துப் பிள்ளைகளே சுத்த மோசம் ஸார்! ஒரு காரியத்துக்கு லாயக் கில்லை. இப்பேர்ப்பட்ட பசங்களை நம்பி இங்கிலீஷ்காரன் சுயராஜ்யம் கொடுத்து விட்டுப் போக வேண்டுமாம்" என்று ஆரம்பித்தார்.

பையன் இது பொறுக்காமல், அம்மா தான் காப்பியைச் சுடச்சுடக் கொடுத்து விட்டாள் என்று புகார் செய்தான். அவ்வளவு தான். இங்கிலீஷ்காரன் நமக்கு இன்னும் சுயராஜ்யம் கொடுக்காததற்கு அம்மாவும் ஒரு காரணமாகி விட்டாள்!

"இந்தக் காலத்துப் பொம்மனுட்டிகளே இப்படித்தான் ஸார்! ஒரு காரியம் சரியாகச்

செய்யத் தெரியாது. புருஷனாவது கண்டிக்கிறானே என்றால் கிடையாது. இந்த யோக்கியதையில், இங்கிலீஷ்காரன் நமக்கு சுயராஜ்யம் கொடுக்க வில்லையாம்! இப்படிப்பட்ட ஜனங்களை நம்பி எவன்தான் ஸார், எப்படித் தான் சுயராஜ்யம் கொடுப்பான் ?" என்று ஆரம்பித்தார்.

அவர் இது விஷயத்தைச் சிரக்கம்பமும், கரக் கம்பமும் செய்து கொண்டு பேசிய படியால் நாவி தனின் கத்தி சற்று அவர் முகத்தில் பட்டுவிட்டது. வந்து விட்டது கோபம் அவருக்கு! "நம்மூர் பார்பர் களைப் பாருங்கள் ஸார்" என்று ஆரம்பித்துக் கொண்டு, நம் ஜனங்கள் எல்லாரையும் பார்க்கச் சொன்னார். பிறகு அவர்கள் ஒரு காரியத்தைக் கூட ஒழுங்காகச் செய்வதில்லை என்று எடுத்துக் காட்டினார். பிறகு இப்படிப்பட்ட ஜனங்கள் எப்படி சுயராஜ்யத்திற்கு ஆசைப் படலாம் என்று ஒரு கேள்வியைப் போட்டார்.

அன்று நான் சாப்பிட்டு விட்டு, வீட்டுக்குப் போவதற்குள், நமக்கு சுயராஜ்யம் கொடுக்கத் தடையாக நின்றவர்கள், ஒரு லட்சம் பேரைப்பற்றி யாவது கேள்விப் பட்டிருப்பேன்.

சகதர்மிணி துகையல் சரியாக அரைக்க வில்லையா, சுயராஜ்யம் எப்படிக் கிடைக்கும், பூனை பாலைக் குடித்து விட்டதா, சுயராஜ்யம் எப்படிக் கிடைக்கும், பையனுக்குச் சாதத்தை இரைக்காமல் சாப்பிடத் தெரிய வில்லையா, சுயராஜ்யம் எப்படிக்

கிடைக்கும், வீட்டுத் 'தாயி' பாத்திரங்களைச் சரியாகத் தேய்க்க வில்லையா, சுயராஜ்யம் எப்படிக் கிடைக்கும், என்று இந்த மாதிரி நடராஜய்யர் அடுக்கிக் கொண்டே போனர்!

இப்படியும் ஒரு பிரகிருதியிடம் அகப்பட்டுக் கொள்வோமா என்று எனக்கு ஆகி விட்டது! கடைசியில் எப்படியோ தப்பிப் பிழைத்து வீடு போய்ச் சேர்ந்தேன் என்று வைத்துக் கொள் ளுங்களேன்!

இப்பொழுது நீங்களே சொல்லுங்கள். இத் தகைய பிரகிருதிக்குத் திவான் பகதூர் பட்டம் கிடைக்காமல் வேறு யாருக்குக் கிடைத்து என்ன பயன்?

# இவரைத் தெரியுமோ !

இவரைத் தெரியுமோ உங்களுக்கு ?....என்ன, தெரியாதா ? பார்த்ததே இல்லையா ?....என்ன இப்படிச் சொல்லுகிறீர்கள் ? இவரைப் போன்ற எத்தனையோ பிரகிருதிகளை நாம் தினமும் தான் பார்க்கிறோமே ? சில சமயங்களில் நாமே இத்தகைய பிரகிருதிகளைப்போல் நடந்து கொண்டு மிருக்கிறோமே ?

ஆம், " இதுவும் ஒரு பிரகிருதி " ஜாபிதாவில் சேர்க்க வேண்டிய ஆசாமிதான். இத்தனை நாளும் எனக்கு டிமிக்கிக் கொடுத்து விட்டு, கண்ணில் படாமலேயே இருந்து விட்டார். இன்றைக்கு என்னிடம் 'வபை' யாக அகப்பட்டுக் கொண்டு........ இல்லை, இல்லை, இன்னும் அகப்பட வில்லை. என்னைப் பார்த்துவிட்டு அதோ ஓடுகிறாரே? ஏன் என்னைக் கண்டு அப்படி ஓடுகிறார்? இருந்தாலும் கவலையில்லை. இதோ ஒரு நொடியில் அவரைப் பிடித்துக் கொண்டு வந்து விடுகிறேன். இந்தக் கடன் காரர்களைக் கண்டு ஓடி, ஓடி எனக்கு ஓட்டத்தில் நல்ல பயிற்சி ஏற்பட்டு விட்டது. (என்னுடைய அகராதியில் கடன் கொடுத்தவர் களைத் தான் கடன்காரர்கள் என்கிறேன்.)

அடே! அவருக்கு என்னைவிட அதிகமாகக்

கடன்காரர்கள் இருக்கிறாப்போல் தோன்றுகிறதே! இல்லாவிடில் அத்தனை வேகமாக ஓட் அவருக்கு வேறு எங்கே பயிற்சி கிடைத்திருக்கப் போகிறது?

இருந்தாலும் கவலைப் படாதீர்கள். இதோ ஒரு நொடியில் அவரைப் பிடித்துக் கொண்டு வந்து விடுகிறேன்........ஆ! இதோ பிடித்துவிட்டேன்.

"என்ன ஐயா! என்னைக் கண்டதும் அப்படி ஓட ஆரம்பித்து விட்டீர்?"

"இல்லையே! நான் ஒரு அவசர காரியமாகப் போய்க் கொண்டிருக்கிறேன்."

"எங்கேயோ?"

"அடுத்த தெருவில் நம்ப குப்பு இருக்கிறானே இல்லையோ, அவனைப் பார்ப்பதற்காகத்தான்!"

"எந்தக் குப்பு? வருமான வரி ஆபீஸ் குமாஸ்தா குப்புவா?"

"சாக்ஷாத் அவனேதான்."

"கையிலே ஏதோ கறிகாய் எல்லாம் வாங்கிக் கொண்டு போகிறீர்களே, அவனுக்கா?"

"ஆமாம், அவனுக்கேதான்."

"அப்படிக் குப்புவுக்குக் கறிகாய் வாங்கிக் கொண்டுபோகும்படி உமக்கும் எனக்கும் வருமான வரி ஆபீஸில் என்ன வேலை ஐயா இருக்கிறது? நமக்கும் வருமானத்துக்கும் தான் ஸ்நானப் பிராப்திகூடக் கிடையாதே!"

"இல்லை, எனக்கு வருமான வரி ஆபீஸில் கொஞ்சம் வேலை இருக்கிறது. ஊரிலிருந்து தோ

சைக்காகப் புழுங்கல் அரிசி வரவழைத்தால்தானுச்சு என்று என் மனைவி ஒற்றைக்காலில் நிற்கிருள்."

"அதற்கு வருமான வரி குப்புவைப் பிடித்து என்ன ஐயா பிரயோசனம்?"

"உமக்குத் தெரிந்தது அவ்வளவுதான். நம் ஊர் வருமான வரி அதிகாரியும், ரேஷன் ஆபீஸில் குமாஸ்தா வேலை பார்க்கும் குஞ்சித பாதமும், ஒன்றுவிட்ட அத்தான் அம்மாஞ்சி என்று உமக்கு எங்கே தெரியப் போகிறது?"

"அவர்கள் ஒன்று விட்ட அத்தான் அம்மாஞ்சியாக இருந்தால் உமக்கென்ன?"

"சரியாய்ப் போச்சு! என்ன ஐயா அசடாக இருக்கிறீர்? நிஜமாகவே அசடுதானு, அல்லது அசடு போல் வேஷம் போடுகிறீரா?"

"நீர் சொல்வது எனக்கு ஒன்றும் விளங்கவில்லையே! வருமான வரி அதிகாரியும், ரேஷன் ஆபீஸ் குமாஸ்தாவும் ஒன்றுவிட்ட அத்தான் அம்மாஞ்சியாக இருந்தால் உமக்கு என்ன ஐயா?"

"என்ன இப்படிக் கேட்கிறீர்? ஒன்றுவிட்ட அத்தான் அம்மாஞ்சியாக இருந்தால் ஒருவருக் கொருவர் பேசிக் கொள்ள மாட்டார்களா? ஒன்று விட்ட அத்தானை வருமான வரி அதிகாரி சொன்னதை ஒன்று விட்ட அம்மாஞ்சியான ரேஷன் ஆபீஸ் குமாஸ்தா கேட்கமாட்டாரா?"

"அதற்காக?"

"அதற்காகத்தான் இப்பொழுது வருமான

வரி ஆபீஸ் குப்புவைக் காக்கா பிடித்துக் கொண்டிருக்கிறேன். குப்பு என்னைப் பற்றித் தங்கள் ஆபீஸ் ஹெட் கிளார்க்கிடம் சொல்லுவதாக வாக்களித்திருக்கிறார். ஹெட் கிளார்க் மேல் அதிகாரிக்கு மிகவும் வேண்டியவராதலால் அவர் என்ன சொன்னாலும் மேல் அதிகாரி கேட்பார். மேல் அதிகாரி உடனே என் விஷயத்தைப் பற்றித் தம் ஒன்று விட்ட அம்மாஞ்சியான குஞ்சித பாதத்திடம் சொல்வார். குஞ்சிதபாதம் தம் மேல் அதிகாரியான ரேஷன் ஆபீஸரிடம் சொல்வார். ரேஷன் ஆபீஸர் ஊரிலிருந்து புழுங்கல் அரிசி வரவழைப்பதற்கு வேண்டிய அனுமதி கொடுப்பார்" என்று நண்பர் தம் வேலை முறையை விளக்கினார்.

இந்தப் பிரகிருதியே எப்பொழுதும் இப்படித்தான். யாரை எந்தக் காரியத்துக்குப் போய்ப் பார்க்க வேண்டி யிருந்தாலும் சரி, நேரே போய்ப் பார்க்க மாட்டார். நேரே போய்ப் பார்த்தால், யாரும், எந்தக் காரியமும் செய்து கொடுக்க மாட்டார்கள். யாரையாவது தெரிந்தவர்களை விட்டுச் சொல்லச் சொன்னால்தான் காரியம் நடக்கும் என்பது அவர் எண்ணம்.

கலாசாலை நாட்களிலிருந்தே அவர் அப்படித்தான். கலாசாலை ஹாஸ்டலில் நானும் அவரும் சேர்ந்து இருந்த காலையில் தகப்பனாரிடமிருந்து ஏதாவது அதிகப்படி பணம் வேண்டியிருந்தது என்றால் நேரே தகப்பனாருக்கு எழுத மாட்டார்.

தகப்பனுருடைய நண்பர், அந்த நண்பருக்கு நண்பர், இந்த நண்பருக்கு ஒரு அத்தான், அந்த அத்தானுக்கு ஒரு அம்மாஞ்சி என்று கண்டு பிடித்து, அந்த அம்மாஞ்சியிடம் தனக்குத் தகப்பனாரிடமிருந்து பணம் வந்தால் தேவலே என்று சொல்வார். இது மெள்ள, மெள்ள அம்மாஞ்சியிடமிருந்து அத்தான், அத்தானிடமிருந்து நண்பர், நண்பரிடமிருந்து இன்னொரு நண்பர் என்று இப்படிப் பரிமாறிக் கடைசியில் தகப்பனுருக்குப் போய்ச் சேரும். கடைசியில் தகப்பனரும் பணம் அனுப்பி வைப்பார்.

தகப்பனரிடமிருந்து பணம் பெறுவதற்குத் தான் இப்படியென்றால், மாமனரிடமிருந்து சீர் வரிசைகள் பெற்றுக் கொள்வதற்கும் இப்படித் தான். மாமனரிடமிருந்து ஏதாவது வரும்படி எதிர் பார்த்தால் மனைவியை முடுக்கினல் போதாதோ? மனைவி தன்னைப்போல் தன் தகப்பனரை முடுக்கு வாள்; நமக்குக் காரியம் ஆகும்.

ஆனல் இந்த நண்பர் இப்படி யெல்லாம் நேரே மூக்கைத் தொட்டு விடமாட்டார். வளைந்து வளைந்து சென்றால் தான் அவருக்குத் திருப்தி.

உத்தியோக முயற்சி செய்வதற்கு இப்படித் தான் யார் யாரையோ பார்த்தார். நானெல்லாம் நேரிடையாகத் துரையையே பார்த்து விடுவது என்று துரை வீட்டில் துரையின் நாயைப் பார்த்துக் கொண்டு பழியாய்க் கிடந்த காலத்தில் எல்லாம்

இவர் முன் பின் சம்பந்தம் இல்லாத யார் யாரையோ பார்த்துக் கொண்டிருப்பார்.

எண்ணெய்க் கம்பெனியில் வேலைக்கு முயற்சி செய்வதற்கு இரும்புக் கம்பெனி குமாஸ்தா யாரை யாவது சுற்றிச் சுற்றி வந்து கொண்டிருப்பார்.

என்னடா, இப்படி இருக்கிறாரே என்று எங் களுக் கெல்லாம் கூட ஆச்சரியமாக இருக்கும். ஆனால் கடைசியில் காரியத்தில் ஜயிப்பது அவர் தானே அல்லாது நாங்கள் அல்ல.

இந்த மாதிரியே சுற்றிச் சுற்றி வந்து, இந்தப் பிரகிருதிக்கு ஒரு அலாதித் திறமை ஏற்பட்டு விட்டது. முன்பின் தெரியாத யாராவது இரண்டு பேருக்கு நடுவில் சங்கிலி கோத்தாற்போல் எப்ப டியாவது உறவு கண்டு பிடித்து விடுவார். கோகு லாஷ்டமிக்கும், குலாம் காதருக்கும் என்ன சம்பந்தம் என்ற வசனத்தைக் கூட இவரிடம் சொல்லக்கூடாது. கட்டாயம் எப்படியாவது சம் பந்தம் கண்டு பிடித்து விடுவார்.

ஆகவே யாருக்காவது எந்தப் பெரிய மனிதர் களைப் பிடிக்க வேண்டி யிருந்தாலும் சரி, இவரைப் பிடித்துக் கொள்வது நல்ல உபாயமாகும். இவரைப் பிடித்துக் கொண்டே சென்றால், நாளடைவில் பெரிய மனிதரைப் போய்ச் சேர்ந்து விடலாம்.

# தாஸானு தாஸர்

வெகு காலமாகப் பார்க்காத என் நண்பர் கணபதி அவர்களை நேற்றுக் காலையில் சந்தித்ததும், சடாரென்று ஒரு எண்ணம் தோன்றி என்னைப் பெரிதும் வாட்டியது. அடாடா! இத்தனை நல்ல பிரகிருதியை இதுவும் ஒரு பிரகிருதி ஜாபிதாவில் சேர்க்காமல் விட்டு விட்டோமே என்று மிகவும் வருத்தப் பட்டேன்.

ஆனால் அவர் இப்படி இன்றுவரை விடுபட்டுப் போனதற்குக் காரணம் நான் அல்ல; அவரே தான்!

நாம் ஒருவருடன் எவ்வளவுக் கெவ்வளவு அதிகமாகப் பழகுகிறோமோ, அவ்வளவுக் கவ்வளவு அவர்கள் ஞாபகம் அடிக்கடி வந்துகொண்டிருக்கும் என்பது உலக இயற்கை. ஆனால் நண்பர் கணபதி மாத்திரம் இந்த இயற்கைக்கு விதி விலக்கு. நாம் அவருடன் நெருங்கிப் பழக பழக அவர் ஞாபகம் மறந்து கொண்டே போகும். அதற்குப் பதில் இன்னொருவர் ஞாபகம் தான் நமக்கு வந்து கொண்டிருக்கும்.

அந்த இன்னொருவர் யார் என்று தெரிந்து கொள்ள வேண்டுமா? இதோ கணபதியே வந்து விட்டார். அவரிடம் நான் கொஞ்ச நேரம் பேசு

வதற்குள் நீங்களே தெரிந்து கொண்டு விடுவீர்கள், அந்த இன்னொருவர் யார் என்று.

"அட, கணபதியா எங்கே ஸார், உங்களைக் கண்ணிலேயே காணோமே?"

"காணாமல் என்ன ஸார்? நீங்கள் தான் நம்மைக் கவனிப்பதே இல்லை. நேற்றுக் கூட நீங்கள் இந்த வழியாகப் போனதாக என் மனைவி சொன்னாள். இவ்வளவு தூரம் வந்தவர் கொஞ்சம் தயவு வைத்து என்னை எட்டிப் பார்த்து விட்டுப் போகக் கூடாதா?

"என்ன, நீங்கள் இங்கேயே இருக்கிறீர்கள்? எழும்பூரில் அல்லவா இருக்கிறீர்கள் என்று நினைத்துக் கொண்டிருக்கிறேன்!"

"அந்த வீட்டைக் காலி பண்ணி விட்டேன், ஸார்! வீடு பிடிக்கவில்லை என்று என் மனைவி சொன்னாள். ஆகவே அந்த வீட்டைக் காலி பண்ணி விட்டு இங்கே மயிலாப்பூருக்குக் குடி வந்து விட்டேன்.

"அதுதானே பார்த்தேன். என்னடா, ஆசாமியைக் கண்ணிலேயே காணோமே என்று நினைத்தேன். ஆமாம், அது இருக்கட்டும், இது என்ன கட்டுப் புஸ்தகம் சைக்கிளில் வைத்துக் கட்டிக் கொண்டு போகிறீர்களே, ஏதாவது குறுக்குப் பரீட்சைக்கு மும்முரமாகப் படிக்கிறீர்களோ!"

"பரீட்சையாவது, கிரீட்சையாவது! இந்தப் புஸ்தகமெல்லாம் எனக்கு இல்லை ஸார். எல்லாம்

என் மனைவிக்கு ஸார்! இதெல்லாம் அவள்தான் படிக்கிறாள். எனக்கு எங்கே ஒழியறது!"

"ஆமாம், உங்கள் கிட்டத்தான் மோட்டார் சைக்கிள் இருந்ததே, அதில் போகாமல் ஏன் இப்படி சைக்கிளில் போகிறீர்கள்?"

"அதுவா? அது எங்கேயோ பழைய சைக்கிள் அல்லவா வாங்கினேன்? அது தினம் ஒரு ரிப்பேர் ஆகிக் கொண்டிருந்தது. அதைப் பார்த்து விட்டு என் மனைவி அதை விற்று விடு என்றாள். விற்று விட்டேன்."

"அன்றைக்கு உங்களைச் சங்கீதக் கச்சேரியில் கூடப் பார்த்தேன். கண்டு பேசணும் என்று நினைத்தேன். ஆனால் அதற்குள் நீங்கள் கூட்டத்தில் மறைந்து விட்டீர்கள்....ஆமாம், ஏது திடீர் என்று சங்கீதத்தில் உங்களுக்கு இவ்வளவு பிரேமை? சங்கீதம் என்றால் தூக்கு என்ன விலை என்று கேட்கப் பட்டவர்களாச்சே நீங்கள்?"

"அச்சச்சோ! நான் எனக்காக கச்சேரிக்குப் போகவில்லை ஐயா! என் மனைவிக்குக் கச்சேரி என்றால் உயிர். அவள் போகணும் என்றாள். அதற்காக நானும் கூடப் போனேன். சரி, எனக்கு வாசக சாலைக்கு நாழியாகிறது. திரும்பி வந்ததும் என் மனைவி காத்துக் கொண்டிருப்பாள். அவளை அழைத்துக் கொண்டு நாடகத்துக்குப் போயாக வேண்டும். நாடகங்கள் என்றால் அவளுக்கு வெகு ஆசை."

இதோ கணபதி போய் விட்டார். இத்தனை நேரம் நான் அவருடன் பேசிக் கொண்டிருந்ததைக் கேட்டுக் கொண்டிருந்தீர்களே, அதிலிருந்தே நான் குறிப்பிட்ட இன்னொருவர் யார் என்று தெரிந்து கொண்டிருப்பீர்கள். ஆம், நீங்கள் யூகித்தது ரொம்ப சரி. அந்த இன்னொரு ஆசாமி அவர் மனைவிதான்.

இத்தனை நேரம் கணபதியுடன் பேசிக் கொண்டிருந்தோமே, அவரைப்பற்றி ஏதாவது தெரிந்து கொண்டோமா, பாருங்கள்! அவர் மனைவிக்கு எழும்பூர் வீடு பிடிக்கவில்லை, அவர் மனைவிக்கு புஸ்தகங்கள் என்றால் இஷ்டம், அவர் மனைவிக்கு சங்கீதக் கச்சேரிகள் என்றால் உயிர், அவர் மனைவிக்கு நாடகங்கள் என்றால் ஆசை என்று இப்படி அவர் மனைவியின் அபிலாஷைகளைப் பற்றியே தெரிந்து கொண்டோமேயொழிய, நண்பர் கணபதியைப் பற்றி ஒன்றும் தெரிந்து கொள்ளவில்லை.

நண்பர் கணபதியுடன் எவ்வளவு நேரம் பேசினாலும் அவரைப் பற்றி ஒன்றும் தெரிந்து கொள்ள முடியாது. அவர் மனைவியைப் பற்றித் தான் தெரிந்து கொள்வோம்.

நண்பர் கணபதியே இப்படித்தான். அவர் பேச்சு, செயல், எண்ணம் இவற்றைப் பார்க்கும் போது தமக்கு என்று அவர் தனி ஆசை, இஷ்டம், அபிப்பிராயம் ஏதாவது வைத்துக் கொண்டிருக்கிறாரா என்பதே சந்தேகந்தான். தமக்கென்று

ஒரு காரியமாவது செய்து கொள்கிறாரா என்றால், இருக்காது.

தினம் ஆபீசுக்குப் போகிறாரா? அதுவும் அவர் மனைவிக்காகத்தான்.

"எங்கப்பா எனக்கு வைத்து விட்டுப் போயிருக்கும் சொத்தை வைத்துக் கொண்டு நான் நாலு பேருக்கு வேலை கொடுக்கலாம் ஸார். இருந்தாலும் என் மனைவி, புருஷன் என்றால் உத்தியோகம் என்று ஒன்று இருந்தால் தான் கௌரவம் என்று வேலையை ஒப்புக் கொள்ளச் சொன்னாள். ஒப்புக் கொண்டு விட்டேன்" என்பார்.

தினம் சாயந்திரம் உலாவப் போகிறாரா? அதுவும் அவருக்காக அல்ல. தம் மனைவிக்காகத் தான். "சாயந்திரம் ஆபீஸிலிருந்து திரும்பியதும் எனக்கு நிம்மதியாக உட்கார வேண்டும் என்று தான் ஸார். ஆனால் என் மனைவிக்கு என்னமோ டிரஸ் பண்ணிக் கொண்டு உலாவப் போகவேண்டும் என்று. அதற்காக நானும் கூடப் போகிறேன்" என்பார்.

இந்த மாதிரி இவர் என்ன காரியம் பண்ணினாலும் சரி, தம் மனைவிக்காகத்தான் பண்ணுவார். இவர் சூட், டை முதலியன போட்டுக் கொள்வதும் மனைவிக்காகத்தான். அடிக்கடி சினிமாவுக்குப் போவதும் மனைவிக்காகத்தான். சங்கீத சபையில் அங்கத்தினராகச் சேர்ந்திருப்பதும் மனைவிக்காகத்

தான். ஊரிலுள்ள வாசக சாலைகளுக் கெல்லாம் பணம் கட்டி யிருப்பதும் மனைவிக்காகத்தான்.

**ப**ழைய காலத்தில் இந்த மாதிரி நடந்து கொள்ளுகிறவர்களைப் "பெண்டாட்டி தாஸர்கள்" என்று ஜனங்கள் பழிப்பார்கள். தாங்கள் மனைவிக்குத் தாஸானு தாஸர்களாக இருப்பது வெளியில் தெரியக் கூடாது என்று இந்த தாஸானு தாஸர்கள் என்னென்னமோ யுக்திகள் எல்லாம் கையாளுவார்கள். "நான் அடிக்கிறாப்போல் அடிக்கிறேன், நீ அழுறாப்போல் அழு" என்று மனைவியிடம் சொல்லி வைத்து அவள் சொன்ன காரியத்தையே தாங்கள் சொல்வது போல் வெளியில் நான்கு பேர் காதுக்குக் கேட்கும்படி சொல்வார்கள். (இந்தாரும், அடுத்த வீட்டு அண்ணாசாமி அய்யர்! வீணாக என்னோடு சண்டைக்கு வராதேயும். நான் உம்மைப் பற்றி ஒன்றும் சொல்லவில்லை. பொதுவாக உலகில் நடக்கும் விஷயங்களைத்தான் சொல்கிறேன்.)

ஆகவே பழைய காலத்திலும் நண்பர் கணபதியைப் போன்ற தாஸானு தாஸர்கள் இருக்கத்தான் செய்தார்கள். ஆனால் அவர்களுக்கும் நண்பர் கணபதிக்கும் உள்ள வித்தியாசம் இதுதான். அவர்கள் தாங்கள் தங்கள் மனைவியின் தாஸர்கள் என்பதை ஒப்புக் கொள்ள மாட்டார்கள். இவரோ தாம் ஒப்புக் கொள்வதோடு மட்டும் இல்லை, அதை ஒரு பெருமையாகவே சொல்லிக் கொள்வார்.

சம்பளத்தை யெல்லாம் அப்படியே மனைவியிடம் கொடுத்து விட்டு, தமக்கு ஒரு தம்படி வேண்டுமானாலும் மனைவியைத்தான் கேட்டு வாங்கிக் கொள்வார். இது விஷயத்தை கணபதி ஒப்புக் கொள்ளும் போது அவர் முகத்தைப் பார்க்க வேண்டுமே! என்ன ஆனந்தம்! என்ன முக மலர்ச்சி!

"நமக்கேன் ஸார், இந்தப் பணத்தண்டாவெல்லாம்! எல்லாம் என் மனைவிதான் ஸார் கவனித்துக் கொள்வாள். சம்பளத்தை வாங்க வேண்டியது. பேசாமல் அவள் கையில் கொண்டு வந்து கொடுத்து விட வேண்டியது. எதற்குப் பணம் வேண்டுமானாலும் அவளைக் கேட்டு வாங்கிக் கொள்ள வேண்டியது. சில பேர் இருக்கிறார்களே, 'எல்லாப் பணத்தையும் தாங்களே வைத்துக் கொண்டு, தாங்களே கூட்டல், கழித்தல், பெருக்கல், வகுத்தல் எல்லாம் செய்து கொண்டு திண்டாடிக் கொண்டு. அப்படி எல்லாம் நான் திண்டாடுகிற வழக்கமே கிடையாது ஸார்" என்று அவர் சொல்லும்போது, சந்தோஷத்தால் அவர் முப்பத்திரண்டு பற்களும் வெளியில் தெரியும்.

இன்னும் நாம் அவருடன் என்ன விஷயத்தைப் பற்றித்தான் பேசிக் கொண்டிருக்கட்டும், யுத்தத்தின் கஷ்ட நஷ்டங்களைப் பற்றித்தான் பேசிக் கொண்டிருக்கட்டும், தயிர் போண்டாவின் அருமை, பெருமைகளைப் பற்றித்தான் பேசிக் கொண்டிருக்

கட்டும், அதில் அவர் மனைவியையும், அந்த அம்மாளின் குணதிசயங்களும் வராமல் இருக்காது.

என்ன விஷயத்தைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தாலும், "நேற்று என் மனைவி ஒரு புஸ்தகம் வாசித்துக் கொண்டிருந்தாள். அதில் இந்த விஷயத்தைப் பற்றி ஒரு போலந்து ஆசிரியர் எழுதி யிருக்கிறாராம்" என்று அந்த போலந்து ஆசிரியர் எழுதி யிருப்பதைச் சொல்ல ஆரம்பித்தார்.

எந்த ஒரு விஷயத்தைப் பற்றியும் மேல் நாட்டு ஆசிரியர் யாராவது என்ன சொல்லி யிருக்கிறார் என்று தெரியவேண்டுமானால் இவரிடம் அந்த விஷயத்தைப் பிரஸ்தாபித்தால் போதும். உடனே தம் மனைவி அதைப்பற்றி என்ன சொன்னாள், அல்லது என்ன படித்திருக்கிறாள் என்னும் விஷயம் உடனே வெளிவந்து விடும்.

இப்படியாகத்தானே தனக்கென வாழாமல் தம் மனைவிக்காகவே வாழும் இந்தப் பிரகிருதியை கணவனாகப் படைத்த அந்த அம்மாளின் பாக்கியமே பாக்கியம்!